# களத்தில்

தர்மமும் - உண்மையும் எம்பக்கம் சார்ந்திருக்கின்றன. அதுவே எமது பலம். அதர்மமும் - பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கின்றன. அதுவே அவனின் பலவீனம். ஈற்றில் வெற்றிகொள்வது நாம். ஏனெனில் என்று மழியாத தர்மம் எமக்குப் பக்கபலமாக இருக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (21.05.1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (135) அன்பளிப்பு: 60 p

# ஓமந்தையில் உக்கிரமான சண்டை

## ◆ இராணுவத்திற்கு பலத்த இழப்பு ◆ இழப்புக்களை மறைக்க சிறிலங்கா பிரயத்தனம்

வவுனியாவிலிருந்து யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையைத் திறத்தல் எனும் சிறிலங்கா அரசின், மனித அவலத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டமிட்ட இராணுவ நடவடிக்கை 13ஆம் திகதி அதிகாலை பெரும் எடுப்புடன் வவுனியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிக மோசமான 'ஆட்டிலறி' மற்றும் வான் தாக்குதலை நடாத்திக் கொண்டு பெரும் தொகையான கனரக வாகனங்களின் துணையுடன் இந்தத் தரைநகர்வு தொடங்கப்பட்டது. 'வெற்றி நிச்சயம்' என்ற குறிமீட்டுப் பெயருடன் சுமார் இருபதினாயிரம் சிங்களப் படையினருடன் டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் தொடங்கிய இத் தரைநகர்வு முயற்சி, பல பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பாரிய எதிர்த் தாக்குதலை எதிர்கொண்டுள்ளது. ஓமந்தைப் பகுதியிலேயே இராணுவத்தினர் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ளனர். இதில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டு படுகாயத்திற்கும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## செஞ்சிலுவைச் சங்கத்தின் கோரிக்கை சிறிலங்கா அரசால் புறக்கணிப்பு

போர் நடவடிக்கைகளின் போது, அப்பாவிப் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் தவிர்க்கப்பட்டு பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என தற்போது சிறிலங்காப் படையால் நடாத்தப்பட்டு வரும் வன்னி மீதான இராணுவ நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னதாக சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது. ஆனால், வழமைபோல் இவ் வேண்டுகோளைப் புறக்கணித்த சிறிலங்கா அரசு, தனது இன அழிப்பு நோக்கிலான இராணுவ நடவடிக்கையில் பொதுமக்கள் மீது கொடூரமான தாக்குதல்களை நடாத்தி அவர்களை படுகொலை செய்தும் படுகாயப்படுத்தியும் வருகிறது. அத்துடன் சிறிலங்காப் படைகள் வன்னியிலும் திட்டமிட்ட முறையில் குடியிருப்புக்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகளை இலக்கு வைத்துத் தாக்கி வருகின்றன. இதனால் உயிரழிவு மட்டுமல்ல, பெரும் சொத்தழிவுகளும் ஏற்பட்டுள்ளன. ✳

## வன்னிப் படையெடுப்பின் போது படையினரால் கொல்லப்பட்ட பொதுமக்களின் விபரம்

**ஓமந்தைத் தாக்குதலில் மரணமானவர்கள்:**

சிறீபாலன் அமுதவல்லி (46 வயது), பூலோகசிங்கம் வேலுப்பிள்ளை (45 வயது)

**முல்லைத்தீவுக் கடற்கரைக் கிராமங்கள் மீது கிபிர் விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 6 மீனவர்கள்:**

சின்னையா ஆறுமுகம் (65 வயது), ஆறுமுகம் சுதாமகேந்திரன் (42 வயது) இரு சகோதரர்களான,

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## பன்குளம் இராணுவ-பொலிஸ் கூட்டு முகாம் தாக்கியழிப்பு

திருகோணமலை மாவட்டம் பன்குளப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ - பொலிஸ் கூட்டுமுகாம் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை 11-05-97 இல் வெற்றிகரமாக நடாத்தியுள்ளனர். நள்ளிரவுக்குச் சற்று முன்னதாகத் தொடங்கப்பட்ட இத் தாக்குதலில், 50க்கும் மேற்பட்ட பொலிசார் கொல்லப்பட்டதாகவும் அவ்வேளை முகாமில் நூற்றுக்கு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## தமிழினப் படுகொலையை நிறுத்தக் கோரி பிரித்தானியப் பிரதமரிடம் மகஜர் கையளிப்பு

சிங்களப் படைகளால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வன்னி மீதான புதிய இராணுவ நடவடிக்கையால் தமிழ்ப் பொது மக்கள் பெருமளவு இழப்பை எதிர்கொண்டு வருவதைச் சுட்டிக்காட்டியும் சிறிலங்காவின் இவ்வாறான இனப்படுகொலை நோக்கிலான தாக்குதல்களை தடுத்து நிறுத்தக் கோரியும், தமிழர் மனித உரிமைகள் மையம், பிரித்தானியப் பிரதமர் ரோனி பிளேயரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

தமிழ்ப் பொதுமக்களுக்கும் அவர்களின் சொத்துக்களுக்கும் பெரும் அழிவை ஏற்படுத்தி வரும் வன்னிப் படையெடுப்பின் நாசகார நோக்கத்தையும் சிறிலங்கா அரசின் தொடர்ந்தேர்ச்சியான இனஅழிப்பு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

**புலிகளின் ஆயுதப் போரும் அரசியல் நோக்கும் - ஓர் உண்மை விளக்கம் என்ற கட்டுரை**

✳ பக்கம் 5



நெதர்லாந்து பாராளுமன்றம் நோக்கி தமிழர் பேரணி

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



www.tamilarangam.net

www.tamilarangam.net





# 'நிச்சய வெற்றி' யாருக்கு?

சிறிலங்கா அரசின் ஒரே நோக்கு, தமிழர் தாயகத்தினை படைபலம் கொண்டு ஆக்கிரமித்து தமிழீழ மக்களை அடிமைகளாக்குவதே. இந்த வரிசையில் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கிய நகர்வுக்கான பலப் பரீட்சை ஒன்றில் சிறிலங்கா தனது முழு அளவிலான ஆளணி பலத்தையும் ஆயுத பலத்தையும் பயன்படுத்தி, பெருமளவிலான ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றை இம்மாதம் 13ஆம் திகதி அதிகாலை ஆரம்பித்துள்ளது.

இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட ஆளணியினர் டாங்கிகள், கவசவாகனங்கள், ஆட்லறி பீரங்கிகள் உதவியுடன் வன்னி மண்ணை நாசமாக்கியபடி நகர முற்படுகின்றனர். பெருமளவிலான ஆளணியும் ஆயுதக் குவிப்பும் சுடுதிறன் வேகமும் கொண்டு படையணிகளை நகர்த்தி, எங்கள் மண்ணை ஆக்கிரமிக்கலாம். ஆனால் "அவர்களால் அதனை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது" என தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், ஒரு முறையல்ல, பலமுறை எடுத்துக்கூறியதும் அல்லாமல் நடைமுறையிலும் காட்டி வருகிறார்.

இந்த உண்மை, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் சங்கர் அவர்களால் புள்ளிவிபரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. கடந்த பத்து மாதங்களில் சிங்கள இராணுவத்திடமிருந்து ஒன்பது ஆட்லறிகள் மற்றும் பெருந்தொகையான ஆயுதங்கள், இராணுவ தளபாடங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள சங்கர், கிழக்கில் 44 சிறிலங்காப் படை முகாம்கள் மூடப்பட்டுவிட்டதையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 விழுக்காடு நிலப்பகுதி விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். சிறிலங்கா இராணுவம் தனது கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறும் பிரதேசங்கள் கூட, உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாக கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வருவதையும் தென்தமிழீழத்தில் நீதி நிர்வாக கட்டமைப்பு திட்டமிட்ட முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் விஸ்தரிக்கப்பட்டு வருவதையும் உறுதிப்படுத்தியுள்ள சங்கர், பெரும் உண்மை ஒன்றையும் உலகுக்குப் பகிரங்கப்படுத்தி உள்ளார். அதாவது, யாழ் குடாநாட்டில் ஒருசில பகுதிகளை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்ததின் பின்னர், கிழக்கில் 2000 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளது என்பதே அந்த உண்மை. புதிதாக மீட்கப்பட்ட இப்பகுதிகளில் மேலதிக பயிற்சி முகாம்களை அமைத்து, போராளிகளைத் தயார்ப்படுத்த கூடிய வசதிகளை விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர் என்பதும் சங்கரால் விளக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகக் கூறுவதானால், நேற்று ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் இன்று விடுவிக்கப்பட்டுவிட்டன. அவ்வாறே இன்று ஆக்கிரமிக்கப்படும் பிரதேசங்களும் எவ்வளவு கூடிய விரைவில் விடுவிக்கப்பட முடியுமோ அவ்வளவு கூடிய விரைவில் விடுவிக்கப்படும் என்பதும் உறுதியான உண்மை. இந்த உண்மை சிறிலங்கா அரசுக்கும் படைத் தலைமைகளுக்கும் நன்கு தெரிந்த ஒன்று. அப்படியானால், எதற்காக சிறிலங்கா அரசு தொடர்ந்தும் பாரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகளை – ஆக்கிரமிப்பு யுத்தங்களை நடாத்தி வருகின்றது? அதற்கு ஒரே ஒரு பதில், இன அழிப்பும் உட்கட்டுமான அழிப்புமே. தமிழீழ மக்கள் உறுதியாகவும் இறுதியாகவும் காலனித்துவத்தால் இழந்துவிட்ட தமது வரலாற்றுத் தாயகத்தை முறைமையான இறைமையுள்ள அரசை மீளவும் மீட்க, நிறுவ தமது சுயநிர்ணய உரிமையினைப் பயன்படுத்தி வருகின்றனர். இது ஒரு தீவிரவாதமோ பயங்கரவாதமோ அல்லது பிரிவினைவாதமோ அல்ல. சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப வரலாறு உணர்த்திய பாடங்களைக் கொண்டு, சிங்கள பெரும்பான்மை அரசு தம்மை நாடற்ற தேச இனமாக மாற்றிய பின்னர் எடுத்த முடிவே இது. குடியொப்பத்தினால் ஏற்கப்பட்ட அந்தத் தீர்வை சர்வதேச சட்டங்களுக்கு அமைய நிறைவேற்றுவதைத் தடுப்பதற்கு, ஆயுத படைபல அடக்குமுறையை சிறிலங்கா அரசு பயன்படுத்தி வருகின்றது. சிறிலங்கா அரசின் ஆயுத அடக்குமுறைக்கெதிராகவே, தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழ மக்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தினை நடாத்தி வருகின்றனர். இடையிடையே சில பின்னடைவுகளை அடைந்தாலும் விடுதலைப் புலிகள் ஈட்டியுள்ள ஈடிணையில்லா வெற்றிகள் இப்போராட்டத்தின் வலிமையையும் தேவையையும் உலகுக்கு உணர்த்தி வருகின்றன. தமிழ் மக்களின் உள்ளார்ந்தமான பங்களிப்பும் விருப்பும் இல்லாமல் இவ்வெற்றிகளை எய்த முடியாது என்பதை உணர்ந்த சிறிலங்கா அரசு தமிழ் மக்களை இன அழிப்புச் செய்வதன் மூலமும் தமிழீழ உட்கட்டுமானங்களை அழித்து பொருளாதார ரீதியாக தமிழ் மக்களைப் பலவீனப்படுத்துவதன் மூலமும் போராட்டத்தை தடுக்க தீவிரமாக முயற்சிக்கின்றது. இதன் வெளிப்பாடே தமிழ் மக்கள் மீதான இந்த தொடர் யுத்தங்களாகும். இவற்றுக்குக் காலத்துக்கு காலம் புதுப்புது விளக்கங்களும் குறியீட்டுப் பெயர்களும் கொடுக்கப்படுகின்றனவே தவிர, பகிரங்கமான தமிழின அழிப்பே சந்திரிகாவின் அரசியல்– இராணுவ நோக்காகும். இதனைச் சர்வதேச உலகுக்கு ஆணித்தரமாகத் தொடர்ந்து எடுத்துரைப்பதும் எமது தேச மக்களுக்கும் தேசிய இயக்கத்துக்கும் எம்மாலான அனைத்து வழிகளிலும் உதவுவதுமே இத்தகைய மனிதப்படுகொலைகள் முற்றுப்பெற நாம் செய்யக்கூடிய பிரதான வழியாகும். 'நிச்சயம் வெற்றி' என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்காவின் இவ்இராணுவ அடக்குமுறை, தோல்வியுற்று, நிச்சயம் வெற்றி தமிழ் மக்களுக்கே என்பதை நாளைய வரலாறு கூறும் காலம் வெகுதூரத்தில் இல்லை. ✷

# பத்துமாதத்தில் ஒன்பது ஆட்டிலறிகள் பெரும்தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

**விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் சங்கர்**

கடந்த பத்து மாத காலத்தில் சிங்கள இராணுவத்திடம் இருந்து ஒன்பது ஆட்டிலறிகள் மற்றும் பெருந்தொகை ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. சங்கர் அவர்கள், பிரான்சில் இருந்து வெளிவரும் ஈழமுரசு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளின் தாக்குதல் காரணமாக, கிழக்கில் 44 சிறிலங்காப் படைமுகாம்கள் மூடப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 வீதமான நிலப்பகுதி விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் வந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். தென்தமிழீழத்தில் நீதி, நிர்வாகக் கட்டமைப்பு விஸ்தரிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட சங்கர், சிறிலங்கா இராணுவம் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் என்று கூறும் பிரதேசங்கள் கூட, எமது குடிசார் நிர்வாக கட்டமைப்புக்குள்தான் இருக்கின்றன எனவும் கூறியுள்ளார். யாழ். குடாநாட்டை சிங்களப் படை ஆக்கிரமித்த பின், கிழக்கில் 2,000 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இதனால் மேலதிக பயிற்சி முகாம்கள் அமைத்து போராளிகளைத் தயார்படுத்தக்கூடிய நிலையில் உள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தை குறித்துத் தெரிவிக்கையில், நேரடிப் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என மறுத்துரைத்த அவர், மூன்றாந் தரப்பு மத்தியத்தத்துடன்தான் சமாதானப் பேச்சுவார்த்தை அமைய வேண்டும் என தெளிவுபடுத்தியுள்ளார்.

# இராணுவ கட்டளை அதிகாரி அரியாலையில் சுட்டுக் கொலை

சிறிலங்கா இராணுவத்தில் கட்டளை அதிகாரியாகப் பணிபுரியும் ஒருவர் அரியாலையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் தனது மெய்ப்பாதுகாவலர் சகிதம், தனது படையணித் தலைமையகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மேற்படி அதிகாரி, சிறிலங்கா இராணுவத்தால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் வைத்து, சரியாக இனங்காணப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதானது, சிறிலங்கா இராணுவத்தினரை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. விடுதலைப் புலிகள் நீண்ட நேரம் காத்திருந்தே மேற்படி சூடு நடாத்தியுள்ளனர் என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அவருடன் சென்ற மெய்ப்பாதுகாவலர் படுகாயமடைந்துள்ளார். ❈

# நோர்வே பாராளுமன்ற அங்கத்தவருக்கு பயண அனுமதி வழங்க சிறிலங்கா மறுப்பு

சிறிலங்கா, தமிழர்களுக்குப் பாதுகாப்பானதா? என்பது தொடர்பாக நிலைமைகளைக் கண்டறிய சிறிலங்காவிற்கு விஜயம் செய்யவிருந்த, நோர்வே பாராளுமன்ற அங்கத்தவர் குழுவிற்கு சிறிலங்கா செல்வதற்கான அனுமதியை வழங்க சிறிலங்காத் தூதரகம் மறுத்துள்ளது. நோர்வேஜிய பிரதி வெளிநாட்டமைச்சர் Jan Egeland அவர்கள், பாராளுமன்ற அங்கத்தவர் குழுவிற்கு அனுமதி வழங்குமாறு சிறிலங்காத் தூதரகத்தைக் கோரியிருந்த போதும், சிறிலங்காத் தூதரகம் அவரது கோரிக்கையை மறுத்து அவர்களின் விண்ணப்பத்தை நிராகரித்துள்ளது. சிறிலங்காத் தூதரகத்தின் இந் நடவடிக்கை தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள, அரசியல் தஞ்சம் கோரியவர்களுக்கான நோர்வேஜிய அமைப்பு, நோர்வீஜிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே சிறிலங்கா அரசு பயண அனுமதி வழங்க மறுக்கும்போது, அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழர்களை உரிய பயண ஆவணமின்றி நோர்வே அரசு எவ்வாறு திருப்பி அனுப்ப முடியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளது. ❈

# அல்லைப்பிட்டி, மிருசுவில், மல்லாகத்தில் புலிகள் தாக்குதல்

**- 11க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலி**

**- ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன**

இம் மாதம் 14ஆம் திகதி இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள யாழ் மாவட்டம் அல்லைப்பிட்டியில் அமைந்திருந்த 'றாடர்' அவதானிப்பு நிலையத்தை உள்ளடக்கிய சிறிய முகாம் ஒன்று விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் இவ் அதிரடித் தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். றாடர் நிலையம் உட்பட முகாம் கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. தாக்குதல் தொடங்கிய சில நிமிட நேரத்தில் காயமடைந்த இராணுவத்தினரையும் தூக்கிக் கொண்டு ஏனைய இராணுவத்தினர் ஓடித் தப்பிக் கொண்டனர். இத் தாக்கியழிப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். தாயக மீட்புப் போரில் மாவீரராகிய இப் போராளிக்கு எமது வீரவணக்கம்.

இத் தாக்குதல் நடந்த இரு நாட்களின் பின்னர் தென்மராட்சி, மிருசுவில் பகுதியில் அமைந்திருந்த சிங்கள இராணுவத்தின் தொடர் காவலரண்வேலி, புலி வீரர்களால் தாக்கியழிக்கப்பட்டது. இத் தொடரில் இருந்த ஆறு காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டன. எதுவித இழப்புகளுமின்றி நடாத்தி முடிக்கப்பட்ட இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் பல ஆயுதங்களும் பலியான இரு இராணுவத்தினரது சடலங்களும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, இதே தினத்தில் மல்லாகம் பகுதியிலும் சிங்களப் படையின் வாகனம் ஒன்றின் மீதான கண்ணிவெடித் தாக்குதலில் நான்கிற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ❐

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சர்வதேச அரங்கில்

## தமிழீழ விடுதலைப் போராட்டம் (3)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைப் பற்றிய தெளிவான சர்வதேச அபிப்பிராயத்தினை உருவாக்குவதற்கு அதில் செல்வாக்குச் செலுத்தும் சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்களை அடையாளம் காணுதலும் அவற்றின் நிலைப்பாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிவதும் அவசியமானதாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய கருத்துக்களை வெளியிடும் சர்வதேச நிறுவனங்களில் கொழும்பில் இருந்து இயங்கி வரும் அந்நிய நாட்டு தூதரகங்கள், தமிழீழப் பகுதிகளிலும் சிறிலங்காப் பகுதிகளிலும் இயங்கி வரும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், கொழும்பில் இருந்து இயங்கிவரும் சர்வதேச செய்தித் தாபனங்கள் என்பன முக்கியமானவையாகும். இவற்றைவிட மனித உரிமைகள், அகதிகள் போன்ற குறிப்பிட்ட விடயங்களில் கவனம் செலுத்தி வரும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களும் முக்கியமானவையாகும்.

### சர்வதேச செய்தித் தாபனங்களின் நிலை

போராட்டத்தைப் பற்றிய தகவல்களை வெளியிடுவதில் முக்கிய பங்கை வகிக்கும் சர்வதேச செய்தி நிறுவனங்களின் நிலையினை முதலில் நோக்குவோம். கொழும்பில் நிலைகொண்டு இயங்கும் முக்கிய செய்தி நிறுவனங்களாக ரொய்ட்டர் (Reuter), ஏ.எஃப்.பி (AFP), பி.பி.சி (BBC), வொய்ஸ் ஒப் அமெரிக்கா (Voice Of America), ஏ.பி (AP) ஆகியன விளங்குகின்றன. அத்துடன் இந்திய செய்தி நிறுவனங்களான பி.ரி.ஐ (PTI), இந்து பத்திரிகை (Hindu Paper), இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை (Indian Express Paper) என்பனவும் மேலும் சில நிறுவனங்களும் கொழும்பில் நிரந்தர முகவர்களைக் கொண்டுள்ளன.

இவற்றில் ரொய்ட்டர் செய்தித் தாபனம் ஓரளவு பெரியளவில் பல்வேறு வசதிகளுடன் செயற்படுகின்றது. இந்நிறுவனத்தின் கொழும்புக்கிளைக்குப் பொறுப்பாக ஒரு சிங்களவர் அல்லாத செய்தியாளர் பொறுப்பாக இருப்பினும் இக்கிளையில் நிரந்தரமாக மோகன் சமரசிங்க, ரோகான் குணசேகர எனும் சிங்களவர்கள் நீண்டகாலமாக தொழில் பார்த்து வருகின்றனர். அத்துடன் மேலும் பல சிங்களவர்களும் வேலை செய்கின்றனர். ரொய்ட்டர் செய்தித் தாபனம் அனேகமாக நாளாந்தம் கொழும்பிலிருந்து விபரமான செய்திகளை வெளியிட்டு வருகின்றது. இவற்றில் பெரும்பாலானவை மோகன் சமரசிங்க, ரோகான் குணசேகர எனும் இரண்டு சிங்களவர்களினாலேயே தயார்ப்படுத்தப்படுகின்றன. இவர்களின் பெரும்பாலான செய்தித் தயாரிப்புகள் சிறிலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரங்களுக்குத் துணைபோவனவாக இருக்கின்றன. ஆரம்பத்தில் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து அதிருப்திகள் தெரிவிக்கப்படாமல் இருந்தமையினால் இவர்கள் இலகுவாக சிறிலங்கா அரசினைப் பற்றிய நல்லெண்ணம் சர்வதேசத்தில் தோன்றக்கூடிய வகையிலான செய்திகளை வெளியிட்டு வந்தனர். அத்துடன் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகளைப் பெரும்பாலும் புறக்கணித்தும் வந்தனர்.

ஆனால் இவர்களின் இந்த நடவடிக்கைகள் பின்னர் வெளிநாடுகளில் வாழும் தமிழீழ ஆதரவுச் செயற்பாட்டாளர்களினால் ரொய்ட்டர் செய்தித் தாபனத்தின் தலைமையகத்திற்கு அம்பலப் படுத்தப்பட்டது. அத்துடன் தொடர்ச்சியான கண்டன அறிக்கைகளும் கடிதங்களும் அனுப்பப்பட்டன.



விடுதலைப் புலிகளின் அனைத்துலகப் பொறுப்பாளர் லோறன்ஸ் திலகர்

**சர்வதேச செய்தி நிறுவனங்களில் செல்வாக்குச் செலுத்தும் சிறிலங்காவின் இனவாத பிரச்சாரத்தினை அம்பலப்படுத்த வேண்டியுள்ளது. மேலும் பிற நாட்டுச் செய்தியாளர்களுக்கு எமது போராட்டம் பற்றிய ஆழ்ந்த அறிவு இன்மையும் தவறான செய்தி வழங்கல்களுக்குக் காரணமாகின்றது. இந்நிலைமையினையும் மாற்ற வேண்டியது மிக முக்கியமானதாகும்.**

இந் நடவடிக்கைகளின் விளைவாக ரொய்ட்டர் செய்திகளில் சிறிது மாற்றங்களைக் காணக்கூடியதாக உள்ளது. விடுதலைப்புலிகளின் சர்வதேச செயலகத்தினால் வெளியிடப்படும் செய்தி அறிக்கைகளிலிருந்தும் தற்போது ஓரளவு செய்திகள் எடுக்கப்பட்டு ரொய்ட்டர் செய்திகளில் இணைக்கப்படுகின்றன. அத்துடன் விடுதலைப்புலிகளின் சர்வதேச பேச்சாளரிடமும் அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டு அவையும் ரொய்ட்டர் செய்திகளில் ஓரளவு இணைக்கப்படுகின்றன. ஆனால் இவற்றை ஒரு முழுமையான வெற்றியாகக் கருத முடியாது.

அடுத்ததாக, ஏ.எஃப்.பி செய்தித் தாபனத்தின் கொழும்பு முகவராக அமால் ஜெயசிங்க எனும் சிங்களவர் தொழில் செய்கின்றார். இவரும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களைப் பரப்புவதில் ஆர்வமுள்ளவராக இருக்கின்றார். ஏ.எஃப்.பி நிறுவனமும் தினமும் அநேகமாக செய்திகளை வெளியிட்டு வருகின்றது. பிரித்தானியாவின் பி.பி.சி செய்தித் தாபனம் ஓரளவு நடுநிலைமையான செய்திகளை வெளியிட்டு வருகின்றது. இதற்கு பி.பி.சியின் பிரதம கொழும்புச் செய்தியாளராக பிரித்தானியரான ஃபுளோரா பொட்ஸோட் (Flora Botssord) கடமையாற்றுவது காரணமாக இருக்கலாம். அண்மையில் இவர் கிழக்கு மாகாணத்திற்குச் சென்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து ஒரு தொலைக்காட்சிச் செய்தியினைத் தயாரித்து வழங்கியது குறிப்பிடத்தக்கது. ஆனால் இவரும் கொழும்பில் தங்கியிருப்பதால் சிறிலங்காவின் பொய்ப்பிரச்சார அலைகளின் தாக்கத்திற்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாக உள்ளது. மேலும் பி.பி.சி செய்திகள் எமது போராட்டம் பற்றிய செய்திகளை வழங்குவது குறைவாகவே உள்ளது. இதற்கு எமது பிரச்சனைக்கு பி.பி.சி முன்னுரிமை கொடுக்காமல் இருப்பது காரணமாக இருக்கலாம்.

வொய்ஸ் ஒஃப் அமெரிக்காவிற்கும் ஒரு சிங்களவர் அல்லாத செய்தியாளரே பொறுப்பாக உள்ளார். பி.பி.சியினைப் போன்று இந்நிறுவனமும், எமது போராட்டம் பற்றிய செய்திகளுக்கு பெரியளவில் முன்னுரிமை கொடுப்பதில்லை எனலாம். ஆனால் இந்நிறுவனத்தின் செய்திகளும் ஓரளவு நடுநிலைமையாக இருக்கின்றன. ஆனாலும் சிங்களத்தின் பொய்ப்பிரச்சாரத்தின் தாக்கம் இங்கும் உள்ளது. ஏ.பி. நிறுவனத்தின் பிரதம செய்தியாளர் டெக்ஸர் குறூஸ் எனும் சிங்களவராவார். இவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கெதிரான செய்திகளைப் பரப்புவதில் ஆர்வமுள்ளவராக இருக்கின்றார்.

இந்தியச் செய்தி நிறுவனங்களைப் பொறுத்தவரை இந்திய ஆளும் வர்க்கத்தின் தமிழீழ எதிர்ப்புக் கொள்கையினை அவை பிரதிபலிப்பனவாக உள்ளன.

சர்வதேச செய்தி நிறுவனங்களைப் பொறுத்தவரை போர்ப் பகுதிகளுக்குச் செல்வதற்கு சிறிலங்கா அரசு தடை விதித்துள்ளது. இதனால் சர்வதேச செய்தியாளர்கள் போர் நிலைமைகளை நேரடியாகவும் சுதந்திரமாகவும் வெளியிடமுடியாதவாறு உள்ளனர். அத்துடன் சிறிலங்கா அரசிற்குப் பாதகமான செய்திகளை தயாரித்து வழங்க முற்படும் போது சிறிலங்கா அரசு அவர்களுக்கு எதிரான மிரட்டல்களையும் வெளியிட்டு வருகின்றது. அண்மையில் பி.பி.சி. செய்தியாளருக்கு எதிராக விடுக்கப்பட்ட மிரட்டலை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவ்வாறாக சனநாயகத்தின் அடிப்படைச் சுதந்திரம் சிறிலங்கா அரசினால் மீறப்படுகின்ற போதும் இந்தச் சர்வதேச செய்தியாளர்கள் கையாலாகாதவர்களாக உள்ளனர். இதற்கு கொழும்பில் இருந்து இயங்கி வரும் சர்வதேச தூதரகங்களின் பாராமுகமும் ஒரு காரணமாக இருக்கலாம். சொந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டு, இந்த நாடுகளுக்கு சிறிலங்கா அரசுக்கெதிராகச் செயல்படுவது நன்மை பயக்காது என்பதனால் இந்தப் பாராமுகம் தொடர்கின்றது. இதனால் சிறிலங்கா அரசின் மீதான சர்வதேச அழுத்தங்கள் குறைவாக உள்ளன.



கொழும்பில் செய்தியாளர் மத்தியில் சிறிலங்கா அமைச்சர் ஒருவர்.........

செய்தித் தடையினை உடைப்பதற்காக விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் தமிழீழத் திலிருந்து வரும் செய்திகளை நாளாந்தம் பல்வேறு செய்தி நிறுவனங்களுக்கும் அரசுகளுக்கும் அனுப்பி வைக்க ஆரம்பித்தது. அத்துடன் தமிழீழ ஆதரவாளர்களும் அமைப்புகளும் இச் செய்திகளை இணைவலை (Internet) ஊடாக உலகெங்கும் பரவச் செய்வதில் பெரும் முயற்சி எடுத்தனர். அத்துடன் எமது அறிக்கைகளைப் புறக்கணிக்கும் செய்தி நிறுவனங்களுக்கு தமது அதிருப்திகளையும் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் தமிழீழ மக்கள் தெரிவித்தனர்.

இவற்றினால் நிலைமைகள் ஓரளவு மாறியுள்ள போதும் நாம் இன்னும் பல தடைகளைத் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது.

சர்வதேச செய்தி நிறுவனங்களின் நிலைப்பாடுகளை மாற்றி உண்மையினை வெளிக் கொணர்வதில் பல சவால்கள் எம் முன்னே உள்ளன. முதலாவதாக, சர்வதேச செய்தி நிறுவனங்களில் செல்வாக்குச் செலுத்தும் சிறிலங்காவின் இனவாத பிரச்சாரத்தினை அம்பலப்படுத்த வேண்டியுள்ளது. மேலும் பிற நாட்டுச் செய்தியாளர்களுக்கு எமது போராட்டம் பற்றிய ஆழ்ந்த அறிவு இன்மையும் தவறான செய்தி வழங்கல்களுக்குக் காரணமாகின்றது. இந்நிலைமையினையும் மாற்ற வேண்டியது மிக முக்கிய மானதாகும்.

- தீபன் -

**(தொடரும்)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓமந்தையில் உக்கிரமான சண்டை.....

உள்ளாகியுள்ளனர். ஆயுதங்களும் புலி வீரர்களால் கைப்பற்றப் பட்டுள்ளன. ஆனால், சமர் உக்கிரமாக நடந்து கொண்டிருப்பதால் கொல்லப்பட்ட இராணுவ எண்ணிக்கை, இராணுவத் தளபாட அழிப்பு விபரங்களின் சரியான தொகை அறியப்படவில்லை. தனது இழப்பு விபரங்களை, சிறிலங்காப் பாதுகாப்பமைச்சு மிகுந்த பிரயத் தனப்பட்டு இருட்டடிப்புச் செய்து வருகின்றது. முதல் நாள் சமரில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச் சாவடைந்துள்ளனர்.

### குடியிருப்புக்கள் மீது விமான,எறிகணைத் தாக்குதல்கள்

வன்னியின் பல பகுதிகளை நோக்கி சிங்களப் படையினர் கொடூரமான மோட்டார், 'ஆட்டிலறி' மற்றும் விமானத் தாக்குதல்களை மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்டு வருகின்றனர். இத் தாக்குதல்களில் புளியங்குளம், ஓமந்தைப் பகுதிகளே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சிங்களப் படையின் மோசமான எறிகணை, விமானத் தாக்குதல்களினால் பொதுமக்களுக்கு ஏற்பட்டு வரும் இழப்புக்களுடன், தனது இராணுவத்திற்கு ஏற்பட்டு வரும் பேரிழப்புக்களையும் சிறிலங்கா அரசு மறைத்துவரும் வேளையில், கொழும்பிலுள்ள சர்வதேசச் செய்தித் தாபனங்கள் தொடர்ந்து தமக்கு கிடைக்கப் பெறும் செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வருகின்றன.

### சர்வதேச செய்தித் தாபனங்களின் கருத்துக்கள்

17-05-97 இல் சர்வதேசச் செய்தித் தாபனங்கள் விடுத்த செய்தியில், விடுதலைப் புலிகளின் உக்கிரமான தரத்குதலை உணர முடிவதாகவும், சிறிலங்காப் படையினர் சிக்கித் தடுமாறுவது போல் தெரிவதாகவும் தெரிவித்துள்ளன. 14 ஆண்டுப் போரில் இது மிக மோசமானதாக இருக்கப் போகின்றது என பாதுகாப்புத் துறை ஆய்வாளர்கள் கருதுவதாக 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. பி. பி. சி இன் கொழும்பு முகவர் வெளியிட்டுள்ள செய்தியில், கொழும்பில் 'அம்புலன்ஸ்' வண்டிகள் அவசர ஒலி எழுப்பியபடி விரைந்து செல்வதைக் காணக்கூடியதாகவும், ஓமந்தைப் பகுதியில் சிறிலங்காப் படையின் இரு போர் டாங்கிகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

### 37 போராளிகள் வீரமரணம்

தாக்குதல் தொடங்கிய நாளிலிருந்து 16-05-97 வரை சிங்களப் படையை எதிர்கொண்டு வீரம் செறிந்த தாக்குதலை நடாத்தி வரும் விடுதலைப் புலிகள் அணியில், முப்பத்தியேழு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். சிங்களப் படையின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை முறியடித்து தாயக மண்ணைக் காக்கும் புனிதப் போரில் விலைமதிப்பில்லாத தமது இனிய இளைய உயிர்களை அர்பணித்துவிட்ட அம்மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம்.

### 320 இராணுவம் படுகாயம் அரசின் இரத்ததானக் கோரிக்கை

வுனியாவில் இருந்து அவசர ஒலி எழுப்பியபடி 'அம்புலன்ஸ்' வண்டிகள் அனுராதபுரம் நோக்கிச் செல்வதாக உள்ளூர்ச் செய்திகள் தெரிவிக்கின்றன. அநுராதபுரம் வைத்தியசாலை நிரம்பிய நிலையில், காயமடையும் படையினர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா அரசால் அவசர இரத்ததானம் பொதுமக்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது. அக் கோரிக்கைகள் வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில் தொடர்ந்து விடுக்கப்படுவதாக ஏ. பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. கிடைக்கப் பெறும் செய்திகளின்படி, படையினர் பெரும் உயிரிழப்பிற்கும், படுகாயத்திற்கும் ஆளாகிவருவதாகத் தெரிகிறது. 320ற்கும் மேற்பட்ட படையினர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகளின் தகவல்களை ஆதாரம் காட்டி 'ரொயிட்டர்' செய்தித் தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

### மக்கள் மீது பழிவாங்கல் தாக்குதல்

சமர்க் களத்தில் கடும் இழப்பைச் சந்திக்கும் சிங்களப் படையினர், தமது வழமையான பழிவாங்கல்களை பொதுமக்கள் மீது திருப்பியுள்ளனர். கண்மூடித்தனமான விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் போர்ப் பகுதியையும் தாண்டி பல மைல்களுக்கு அப்பாலும் மேற்கொள்ளப்படுகிறது. காடுகள் பல தீப்பற்றி எரிவதாகவும், கனகராயன் குளத்தில் 17-05-97 புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் காட்டுப் பகுதி தீப்பிடித்து எரிந்து கொண்டிருப்பதாகவும் பொதுமக்களின் வாழ்விடங்களும் தீக்கிரையாகும் அபாயம் தோன்றியுள்ளதால் மக்கள் வேறு பகுதிகளுக்கு இடம் பெயருவதாகவும் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன. நெடுங்கேணியில் கிபீர், புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் பல குடியிருப்புக்களும், பொதுக்கட்டடங்களும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்களுக்கு பெரும் அவலங்களும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. நெடுங்கேணியில் புக்காரா நடாத்திய தாக்குதலில் 71 வயதுடைய ராஜபிள்ளை (வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து வாழ்ந்தவர்) என்ற முதியவர் கொல்லப்பட்டுள்ளார் என இனங்காணப்பட்டுள்ளது. நெடுங்கேணி-வவுனியா எல்லைப் புறத்தில் வாழ்ந்த 11 குடும்பங்களைச் சேர்ந்த 45 தமிழர்கள் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப் பட்டுள்ளனர். இதன் பின்னர் இவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

### 126 தமிழ் பொதுமக்கள் தமிழகத்தில் தஞ்சம்

பெரும் மனித அவலங்களை ஏற்படுத்திவரும் சிறிலங்காப் படைகளின் தொடர் தாக்குதல்களினால் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இடம் பெயர்ந்து காடுகளில் தஞ்சமடைந்துள்ளதோடு, நூற்றுக் கணக்கானோர் தப்பியோடி தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். 18-05-97 வரை 126 தமிழ்ப் பொதுமக்கள் படகுகள் மூலம் தமிழக இராமேஸ்வரம் கரையை அடைந்துள்ளதாகவும் இன்னும் பல நூற்றுக் கணக்கானோர் தமிழகம் செல்லக் காத்திருப்பதாகவும் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஓமந்தையில் புலிகள் பதிலடி

சிறிலங்காப் படைகளை ஓமந்தை வரை முன்னேறவிட்ட விடுதலைப் புலிகள், 18-05-97 ஞாயிற்றுக் கிழமையன்று ஓமந்தையில் திடீரெனத் தோன்றி சிங்களப் படைகளைச் சுற்றிவளைத்து கடும் தாக்குதலை நடாத்தினர். இத்தாக்குதலில் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் மிகமிக நெருக்கமாக நின்று இராணுவத்துடன் விடுதலைப் புலிகள் நேருக்குநேர் மோதிவருவதாகவும் மிக உக்கிரமான சண்டை நடைபெறுவதாகவும் சிறிலங்காப் படைகள் பலத்த இழப்புக்களை அடைந்து வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. ஆனால் இன்றைய இம்மோதல் குறித்த தலைமைப் பீடச் செய்திகள் ஏதுவும் கிடைக்கப் பெறவில்லை. இச்செய்தித்தாள் அச்சுக்குப் போகும்வரை தொடர்ந்தும் கடுஞ்சமர் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தாயகச்செய்திகள் தெரிவிக்கின்றன.

## 243 சிங்களக் காவல்துறையினர் வவுனியாவில் தலைமறைவு

வவுனியா மாவட்டத்தில் பணிபுரியவென அனுப்பப்பட்ட 243 பொலிசார், வவுனியாவில் இருந்து காணாமல் போயுள்ளனர். இவர்கள் பலவந்தமாகவே வவுனியா அனுப்பப்பட்டனர் எனவும், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குப் பயந்து தலைமறைவாகி விட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் பற்றிய எந்தவிதமான தகவல்களும் இல்லாத நிலையில், தலைமறைவாகிய 243 பேரையும் சேவை நீக்கம் செய்துள்ளதாகச் சிறிலங்காத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. ♦

## வன்னிப் படையெடுப்பின் போது படையினரால் கொல்லப்பட்ட ....

முல்லைத்தீவுக் கடற்கரைக் ....

சுகந்தன் (18 வயது)அஜந்தன் (16 வயது),மரியதாஸ் (60 வயது), மல்லி (42 வயது)

மணலாற்றில் இருந்து சிங்களப் படை ஏவிய எறிகணைக்கு நெடுங்கேணியில் மூன்று குழந்தைகள் உட்பட கொல்லப் பட்ட 5 பொதுமக்கள்:

விதுசா (3 வயது)நிவேதா (2 வயது), (ஒரு குழந்தையின் விபரம் கிடைக்கப் பெறவில்லை), கர்ப்பிணிப் பெண்ணான பி. சுபத்திரா (26 வயது), வி.பிரியதர்சினி (22 வயது)., ராஜபிள்ளை (71வயது-புக்காரா குண்டுவீச்சு . விமானம் நெடுங்கேணியில் 18-05-97இல் நடாத்திய தாக்குதலில் கொல்லப் பட்டவர்) ✷

## பன்குளம் இராணுவ-பொலிஸ் .....

மேற்பட்ட படையினர் இருந்த தாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதல் நடவடிக்கை பற்றி விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் விடுத்த செய்தியில், ஏராளமான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தாக்குதல் தொடங்கிய பின் இறந்தவர்கள் போக ஏனைய படையினர் ஓடித் தப்பித்துக் கொண்டனர் எனவும், இக் கூட்டுமுகாம் தாக்கப்பட்டவேளை, பன்குளத்தின் அயலில் அமைந்திருந்த விமானப்படை முகாமின் பாதுகாப்பு அரண்கள் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ் வெற்றிகரமான தாக்குதலின்போது, கப்டன் இதயமோகன், லெப். ராசவேல், 2ஆம் லெப். வதனன், 2ஆம் லெப். விஜயானந்தம், 2ஆம் லெப். தில்லைவேந்தன், வீரவேங்கை பிரியசுதன், வீரவேங்கை நாவுக்கரசன், வீரவேங்கை அருள்நேசன் ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். தாயக மண்ணை எதிரிப் படையிடம் இருந்து மீட்டெடுக்கும் புனிதப் போரில் தம்மை ஆகுதியாக்கிய இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம். ✷

## தமிழினப் படுகொலையை நிறுத்தக் கோரி ......

நடவடிக்கையினையும் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும் நோக்கமாக, 17-05-97இல் பிரித்தானியப் பிரதமரின் உத்தியோகபூர்வ வசிப்பிடம் முன்பாக (10, Downing street, London SW1) நடாத்தப்பட்ட விழிப்புப் போராட்டத்தின் போதே இம்மகஜர் கையளிக்கப்பட்டது. பெண்கள், குழந்தைகள், முதியோர் உட்பட சுமார் இருநூறுக்கும் அதிகமான மக்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். பிரித்தானியாவில் 18 ஆண்டுகளின் பின் பெரும்பான்மை வாக்குகளால் பதவிக்கு வந்த தொழிற்கட்சி அரசிற்கு தமிழர்கள் சமர்ப்பித்த முதலாவது வேண்டுகோளாக இவ் விழிப்புப் போராட்டம் அமையப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விழிப்புப் போராட்டத்திற்கு ஆதரவாக இலண்டனிலுள்ள நியூகாம் தமிழர் ஐக்கிய கழகம் ''நெஞ்சு பொறுக்குதில்லையே !'' என்ற தலைப்புடைய துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டதுடன் இவ்வமைதிப் போராட்டத்தில் தமிழ் மக்கள் யாவரும் கலந்துகொள்ள வேண்டுமென அழைப்பும் விடுத்திருந்தது. இம்முன்மாதிரியை இலண்டனிலுள்ள ஏனைய தமிழர் அமைப்புக்களும் பின்பற்றி எம்மக்களின் துயர்துடைக்க முன்வரவேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றது. ✷

## இரகசியமாக பேசுவதைத் தடுக்கவே உடன்பாடு செய்தேன்

### - ரணில் விக்கிரமசிங்க

''பொதுஜன ஐக்கிய முன்னணி போர் மூலமே சமாதானம் என்று கூறி வந்தது. தற்போது பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஐ.தே.க.வுக்கும் அரசிற்கும் இடையிலான இணக்கப்பாடு கூட ஒரு வெளிச்சட்டகமாகவே உள்ளது. உள்ளே ஒன்றும் இல்லை. ஏனெனில் அது குறித்து அரசு இதுவரை எதுவித விளக்கமும் கூறவில்லை. இந்த உடன்படிக்கை மூலம் அரசு விடுதலைப் புலிகளுடன் எதுவித இரகசியப் பேச்சுவார்த்தையும் நடாத்த இயலாது. விடுதலைப் புலிகளுடன் அரசு பேசுவது என்ன என்பது மக்களுக்குத் தெரிய வேண்டு மென்பதற்காகவே நான் இந்த உடன்பாட்டைச் செய்தேன்" என ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

www.tamilarangam.net



# புலிகளின் ஆயுதப் போரும், அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஓர் உண்மை விளக்கம்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்தரித்து, சர்வதேச அரசியல் அரங்கில் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் விசமப் பிரச்சாரத்திற்கு ஆப்பு வைக்கும் நோக்குடன், தமிழீழ விடுதலைப் புலிகளால் அண்மையில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட விரிவான கொள்கை விளக்க அறிக்கையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

**விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தின் வரலாற்றுத் தோற்றம் பற்றியும், வளர்ச்சி பற்றியும், அடிப்படையான அரசியல் குறிக்கோள் பற்றியும் இவ்வறிக்கை எடுத்து விளக்குவதுடன், சந்திரிகா அரசின் இனவாத அரசியற் தந்திரங்களையும், அந்தரங்க சூழ்ச்சிகர நோக்கங்களையும் அம்பலப் படுத்துகிறது.**



தமிழர்கள் எதற்காக ஆயுதம் ஏந்தினார்கள் என்று ஆய்வு செய்தால், அதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் உண்டு என்பதைக் கண்டு கொள்ளலாம். இனக்கொலை வடிவம் எடுத்த மிருகத்தனமான ஒடுக்குமுறையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேறு வழியில்லை என்பதாலும் சமாதான வழிமுறை தழுவிய ஜனநாயகப் போராட்டங்கள் ஈவிரக்கமின்றி ஆயுத வன்முறையால் அடக்கப்பட்டதாலும், அரசியலமைப்பு வழிகளும் நாடாளுமன்றக் கதவுகளும் இறுக மூடப்பட்டதாலும் சமரசப் பேச்சுக்கள் மூலம் சமத்துவத்தையும் நீதியையும் வழங்க சிங்கள ஆட்சியாளர்கள் மறுத்துவிட்டதாலுமே தமிழர்கள் ஆயுதமேந்தத் துணிந்தார்கள். பல தசாப்தங்களாக சிங்கள இனவாதம் இழைத்த அநீதிகளதும் கொடுமைகளதும் வரலாற்றுக் குழந்தையாகவே தமிழ் மண்ணில் ஆயுதப் போர் பிறப்பை எடுத்தது.

## முன்னுரை:

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக, அரசியல் வன்முறையின் எரியுலையாக இருந்து வருகிறது இலங்கை. இத்தீவு சுதந்திரம் பெற்றதையடுத்து தமிழ், சிங்கள தேசங்கள் மத்தியில் எழுந்த முரண்நிலை படிப்படியாக முறுகலடைந்து, ஒரு முழு அளவிலான போராக விரிவாக்கம் கண்டிருக்கிறது. தமிழர் தேசத்தின் சுதந்திர இயக்கமாக விடுதலைப் புலிகளும் சிங்களத்தின் அடக்குமுறைச் சக்தியாக சிறிலங்கா அரசும் இப் போரில் பிரதான பாத்திரங்களை வகிக்கின்றன. நிலையான தேசிய இராணுவங்களைக் கொண்டிருக்கும் இவ்விரு தரப்பினர் மத்தியிலும் நீண்ட காலமாகக் கடும் போர் நிகழ்ந்து வருகிறது.

இப்போரின் விளைவுகள் கொடூரமானவை. ஒரு ஆக்கிரமிப்பு யுத்தமாக, தமிழரின் தாயக மண்ணில் இப்போர் நிகழ்ந்து வருவதால், போரின் கொடிய விளைவுகளுக்குத் தமிழ் மக்களே முகம் கொடுத்து வருகின்றனர். இந்த நீண்ட கொடிய யுத்தம் இதுவரை ஐம்பதினாயிரம் தமிழர்களின் உயிர்களைப் பலிகொண்டுள்ளது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமாக பல இலட்சம் மக்களை இடம்பெயர வைத்துள்ளது. இப்போர், இப்பொழுது என்றுமில்லாத வகையில் தீவிரமடைந்து தொடர்கிறது. உயிரழிவும் பொருளழிவுமாக, நாளுக்கு நாள் இப் போர் பெரும் நாசத்தை விளைவித்து வருகிறது.

**இந்தப் போர் ஏன் நிகழ்கிறது? தமிழரின் அரசியல் பிரச்சினை ஆயுத வன்முறை வடிவம் எடுத்ததற்கான காரணங்கள் என்ன? விடுதலைப் புலிகள் எதற்காக ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள்?**

இந்தக் கேள்விகளுக்கு சிறிலங்கா அரசு கொடுக்கும் விளக்கம் விசித்திரமானது. பரந்த பரிமாணத்தையுடைய மிகவும் சிக்கலான ஒரு நெருக்கடியை, வெறும் பயங்கரவாதப் பிரச்சினையாக எளிமைப் படுத்தி, மலினப்படுத்த முனைகிறது அரசு. சிறிலங்காவின் இந்த அபத்தமான தர்க்கீகத்தில் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாதக் குழுவாகவும், அவர்களது அரசியல் இலட்சியம் அராஜகவாதமாகவும் சித்தரிக்கப்படுகிறது. இந்தச் சித்தரிப்பின் அடிப்படையிலேயே அரசின் தீர்வும் அதற்கான அணுகுமுறையும் அமையப் பெற்றிருக்கிறது. முழு அளவிலான போர்மூலம் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டால் பயங்கரவாதம் ஒழிந்து விடும் என்பதும், பயங்கரவாதம் ஒழிந்துவிட்டால் தமிழரின் பிரச்சினை தானாகவே தீர்ந்து விடும் என்பதும் அரசின் நிலைப்பாடு. இந்தக் குருட்டுத்தனமான அணுகுமுறையின் அடிப்படையில்தான், சிறிலங்கா அரசு செயற்பட்டு வருகிறது.

தமிழரின் தேசியப் போராட்டத்தைப் பயங்கரவாதப் பிரச்சினையாக உருவகப்படுத்தி, உலகத்தை நம்பவைக்கும் நோக்குடன் மிகவும் நுட்பமாக, திட்டமிடப்பட்ட பிரச்சாரத்தை சிறிலங்கா அரசானது அனைத்துலக ரீதியாக மேற்கொண்டு வருகிறது. மேற்குலமானது பயங்கரவாதத்திற்கு அஞ்சுகிறது. அதனை ஒரு உலகளாவிய அச்சுறுத்தலாகவும் கருதுகிறது. மேற்குலகின் இவ்வுணர்வலைகளை நன்கு அறிந்த சிறிலங்கா அரசானது, தனது நாடும் இதே அச்சுறுத்தலை எதிர்கொள்வதாகச் சர்வதேச சமூகத்தை நம்பவைக்க முனைகிறது. உள்நாட்டில் தலைவிரித்தாடும் இனச்சிக்கலை சர்வதேசப் பயங்கரவாதமாக பூச்சாண்டி காட்டுவதில், சிறிலங்காவின் வெளிநாட்டுத் தூதரகங்கள் இரவு, பகல் பாராது தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன. அரசியல் ஏமாற்று வித்தையில் சாணக்கியராக விளங்கும் ஒரு தமிழ் அமைச்சரின் வழி நடத்தலில், இந்த விசமப் பிரச்சாரம் உலக ரீதியாக மேற்கொள்ளப்படுகிறது. தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தி, தமிழருக்கு எதிராகத் தமிழரின் தாயகத்தில் நிகழ்த்தப்படும் ஆக்கிரமிப்புப் போருக்கு அனைத்துலகின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்றுவிடுவதுதான், சிறிலங்காவின் நோக்கம். இதனால், இந்தப் போருக்கு கொழும்பு அரசு கொடுக்கும் விளக்கம் வினோதமானது. சிறிலங்காவின் ராஜரீக மொழியில் இப்போர் உன்னதமானது. சமாதானத்தை நோக்காகக் கொண்டது. பயங்கரவாதப் பிடியில் இருக்கும் தமிழருக்கு விடுதலையைத் தேடிக்கொடுக்கும் உயரிய இலட்சியத்தைக் கொண்டது. இவ்விதம் கொழும்பு அரசு மேற்கொண்டுவரும் பொய்ப் பிரச்சாரமானது தமிழரின் போராட்டம் பற்றி, குறிப்பாக ஆயுதப் போராட்டம் பற்றி சர்வதேச அரசியல், ராஜதந்திர அரங்கில் பெரும் குழப்பத்தையும் தப்பபிப்பிராயத்தையும் எழுப்பியுள்ளது. அத்துடன், இலங்கைத் தீவில் நீண்ட– முடிவில்லாத– கதையாக அரசியல் வன்முறை தொடர்கிறது. இராணுவ வன்முறையும் அதற்கு எதிரான ஆயுத வன்முறையுமாகத் தமிழரின் இனப்பிரச்சினை வன்முறைத் தீயாகக் கொழுந்துவிட்டு எரிகிறது. இந்த வன்முறைச் சூழலில், தமிழரின் அரசியல் போராட்ட வரலாறு பற்றி தெளிந்த– ஆழமான– பார்வை இல்லாமல், தமிழரின் ஆயுதப் போராட்டத்தின் நியாயப்பாடுகளைப் புரிந்து கொள்வது சிரமமானது. இத்தகைய சிக்கலான நிலைமையில் சிறிலங்கா அரசும் அரசியல் மெய்நிலையைத் திரிபுபடுத்திக் கூறிவருவதால், தமிழரின் ஆயுதந்தாங்கிய சுதந்திர இயக்கம் பற்றி, வெளியுலகத்தில் குழப்பமும் தவறான மதிப்பீடுகளும் எழுந்துள்ளன.

தமிழரின் ஆயுதப் போராட்டம் பற்றி எழுந்துள்ள குழப்ப நிலையைத் தெளிவுபடுத்தி, சரியான விளக்கங்களைத் தர முனைகிறது இக்கொள்கை விளக்கக்கட்டுரை. ஆயுதப் போராட்ட இயக்கம் தோற்றங்கொண்ட வரலாற்றுப் புற நிலைகளை எடுத்துவிளக்கும் அதேவேளை, இராணுவ அடக்குமுறைக்கும் இனக்கொலைக்கும் எதிராக ஆயுதமேந்திப் போராடும் உரிமை மக்களுக்கு உண்டு என நாம் வாதிடுகிறோம். விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்படும் ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என முத்திரை குத்த முயற்சிக்கும் சிறிலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரத்திற்குப் பதிலளிப்பதுடன், ஆயுதப் போராட்டமானது தமிழரின் தன்னாட்சி உரிமைக்கான அரசியற் போராட்டம் என்பதை எடுத்து விளக்குகிறோம். ஒட்டு மொத்தத்தில், அரசியற் சுதந்திரமும் தன்னாட்சியும் வேண்டி நிற்கும் தமிழரின் போராட்ட நிலைப்பாட்டை, இந்த அரசியல் ஆவணம் தெளிவாக முன்வைக்கிறது.

## தமிழர்கள் எதற்காக ஆயுதம் ஏந்தினார்கள்?

ஆயுதம் தரித்த விடுதலை இயக்கத்தின் எழுச்சி பற்றியும் வளர்ச்சி பற்றியும் ஆழமாக அறிந்து கொள்வதாயின், தமிழ் மக்களது தன்னாட்சி உரிமை (சுயநிர்ணய உரிமை)ப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குடனேயே அதனை ஆய்வு செய்ய வேண்டும். தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டமானது, அரை நூற்றாண்டு கால படிமுறை வளர்ச்சியுடைய வரலாற்றைக் கொண்டது. அரசின் அடக்குமுறையும் அதற்கு எதிரான தமிழரின் கிளர்ச்சிப் போராட்டமுமாக இந்த வரலாறு விரிகிறது. ஆரம்ப கால கட்டங்களில் தமிழரின் போராட்டமானது, அமைதி வழியில் அமைந்தது. சாத்வீக, சனநாயகப் போராட்ட வடிவங்களாக எழுச்சி பெற்றது. ஆனால், காலப் போக்கில் இராணுவ அடக்குமுறை தீவிரமடைந்து இனக்கொலை பரிமாணம் பெற்றபோது, தமிழரின் உரிமைப் போராட்டம் ஆயுதப் போர் வடிவம் எடுத்தது.

1948 இல் பிரித்தானிய காலனித்துவம் இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் வழங்கி

www.tamilarangam.net



# புலிகளின் ஆயுதப் போரும், அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஓர் உண்மை விளக்கம்

ஆட்சி அதிகாரத்தைப் பெரும்பான்மைச் சிங்களவரிடம் ஒப்படைத்த காலத்தில் இருந்து, தமிழருக்கு எதிரான அரசின் ஒடுக்குமுறை தொடங்கியது. அன்றிலிருந்து மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறிய சிங்கள அரசுகள் திட்டமிட்ட முறையில் மேற்கொண்ட இன ஒடுக்குதல்



சட்டங்களும் நடவடிக்கைகளும், தமிழரின் மொழி உரிமையை – கல்வியுரிமையை – வேலை வாய்ப்புரிமையைப் பறித்தெடுத்தன. படிப்படியாகத் தீவிரமடைந்த அரசின் ஒடுக்குமுறையானது, தமிழரின் சமூகப் பொருளாதார வாழ்வை ஆழமாகப் பாதித்தது. இது ஒருபுறமிருக்க, அரசினால் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் தமிழரின் வரலாற்று மண்ணை பெருமளவில் ஆக்கிரமித்ததுடன், சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றிமைத்து, தமிழரின் பாரம்பரியப் பகுதிகளில் தமிழ் மக்களைச் சிறுபான்மையினராக்கியது. இவ்விதம் சிங்கள அரசின் ஒடுக்குமுறையானது, தமிழரின் இன அடையாளங்களையே அழித்து வரும் நாசகார நோக்குடையதாக அமைந்தது.

சிங்கள அரசின் ஒடுக்குமுறை மோசமடைந்து, தமிழரின் தேசிய தனித்துவத்திற்கு ஆபத்து எழுந்த சூழ்நிலையில், தமிழ் நாடாளுமன்ற அரசியற் தலைமை, வெகுசனப் போராட்டங்களில் குதித்தது. காந்தியின் அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில் மக்களை அணி திரட்டி சாத்வீகப் போராட்டங்களை நடத்தியது. அறுபதுகளின் ஆரம்பத்தில் நிகழ்ந்த சத்தியாக்கிரகப் போராட்டமானது, சமுத்திரமாக சனங்களை ஈர்த்து அரசுக்கு எதிரான வெகுசனக் கிளர்ச்சியாக வெடித்தது. தேசிய எழுச்சியாக விஸ்வரூபம் எடுத்த தமிழரின் அமைதிவழிப் போராட்டங்களை சிங்கள அரசு மனிதாபிமானத்துடன் அணுகவில்லை. மாறாக, இராணுவ வன்முறையைப் பிரயோகித்து மிகவும் மிருகத்தனமாக ஒடுக்கியது.

அகிம்சை வழி தழுவிய அறப்போரின் ஆன்மீகப் பெறுமானத்தைச் சிங்கள இனவாதம் உணர்ந்து கொள்ளவில்லை என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொண்டனர். மனிதாபிமானமற்ற எதிரியின் ஆயுத வன்முறையை மென்முறைப் போரினால் எதிர்கொள்ள முடியாது என்பதையும் அறிந்து கொண்டனர். இதனால், தமிழ் மக்களுக்கு சாத்வீகப் போராட்டங்களில் நம்பிக்கை தளர்ந்தது. நாடாளுமன்ற அரசியல் முறையாலும் பயன் ஏதும் ஏற்படவில்லை. அது பெரும்பான்மையோரின் கொடுங்கோன்மையாக விளங்கியது. இந்த இக்கட்டான நிலையில் வேறு வழி தெரியாது, அன்றைய தமிழ்த் தலைமை சிங்களப் பேரினவாதத்துடன் பேச்சுக்களை நடத்திச் சமரசங்காண முனைந்தது. சமாதானப் பேச்சுக்கள் நடந்தன. இணக்கப்பாடுகள் காணப்பட்டன. உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் செய்யப் பட்டன. ஆனால், தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதை சிங்கள– பௌத்த பேரினவாதம் கடுமையாக எதிர்த்தது. இந்த எதிர்ப்புக்கு அஞ்சிய சிங்களத் தலைமைகள் ஒப்பந்தங்களை முறித்தன. உடன்பாடுகளைக் கிழித்து எறிந்தன.

1972ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த அரசியல் அமைப்புத் திட்டமானது, தமிழருக்கு எதிரான அரசின் அடக்குமுறையின் சிகரமாக அமைந்தது. இந்த அரசியல் யாப்பு சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்திற்கும் முதன்மையளித்து, சிங்கள– பௌத்த பேரினவாதத்தைச் சட்டரீதியாக நிறுவனப்படுத்தியது. அத்துடன் ஒற்றையாட்சி அரசியலில் இருந்து தமிழ்த் தேசத்தை ஓரங்கட்டியது. இந்த நிகழ்வானது, தமிழரின் அரசியற் போராட்டத்தில் ஒரு புரட்சிகரமான – அடிப்படையான – மாற்றத்தைக் கொண்டு வந்தது.

இந்தப் பிரத்தியேக வரலாற்றுச் சூழலில்தான், தமிழ் மண்ணில் ஆயுதப் போராட்ட இயக்கம் பிறப்பை எடுத்தது. அந்நிய ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு அரசியற் சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற இலட்சிய வேட்கையுடன் இவ்வியக்கம் பிறந்தது. தமிழ் மக்களை அடக்கி ஆளவேண்டும் என்ற வக்கிர உணர்வுடன் சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறையின் எதிர்வினையாகவே, ஆயுதம் தரித்த புரட்சி இயக்கம் உருப்பெற்றது. எனவே, தமிழரின் தேசிய சுதந்திரப் போராட்டத்தின் விரிவாக்கமாகவும் வரலாற்று வளர்ச்சியாகவுமே ஆயுதப் போராட்டத்தைக் கொள்ள வேண்டும்.

**தமிழர் எதற்காக ஆயுதம் ஏந்தினார்கள்?** என்று ஆய்வு செய்தால், அதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் உண்டு என்பதைக் கண்டுகொள்ளலாம். இனக்கொலை வடிவம் எடுத்த மிருகத்தனமான ஒடுக்குமுறையில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேறு வழியில்லை என்பதாலும், சமாதான வழிமுறை தழுவிய ஜனநாயகப் போராட்டங்கள் ஈவிரக்கமின்றி ஆயுத வன்முறையால் அடக்கப்பட்டதாலும், அரசியலமைப்பு வழிகளும் நாடாளுமன்றக் கதவுகளும் இறுக மூடப்பட்டதாலும், சமரசப் பேச்சுக்கள் மூலம் சமத்துவத்தையும் நீதியையும் வழங்க சிங்கள ஆட்சியாளர்கள் மறுத்து விட்டதாலுமே தமிழர்கள் ஆயுதமேந்தத் துணிந்தார்கள். பல தசாப்தங்களாகச் சிங்கள இனவாதம் இழைத்த அநீதிகளதும் கொடுமைகளதும் வரலாற்றுக் குழந்தையாகவே, தமிழ் மண்ணில் ஆயுதப் போர் பிறப்பை எடுத்தது.

## தன்னாட்சி உரிமைக்கான ஆயுதப் போராட்டம்

1972ஆம் ஆண்டு, எமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, தமிழரின் அரசியற் போராட்ட வடிவத்தில் அடிப்படையான ஒரு மாற்றம் நிகழ்ந்தது. தமிழரின் அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக ஆயுதம் தரித்த கெரில்லா இயக்கம் ஒன்று தோற்றம் எடுத்து, அரசின் வன்முறைக்குச் சவால்விடுத்து, தமிழரின் அரசியல் உரிமைகளுக்காக ஆயுதமேந்திப் போராடத் துணிந்தது. விடுதலைப் புலிகளின் தோற்றத்துடனும் வளர்ச்சியுடனும் ஆயுதப் போராட்டமானது தமிழரின் அரசியற் போராட்டமாக உயர் பரிமாணம் பெற்று, அமைப்பு ரீதியாகப் பலம்பெற்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டமானது, தெளிவாக வரையறுக்கப்பட்ட அரசியற் கொள்கைத் திட்டத்தில் அமையப்பெற்றிருக்கிறது. தமிழ் மக்களது தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதுதான், விடுதலைப் புலிகளது அரசியற் கொள்கையின் அடிப்படை இலட்சியமாகும். தன்னாட்சி உரிமைக் கோட்பாடானது, ஒரு தேசிய இனமான மக்கள் சமூகத்தின் அரசியல் சுதந்திரத்தை வலியுறுத்துகிறது. இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் தமது தாயகத்தின் அரசியல் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறார்கள். ஈழத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனக் கட்டமைப்புடைய மக்கள் சமூகமாக அமையப் பெற்றிருக்கிறார்கள் என்பதும், அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயகம் உண்டென்பதும், இத் தாயகமானது வடக்கு கிழக்கு மாகாணங்களடங்கிய தொடர்ச்சியான நிலப்பரப்பையுடையதென்பதும் விடுதலைப் புலிகளது நிலைப்பாடாகும். தமிழர்களுக்கு ஒரு தனித்துவமான தாயகப் பூமியும் தனிச் சிறப்பையுடைய மொழியும் பண்பாடும் பொருண்மிய வாழ்வும் மூவாயிரம் ஆண்டுகளாக விரியும் நீண்ட வரலாறும் இருப்பதால், அவர்கள் ஒரு தேசிய கட்டமைப்பிற்கான சகல பண்புகளையும் கொண்டு விளங்கும் ஒரு மக்கள் சமூகமாகும். இவ்விதமான ஒரு தேசிய மக்கள் சமூகம் என்ற வகையில் அவர்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்துடையவர்கள். இத் தன்னாட்சி உரிமை என்பது, ஒரு மக்கள் சமூகம் தனது அரசியற் தலைவிதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும் சுதந்திரமாகும். 1977 ஆம் ஆண்டு நிகழ்ந்த பொதுத் தேர்தலில், தமிழ் மக்கள் தமக்கே உரித்தான தன்னாட்சி உரிமையைப் பிரகடனம் செய்து– ஒரு சுதந்திரமான தனியரசை அமைப்பதற்குப் போராட முடிவெடுத்தார்கள் என்பதும் விடுதலைப் புலிகளது நிலைப்பாடாகும். தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட, தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையிலேயே, விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலைப் போராட்டம் அமைந்திருக்கிறது.

தமிழர் தேசத்திற்குச் சுதந்திரம் வென்றெடுக்கும் புலிகளின் இலட்சியமானது, தனிப்பட்ட முறையில் – தன்னிச்சையாக – எடுக்கப்பட்ட முடிவல்ல. மாறாக, அனைத்துத் தமிழ் மக்களினதும் ஏகோபித்த அபிலாசையை– முழுத் தேசத்தினதும் விருப்பாற்றலை– நிறைவு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும். பல தசாப்தங்களாக அந்நிய ஆதிக்கத்திற்கும் அடக்குமுறைக்கும் ஆளாகியிருந்த தமிழினம், ஜனநாயக வழிமுறை வாயிலாக, தனக்கு உரித்தான தன்னாட்சி உரிமையைப் பிரயோகிக்க முடிவெடுத்தது. இத்தன்னாட்சி உரிமையானது, ஐ. நா சாசனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகளாவிய பொது மனித உரிமை விதியாகும். ஐ. நா சாசனத்து நியமங்கள் தன்னாட்சி உரிமைக்குக் கீழ்க்கண்ட வரைவிலக்கணத்தைக் கொடுக்கிறது: "எல்லா மக்கள் சமூகத்தினரும் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். இந்த உரிமையின் கீழ் அவர்கள் தமது அரசியற் தகுநிலையைத் தாமாகவே சுதந்திரமாகத் தீர்மானிக்கலாம். அத்துடன் தமது பொருண்மிய, சமூக, பண்பாட்டு வாழ்வை மேம்படுத்தும் வழிமுறைகளையும் அவர்கள் சுதந்திரமாகக் கடைப்பிடிக்கலாம்."

ஒரு பொதுசன வாக்கெடுப்பாக நிகழ்ந்த 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தமிழ் மக்கள் தமது அரசியற் தகுநிலையைத் தாமாகவே தீர்மானித்துக் கொண்டார்கள். அதாவது, பிரிந்து சென்று தமது தாயகத்தில் இறைமையுடைய ஒரு தனியரசை அமைப்பதென

> இனக்கொலை வடிவம் எடுத்த மிருகத்தனமான ஒடுக்குமுறையில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேறு வழியில்லை என்பதாலும், சமாதான வழிமுறை தழுவிய ஜனநாயகப் போராட்டங்கள் ஈவிரக்கமின்றி ஆயுத வன்முறையால் அடக்கப்பட்டதாலும், அரசியலமைப்பு வழிகளும் நாடாளுமன்றக் கதவுகளும் இறுக மூடப்பட்டதாலும், சமரசப் பேச்சுக்கள் மூலம் சமத்துவத்தையும் நீதியையும் வழங்க சிங்கள ஆட்சியாளர்கள் மறுத்துவிட்டதாலுமே தமிழர்கள் ஆயுதமேந்தத் துணிந்தார்கள். பல தசாப்தங்களாகச் சிங்கள இனவாதம் இழைத்த அநீதிகளதும் கொடுமைகளதும் வரலாற்றுக் குழந்தையாகவே, தமிழ் மண்ணில் ஆயுதப் போர் பிறப்பை எடுத்தது.

www.tamilarangam.net



முடிவெடுத்தார்கள். தனியரசை அமைத்துத் தருவதாக உறுதியளித்து, தமிழ் மக்களிடமிருந்து ஒரு தெளிவான ஆணையைப்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி, தனது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறி தமிழினத்திற்குத் துரோகம் இழைத்தது. ஆனால், விடுதலைப் புலிகளோ தமிழினத்தின் ஆணையை ஏற்று, தமிழரின் தேசிய அபிலாசையை நிறைவு செய்யும் நோக்குடன், தன்னாட்சி உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராடி வருகிறார்கள்.

# புலிகளின் ஆயுதப் போரும், அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஓர் உண்மை விளக்கம்




சிறிலங்கா அரசானது, தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை விடாப்பிடியாக மறுத்து வருகிறது. தமிழரை ஒரு மக்கள் சமூகமாகவும் ஏற்க மறுக்கிறது. பல்லினக் கோட்பாட்டை வலியுறுத்தும் சிங்கள ஆட்சிப்பீடம், தமிழரை ஒரு சிறுபான்மை இனக் குழுவாகச் சித்தரித்து, தமிழரின் தாயகத்தையும் தேசியத்தையும் நிராகரித்து வருகிறது. அதேசமயம், அரசியல் அமைப்பில் திருத்தம் செய்து தன்னாட்சி உரிமைக்கோரிக்கையையும் சட்ட விரோதமானதாக ஆக்கியுள்ளது. இது ஒருபுறமிருக்க, தமிழர்கள் மீது முழு அளவிலான போரை ஏவிவிட்டு, அவர்களது அரசியற் சுதந்திரப் போராட்டத்தையும் நசுக்க முனைகிறது. அத்துடன், தமிழரின் தன்னாட்சி உரிமையை வென்றெடுக்க ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளை இனவாதிகள், பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என அவதூறாகக் கண்டித்தும் குற்றஞ் சாட்டியும் வருகிறது.

## சர்வதேச அங்கீகாரம்

சர்வதேச ராஜதந்திர அரங்கில் சிறிலங்கா அரசு மேடையேற்றிவரும் மிகவும் அபாண்டமான பொய்ப்பிரச்சாரத்தின் பின்னணியில், தமிழ் மக்களும் தமது தன்னாட்சி உரிமைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை விளக்கி, உலகெங்கும் தீவிரமான பரப்புரைகள் செய்து வருகின்றனர். இனக்கொலை வடிவத்தில் பேயுருவம் எடுத்துள்ள அரச பயங்கரவாதத்திற்கு எதிராக, தற்காப்புக் கருதி ஆயுதம் ஏந்திப் போராடும் உரிமை தமக்குண்டு எனவும் அவர்கள் வாதாடி வருகிறார்கள்.

ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமைக்கு அங்கீகாரம் வேண்டி, தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் சர்வதேசப் பிரச்சார இயக்கம், ஐ. நா சபையின் முக்கிய நிறுவனமான ஐ. நா மனித உரிமை ஆணைக்குழுவில், கடந்த பல ஆண்டுகளாக சூடுபிடித்து வருகிறது. தமிழரின் தன்னாட்சி உரிமைக்கோரிக்கை நியாயமானதும் சட்ட ரீதியானதுமென, ஐ. நா அந்தஸ்துப் பெற்ற அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் வாதாடி வருகின்றன. தமிழரின் கோரிக்கையை ஐ. நா மனித உரிமை ஆணைக்குழு அங்கீகரிக்க வேண்டுமெனவும் இந்நிறுவனங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

1993ஆம் ஆண்டு பெப்ரவரியில், ஐ. நா மனித உரிமைக் குழுவின் 49ஆவது மாநாட்டில், அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் பல கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில், தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தன. "காலனித்துவம் அல்லது அந்நிய ஆதிக்கம் அல்லது அந்நியப் படையெடுப்பின் கீழ் வாழும் மக்களின் தன்னாட்சி உரிமையும் அதன் பிரயோகமும்" என்ற தலைப்பில் நிகழ்ந்த இம் மாநாட்டில் விடுக்கப்பட்ட இக்கூட்டறிக்கை, கீழ்க்கண்டவாறு எடுத்துக் கூறுகிறது:

"வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்கள், பல நூற்றாண்டுகளாக, தெளிவாக வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லைகளையுடைய பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறார்கள். பழம்பெரும் மரபும் வரலாறும் சீரிய பண்பாடும் 2500 ஆண்டுகளுக்கு மேலாக மூலவேர் பதித்திருக்கும் ஒரு உயிருள்ள மொழியும் அவர்களுக்கு உண்டு, தெளிவாக வரம்பிடப்பட்ட ஒரு மாநிலத்தில், வாழ்வால் ஒன்றுபட்ட இனவுணர்வுப் பிரக்ஞையுடன் ஒரு சமூகக் கட்டமைப்பாக வாழும் இம்மக்கள், அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடி வருகிறார்கள். இவர்கள் ஒரு மக்கள் சமூகமாக அமையப்பெற்றிருக்கிறார்கள். இம் மக்களுக்குத் தன்னாட்சி உரிமையுண்டு. இலங்கைத்தீவின் வடக்கு- கிழக்கில் வாழும் தமிழர்களை ஒரு மக்கள் சமூகமாக ஏற்று, அவர்கள் தமது அரசியல் தகுநிலையைத் தாமே தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளவர்கள் என்பதைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டிய ஒரு அவசரத் தேவை இன்று எழுந்துள்ளது."

இலங்கையின் வடக்கு- கிழக்கு மாநிலத்தைத் தமிழரின் தாயகமாக ஏற்று, தமிழரின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கக் கோரி ஐ. நாவுக்கு அறிவுரை வழங்கும் தகுதியுடைய அரசு சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் கூட்டாக விடுத்த இவ்வறிக்கையானது, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்குச் சர்வதேச அரங்கில் கிடைத்த ஒரு வெற்றி என்பதில் ஐயமில்லை. தமிழரின் சர்வதேசப் பிரச்சார இயக்கத்திற்கும் இதுவொரு முன்னேற்றகரமான திருப்பமாகவும் அமைந்தது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக ஐ. நா மனித உரிமை ஆணைக்குழு இன்றுவரை, பாரதூரமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்பது உண்மை. எனினும், தன்னாட்சி உரிமையின் அடிப்படையில், தமிழரின் நியாயபூர்வமான தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய உருப்படியான நடவடிக்கைகளை எடுக்குமாறு, கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஐ. நா மனித உரிமை ஆணைக்குழுவிடம் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும், தமிழருக்கு எதிரான சிங்கள அரசின் ஆக்கிரமிப்புப் போர் தீவிரமடைந்து தமிழரின் நிலை மோசமடைந்து வருவதால், தமிழரின் உரிமைக் குரல் ஐ. நா அரங்குகளில் மேலோங்கி வருவதைக் காணலாம்.

ஆரம்பத்தில், தன்னாட்சி உரிமைக் கோட்பாடானது, காலனித்துவ ஆட்சிக்கு எதிராக, தேச சுதந்திரம் கோரி நடாத்தப்பட்ட விடுதலைப் போராட்டங்களுக்கே பயன்படுத்தப்பட்டது. ஆனால், சமகால வரலாற்றுச் சூழலில் இக் கோட்பாடானது, பல்வேறு ஒடுக்குமுறை வடிவங்களுக்கு எதிராகப் போராடும் மக்களின் உரிமைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, இனவாத அரசுகளின் அடக்குமுறை அல்லது அந்நிய ஆதிக்கம் அன்றி அந்நியப் படையெடுப்பு போன்ற ஒடுக்குமுறைகளைச் சந்தித்து நிற்கும் மக்களுக்கும் இந்த உரிமை உரித்தாகிறது. இங்கு அந்நிய ஆதிக்கம் என்பது, ஒரு தேசத்தின் மீது இன்னொரு தேசம் திணிக்க முயலும் ஆதிக்கத்தையே குறிக்கிறது.

தமிழ் மக்கள் சிங்கள இனவாத அரசின் அடக்குமுறைக்கு ஆளாகி நிற்கிறார்கள். அந்நிய தேசமான சிங்களத்தின் இராணுவ ஆதிக்கத்திற்கும் படையெடுப்பிற்கும் உட்பட்டு நிற்கிறார்கள். ஆயுத பலத்தால் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி, அவர்களை சிங்கள இராச்சியத்துடன் பலவந்தமாக இணைத்துவிட, மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் விடாப்பிடியாக முனைந்து வருகின்றன என்பது வரலாற்று உண்மை. இந்த வரலாற்று உண்மை சந்தேகத்திற்கு இடமின்றி ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நிய ஆதிக்கத்தையும் இனவாத அடக்குமுறையையும் தெளிவுற நிரூபிக்கும் உண்மைச் சம்பவம் இது. இந்த வகையில், சர்வதேசச் சட்டத்தின் நியமங்களையும் வரையறைகளையும் தமிழர்கள் பூர்த்தி செய்வதால், அவர்களுக்கு தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தும் தகுதியுண்டு. தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு ஆயுதம் ஏந்திப் போராடும் உரிமையும் உண்டு. இன்னொரு வகையில் சொல்லப் போனால், தமிழர்களது ஆயுதப் போராட்டமானது சர்வதேசச் சட்டத்தின்படி ஒரு நியாய பூர்வமான அரசியற் போராட்டமாகும்.

## விடுதலைப் புலிகள் ஒரு விடுதலை இயக்கம்

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டும் இலட்சியத்துடன், விடுதலைப் புலிகள் இயக்கமானது, சிங்கள அரசின் இராணுவ ஆதிக்கத்திற்கு எதிராக ஆயுதம் தரித்த விடுதலைப் போரை நடத்தி வருகிறது. தன்னாட்சி உரிமைக் கோரிக்கையில் தளராத உறுதிபூண்டு, நீண்டகாலமாகத் தமிழரின் அரசியல் சுதந்திரத்திற்காக இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் போராடி வருவதால், விடுதலைப் புலிகள் இயக்கமானது ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற தகுதியைப் பெற்றிருக்கிறது. எழுபதுகளின் ஆரம்பத்தில் உதயம் பெற்று, இரு தசாப்தங்களுக்கு மேலாக தமிழரின் போராட்ட சக்தியாக, இரத்தம் சிந்தும் இலட்சியப் போர் புரிந்து - அதியுயர் அர்ப்பணிப்புகளைச் செய்து வருவதால், தமிழீழ மக்கள் மத்தியிலும் அனைத்துலகத் தமிழர் மத்தியிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் பரந்துபட்ட நல்லாதரவைப் பெற்றிருக்கிறது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றமைக்குப் புலிகளின் விடுதலைப் போராட்டமே பிரதான காரணம் என்பதை எவரும்



மறுக்க முடியாது.

விடுதலைப் புலிகள் இயக்கமானது, பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் சிறிய- ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிக்காரக் குழு என்றும், புலிகள் இயக்கம் தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டு நிற்பதாகவும் சிறிலங்கா அரசு அடிக்கடி வலியுறுத்தும் கருத்து உண்மைக்கு மாறான விசமப் பிரச்சாரமாகும். விடுதலைப் புலிகளுக்கு பரந்துபட்ட மக்களின் நல்லாதரவுண்டு என்பதை நிரூபிப்பதற்கு, அவர்களது நீண்ட- 25 வருடகால- அரசியல் இராணுவ வரலாறே போதுமானது. ஆயுதந்தாங்கிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும்

www.tamilarangam.net



# புலிகளின் ஆயுதப் போரும், அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஓர் உண்மை விளக்கம்

கெரில்லா இயக்கங்கள் மக்கள் ஆதரவின்றி நிலைத்திருக்க முடியாது என்பது, வரலாற்றில் பதிவாகிய உண்மை. ஒரு நீண்ட வரலாறும், பலம்மிக்க இராணுவ சக்திகளுடன் (இந்திய இராணுவம் உட்பட) தளராத உறுதியோடு போர் நிகழ்த்தும் வல்லமையும், அரசியல் நடவடிக்கைகளில் அலையலையாக சனத்திரளை அணி திரட்டும் ஆற்றலும், விடுதலைப் புலிகளை ஒரு தேசிய சுதந்திர இயக்கம் என்ற அந்தஸ்திற்கு உயர்த்தியுள்ளன. விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் ஒரு நிலையான இராணுவம் உள்ளது. பல்லாயிரம் விடுதலைப் போராளிகளைக் கொண்ட ஒரு தேசிய விடுதலைப் படையாக அது இயங்குகிறது. இந்த விடுதலை இராணுவத்திற்கு ஒரு கட்டளைத் தலைமையும், உயர் இராணுவப் பயிற்சி வசதிகளும், நவீன படைக்கலன்களும், பரந்த கட்டுப்பாட்டுப் பிரதேசங்களும், சிங்கள ஆயுதப்படைகளுடன் மரபுவழிப்போரில் சண்டையிடும் வல்லமையும் ஆற்றலுமுண்டு. விடுதலைப் புலிகளிடம் ஒரு அரசியல் அமைப்பும் உண்டு. அதன் கீழ் சமூக, பொருண்மிய, கல்வி, பண்பாட்டுப் பிரிவுகள் செயற்படுகின்றன. விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சட்டம் ஒழுங்கையும், நீதி பரிபாலனத்தையும், சிவில் நிர்வாக அலகுகளையும் செயற்படுத்தி வருகின்றனர். பல்முகக் கூட்டமைப்பான ஒரு கட்டமைப்பைக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம், ஒருபுறம் ஆயுதப் போராட்டத்தையும் மறுபுறம் அரசியற் போராட்டத்தையும் இன்னொரு புறம் சிவில் நிர்வாகத்தையும் செயற்படுத்தும் இலக்கைக் கொண்டதாக அமையப்பெற்றிருக்கிறது. அத்தோடு, உலகத்தின் தலைநகரங்களில் செயற்படும் ஒரு பரந்த சர்வதேச அமைப்பும் புலிகளிடமுண்டு.

தமிழரின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு தேசிய விடுதலை இயக்கமாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ள, சிறிலங்கா அரசு அன்றிலிருந்து இன்றுவரை விடாப்பிடியாக மறுத்து வருகிறது. அவ்விதம் ஏற்றுக்கொள்ளுவது தமிழரின் போராட்டத்தை ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக அங்கீகரிப்பதாக முடியுமென, சிங்கள அரசு அஞ்சுகிறது. பல தசாப்தங்களாக தமிழர்களின் உரிமைகளைப் பறித்து, தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, தமிழருக்கு நீதி வழங்குவதை மறுத்து வரும் ஒரு இனவாத அரசிடம் யாருமே உண்மையையும் நேர்மையையும் எதிர்பார்க்க முடியாது. தமிழரின் தேச சுதந்திர இயக்கத்தைச் சிறுமைப்படுத்துவதிலும், கொச்சைப்படுத்துவதிலும், இழிவுபடுத்துவதிலுமே சிறிலங்காவின் பாரிய பிரச்சார இயந்திரம் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. சிங்கள ஆட்சியாளரின் குருட்டுத்தனமான இனவாதப் பார்வையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பாகவும், தமிழரின் சுதந்திரப் போராட்டம் பயங்கரவாதிகளின் போராகவும் திரிவு படுத்தப்படுகிறது.

மிகவும் கடுமையான இனவாத நிலைப்பாட்டை எடுத்து, விடுதலைப் புலிகளை மிகவும் இழுக்கான வார்த்தைகளில் தூற்றி வந்த போதும், சிங்களத் தலைமைகள் வெவ்வேறு காலகட்டங்களில், பல்வேறு சூழ்நிலைகளில், புலிகளைத் தமிழரின் அரசியல்– இராணுவ சக்தியாக ஏற்று அவர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியிருந்தது. திம்புவிலும், டெல்லியிலும், பெங்களூரிலும், கொழும்பிலும், சமீபத்தில் யாழ்ப்பாணத்திலுமாக சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியது. எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி, விடுதலைப் புலிகளை தமிழரின் அரசியல் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டே இந்தப் பேச்சுக்களில் சிறிலங்கா பங்குபற்றியது. இவ்விதம் பேச்சுக்களின் போது, புலிகளுக்கு வழங்கப்படும் அங்கீகாரம், பேச்சுக்கள் முறியும் போது நீக்கப்பட்டு விடுகிறது! சமாதான காலத்தில் புலிகளை மக்கள் இயக்கமாக அங்கீகரிப்பதும், பின்பு போர்க்காலத்தில் அவர்களைப் பயங்கரவாத இயக்கமாக இழிவுபடுத்துவதும், சிறிலங்காவின் மிகவும் விசித்திரமான-கேலிக்கூத்தான-அரசியல் நாடகம் என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும்.



## சிறிலங்கா அரசின் அந்தரங்க நோக்கங்கள்

1983 ஆம் ஆண்டு யூலையில் வெடித்த இனவாதப் பூகம்பத்தில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, தமிழரின் தேசிய இனப் பிரச்சினை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றது. சிறிலங்காவின் படுபாதகமான மனிதஉரிமை மீறல்களைக் கண்டு, சர்வதேச சமூகம் அதிர்ச்சியடைந்தது. இந்த கொடிய இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பெரும் தொகையில் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற பிற தேசங்களில் அரசியற் தஞ்சம் புகுந்தனர். இதனையடுத்து, அபிவிருத்தி கண்ட செல்வந்த நாடுகளின் அக்கறையும் கவனமும் இலங்கைத்தீவின் அரசியல் மீது திரும்பியது. தமிழர்களின் நிலை குறித்துக் கவலையடைந்த மேற்குலக நாடுகள் சில, சிறிலங்காவிற்கு வழங்கும் நிதியுதவியை மனித உரிமைப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்தி, மனித உரிமையை மேம்பாடு செய்வதன் அடிப்படையில் உதவி வழங்கப்படுமென வலியுறுத்தி வந்தன. ஆயினும், மேற்குலகின் இந்த அழுத்தங்கள் எவ்வித பயனையும் அளிக்கவில்லை. சிறிலங்காவின் ஒடுக்குமுறை ஆட்சியில் எவ்வித மாற்றங்களும் நிகழவில்லை. எனினும் தற்போதைய சிங்கள அரசு சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்குடன் விசாரணைக் குழுக்களையும், மனித உரிமை ஆணைக்குழுக்களையும் நியமித்து சில கண்துடைப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. ஆனால், இலங்கைத்தீவானது தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாதச் சட்டத்தின் கீழும், இராணுவ– பொலிஸ் கொடுங்கோன்மையின் கீழும் ஆளப்பட்டு வருகிறது என்பதுதான் உண்மை. தென்னிலங்கையில் அரசுக்கு எதிரான சக்திகள் காவல்துறையினரின் பயமுறுத்தல்கள், கைது, தடுப்புக்காவல், தாக்குதல் போன்ற கொடுமைகளைச் சந்தித்து வருகின்றன. அங்கு அரசியல் சுதந்திரங்களை நசுக்கிவிட அரசு இரும்புக்கரத்தைப் பாவிக்கின்றது. வட–கிழக்கில் நிலைமை படு மோசமாக உள்ளது. இங்கு, இராணுவ நடவடிக்கைகள் என்ற போர்வையில் தமிழருக்கு எதிராக மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும் இழைக்கப்படுகின்றன. இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளாக மாற்றப்பட்டு, கைதுகளும் காவல்வைப்பும் காணாமல் போதலும் சித்திரவதைகளும் பாலியல் வல்லுறவும் கொலைகளுமாக மிகவும் மிருகத்தனமான இராணுவப் பயங்கரவாத ஆட்சி நடைபெறுகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டும் 500 பேருக்கு மேல் காணாமல் போயுள்ளதாக நன்கு ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனித உரிமை நிலைமை படு மோசமாகி, போரும் வன்முறையும் அடக்குமுறையுமாக இலங்கையில் கொந்தளிப்பான நிலை தாண்டவமாடும்போது, உதவி வழங்கும் நாடுகள் தொடர்ந்தும் சிறிலங்காவுக்குப் பாரிய அளவில் நிதியுதவியை வாரி வழங்கி வருகின்றன. இந்த நிதியில் பெரும்பகுதி அரசாங்கத்தின், "சமாதானத்திற்கான போருக்கு" செலவாகி வருகின்றது. மனித உரிமையோடு நிதியுதவியைத் தொடர்புபடுத்திய செல்வந்த நாடுகள், அந்த அழுத்தத்தைப் பிரயோகிக்கத் தயக்கம் காட்டுவதால், அது சந்திரிகா அரசுக்கு ஊக்கத்தை அளித்திருப்பதுடன் அவரது கொடூரமான ஒடுக்குமுறை ஆட்சியையும் நீடிக்கவும் வழிகோலியுள்ளது. இது ஒருபுறமிருக்க, போரினால் எழுந்த மாபெரும் மனித அவலங்களைக் கருத்திலெடுக்காது, மனிதாபிமான உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் சில வெளிநாடுகள் தொடர்ந்தும் சிறிலங்காவிற்கு அழிவு ஆயுதங்களை வழங்கி வருகின்றன. உலகத்திடமிருந்து பெருந்தொகையில் நிதியுதவியும், பெருமளவில் ஆயுத உதவியும் குவிந்து வருவதால் உற்சாகம் பெற்றிருக்கும் சிங்கள அரசு தமிழருக்கு எதிராக ஈவிரக்கமற்ற இராணுவ அடக்குமுறைக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகிறது. இதே சமயம், போர் விரிவடைந்து தீவிரமாகி தமிழரின் தேசியப்பிரச்சினை மேலும் மோசமாகி வருவதையிட்டுக் கவலைப்படும் வெளிநாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. நெருக்கடியில் பிரதான பாத்திரங்களை வகிக்கும் விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் பேச்சுக்களை நடத்தி, ஒரு அரசியல் தீர்வைக் காணவேண்டுமென இந் நாடுகள் ஆலோசனை கூறிவருகின்றன. விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் பரஸ்பரம் அவநம்பிக்கையும், பகைமையும் இருப்பதாலும் இரு தரப்பினர் மத்தியில் நிகழ்ந்த நேரடிப்பேச்சுக்கள் முறிந்து போனதாலும் பேச்சுக்களுக்கு மத்தியத்துவம் வகிக்க அல்லது பேச்சுக்களுக்கு வசதிசெய்து கொடுக்க சில நாடுகள் முன்வந்துள்ளன.

நோர்வே, சுவீடன், கனடா, சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா, பிரித்தானியா போன்ற நாடுகள் மத்தியத்துவத்திற்கு விருப்புத் தெரிவித்துள்ளன. மூன்றாம் தரப்பு சர்வதேச மத்தியத்துவத்தை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமை வரவேற்றபோதும் சிறிலங்கா அரசு அதற்கிணங்க மறுக்கிறது. தமிழரின் பிரச்சினை ஒரு உள்நாட்டு விவகாரம் எனக்கூறி, சர்வதேச மத்தியத்துவத்தை நிராகரித்து வருகிறது.

சிறிலங்கா அரசானது சர்வதேச மத்தியத்துவத்தை மறுத்து வருவதற்குச் சில காரணங்களுண்டு. முதலாவதாக, தமிழரின் தேசிய பிரச்சினை உலக அரங்கில் ஏறி சர்வதேச நெருக்கடிகளில் ஒன்றாகக் கருதப்படுவதை சந்திரிகாவின் அரசு விரும்பவில்லை. இரண்டாவதாக, தமிழர் போராட்டத்தின் பிரதான கதாநாயகனாக விடுதலைப் புலிகள்

> தற்போதைய சிங்கள அரசு சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்குடன் விசாரணைக் குழுக்களையும், மனித உரிமை ஆணைக்குழுக்களையும் நியமித்து சில கண்துடைப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. ஆனால், இலங்கைத்தீவானது தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாதச் சட்டத்தின் கீழும், இராணுவ – பொலிஸ் கொடுங்கோன்மையின் கீழும் ஆளப்பட்டு வருகிறது என்பதுதான் உண்மை.

www.tamilarangam.net



# புலிகளின் ஆயுதப் போரும், அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஓர் உண்மை விளக்கம்

இயக்கத்திற்கு அந்தஸ்து கிடைப்பதைச் சிங்கள அரசு விரும்பவில்லை. மூன்றாவதாக, தமிழரின் தன்னாட்சிக் கோரிக்கை நியாயமானதென நாகரீக உலகம் அனுதாபம் காட்டலாம் என்ற அச்சமும் சிறிலங்காவுக்கு உண்டு. நான்காவதாக, சமாதான முயற்சிகளுக்குப் பதிலாக இராணுவப் பாதையையே கொழும்பு அரசு விரும்புகிறது. தமிழரின் தாயகத்தை ஆக்கிரமித்து தமிழரை அடக்கி ஆளும் இராணுவக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலமே சிங்கள–பௌத்த பேரினவாதத்தை திருப்திப்படுத்தி, அதன் ஆதரவை வென்றெடுக்கலாம் என அரசு கருதுகிறது.

இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டமானது, சிங்கள அரசுக்கும் புலிகளுக்கும் மத்தியில் பரஸ்பர பகைமையையும், நம்பிக்கையீனத்தையும் உருவாக்கி இருக்கிறது என்பது உண்மை. இரு தரப்பினர் மத்தியிலும் நடந்த பேச்சுக்கள் முறிவடைவதற்கு இந்த பரஸ்பர பகைமையும் நம்பிக்கையீனமுமே காரணம். இதன் காரணமாகவே, எதிர்காலத்தில் சர்வதேச மத்தியத்துவத்தின் கீழ் பேச்சுக்கள் நடைபெறுவது பயனளிக்குமென விடுதலைப் புலிகள் இயக்கம் நம்புகின்றது. ஆனால், சிறிலங்கா அரசு நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டிய காரணங்களின் நிமித்தம் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தை விரும்பவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குச் சிங்கள அரசு பின்னடிப்பதற்கு வேறும் சில காரணங்களுண்டு.

சிங்கள இனவாத ஆட்சியாளரின் பார்வையில் விடுதலைப் புலிகள் ஒரு தீவிரவாத இயக்கம். தமிழரின் தனித்துவம், தாயகம், தேசியம் என்ற தமிழினத்தின் ஒட்டுமொத்தமான விருப்பாற்றலைக் குறியீடு செய்து நிற்கும், ஒரு புரட்சிகர விடுதலை இயக்கமாக விடுதலைப் புலிகளை இவர்கள் கருதுகிறார்கள். ஏனைய தமிழ்க்குழுக்கள், தமிழ் மக்களின் அடிப்படைக் கொள்கைகளைக் கை விட்டு எந்தச் சலுகைகளையும் ஏற்கத் தயாராக இருக்கும் பொழுது விடுதலைப் புலிகள் மட்டும், கொண்ட இலட்சியத்தை இறுகப்பற்றி தமிழரின் தேசிய அபிலாசைகளை வென்றெடுப்பதில் உறுதியாக நிற்கிறார்கள் என்பதையும் சிங்கள ஆளும்வர்க்கம் நன்கு உணர்ந்து இருக்கிறது. ஆகவே, புலிகளுடன் பேசுவதாயின், தமிழர் பிரச்சினையின் அடிப்படைகள் பற்றிப் பேச வேண்டும். ஆனால், இந்த அடிப்படைகள் பற்றி விவாதிக்கக்கூட சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. தமிழர்களின் தேசிய அபிலாசைகளையும் உணர்வுகளையும் முற்றாக உதாசீனம் செய்து, பிறிதொரு அரசியற் கருத்துலகில் தமிழரின் பிரச்சினையை நிலைநிறுத்த முனைகிறார்கள். இலங்கையானது, பல இனக்குழுக்களைக் கொண்ட ஒரு சமூகக் கட்டமைப்பு என்பதும் அதில் ஒரு சிறிய இனக்குழுவாகத் தமிழர்கள் அமைந்துள்ளார்கள் என்பதும் இதன் அடிப்படையில் தேசிய தனித்துவம், தாயகம் என்ற தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்கமுடியாது என்பதும் சிறிலங்காவின் நிலைப்பாடு. இந்த நிலைப்பாடு காரணமாகவே, நேரடியாகவோ அன்றி மூன்றாம் தரப்பு நடுநிலைமையுடனோ விடுதலைப் புலிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்த சிங்கள ஆட்சிப்பீடம் தயக்கம் காட்டுகிறது. விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக ஓரங்கட்டி விடுவதே அரசின் நோக்கம். தற்போதைய இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இந்த நோக்கத்தையே சுட்டிக்காட்டுகின்றன. தமிழரின் வரலாற்றுத் தாயகத்தை இராணுவ ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தால், தமிழரின் தாயக தன்னாட்சிக் கோரிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்பதும் அதனால் இக் கோரிக்கைகளை முன்னெடுக்கும் புலிகளின் போராட்டத்திற்கும் முடிவு கட்டிவிடலாம் என்பதும் சிங்கள அரசின் திட்டமாகும்.

இந்த அந்தரங்க நோக்கங்களின் அடிப்படையிலேயே சந்திரிகா குமாரதுங்க அரசின் இராணுவ, அரசியல் அணுகுமுறைகள் அமையப் பெற்றுள்ளன. ஆனால், சிறிலங்காவின் பரப்புரை இயந்திரங்கள் உலக சமுதாயத்திற்கு வித்தியாசமான ஒரு கதையை எடுத்துக்கூறுகின்றன. உண்மையான நோக்கங்களை இருட்டடிப்புச் செய்து, பொய்யான புனைகதைகளை எடுத்துக்கூறி வருகின்றன. "பயங்கரவாத அச்சுறுத்தல்" என்றும், "சமாதானத்திற்கான போர்" என்றும் "புலிகளின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து தமிழரை விடுதலை செய்வது" என்றும் கற்பனாவாதக் கட்டுக்கதைகளை கூறிவருகின்றன. சிறிலங்கா அரசின் இந்தப் பொய்ப் பிரச்சாரங்களை நம்பி ஏமாந்து போகாமல், சுதந்திரத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் தமிழர் நடத்திவரும் நியாயமான போராட்டத்தின் உண்மைக் கதையை உலக சமூகம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே எமது ஆவல்.

சிறிலங்காவின் பரப்புரை இயந்திரங்கள் உலக சமுதாயத்திற்கு வித்தியாசமான ஒரு கதையை எடுத்துக்கூறுகின்றன. உண்மையான நோக்கங்களை இருட்டடிப்புச் செய்து, பொய்யான புனைகதைகளை எடுத்துக்கூறி வருகின்றன. "பயங்கரவாத அச்சுறுத்தல்" என்றும், "சமாதானத்திற்கான போர்" என்றும் "புலிகளின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து தமிழரை விடுதலை செய்வது" என்றும் கற்பனாவாதக் கட்டுக்கதைகளை கூறிவருகின்றன. சிறிலங்கா அரசின் இந்தப் பொய்ப்பிரச்சாரங்களை நம்பி ஏமாந்து போகாமல், சுதந்திரத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் தமிழர் நடத்திவரும் நியாயமான போராட்டத்தின் உண்மைக் கதையை உலக சமூகம் அறிந்து கொள்ள வேண்டும்.

**அரசியற் குழு,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**
**தமிழீழம்**

# சங்க காலத்துப் புலிகளை.....

"மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவருள்ளும்
இலங்கு நீர்ப்பரப்பின் வளைமீக்கூறும்
வலம்புரி என்ன வசை நீங்கு சிறப்பின்
அல்லது கடிந்து அறம்புரி செங்கோல்
பல்வேற் திரையன்"

சங்குகளில் வலம்புரிச் சங்கு சிறப்பாக இருத்தல்போல், மூவேந்தர்களிலும் இளந்திரையன் சிறப்பாகச் செங்கோல் செலுத்துவதாக புலவர் சொல்கிறார்.

பெரும்பாணாற்றுப்படையில் குறிஞ்சியின் இயல்பும், முல்லையின் இயல்பும், அங்கு வாழ்ந்த பண்டைய குடிகளான உமணர், எயினர், காணவர், குறும்பர், மறவர், ஆயர், உழவர், வலைஞர், அந்தணர் பற்றியும் அவர்களது உணவியல்பு பற்றியும் உறைவிடம் பற்றியும் விரிவாக எடுத்துச் சொல்லப்படுகிறது.

அச்சம் என்றால் என்னவென்பது தெரியாத மறக்குடி மறவர் பற்றி புலவர் சிறப்பித்துச் சொல்கிறார். மறவர் மட்டுமல்ல அஞ்சும் இயல்புடைய மகளிரும் அஞ்சார் என மறக்குடியின் தறுகண்மையை புலவர் ஏற்றிப் போற்றுகிறார். இதனை:

*''யானை தாக்கினும் அரவுமேற் செலினும்*
*நீளிரு விசும்பின் வல்லேறு சிலைப்பினும்*
*சூல் மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை*
*வலிக்கூட்டுணவின் வாட்குடிப் பிறந்த*
*புலிப்போத்தன்ன புல்வுணர் காளை*
*செல்நாயன்ன கருவிற் சுற்றமொடு*
*கேளா மன்னர் கடிபுலம் புக்கு*
(பெரும்பாணாற்றுப்படை, 134 – 141)

களிற்று யானை தன்னைத்தாக்க வந்தாலும் பாம்பு தன்மீது ஊர்ந்து சென்றாலும், நீல நிறத்தை உடைய முகில் இடி இடித்தாலும் இவற்றிற்குக் கூட சூழ் கொண்ட மகள் அஞ்சி மீளாத மறம் பூண்ட வாழ்க்கையினையும் தனது வலியால் பகைவரைக் கொள்ளை கொண்டுண்ணும் உணவினையும் உடைய, வாழ்த்தொழிலே செய்யும் குடியிற் பிறந்த ஆண்புலியை ஒத்த புல்லிய தாடியை உடைய அந்நிலத்துத் தலைவன் தான் குறித்த விலங்கின் மேலே செல்கின்ற நாய் அதனைத் தப்பாது கொள்ளுமாறு போன்று குறித்தது கொள்ளும் கொடிய வில்லையுடைய காவலாளருடனே தன் சொற்கேளாத பகை மன்னருடைய காவல் அமைந்த நிலத்தே சென்று, விடியற் காலத்தே அவர்கள் ஆன்களை பற்றிக் கொண்டுவந்து. . .

செல். நாய் அன்ன சுற்றம் என்பதற்கு தன் தலைவன் பின்தொடர்ந்து செல்லும் நாய் போன்றே சுற்றம் என்றும் பொருள் கொள்ளலாம்.

வெறுமனே மகளிர் என்னாது சூழ் கொண்ட மகளிர் எனப் புலவர் கூறுவது இங்கே வியந்து நோக்கத்தக்கது. நிலவளத்திற்கு ஏற்ப விதையும் வளமுடையதாம் என்பது போல் கருவுற்ற மகளும் அஞ்சாள் என வியந்து போற்றுகிறார். எனவே தறுகண்மை (வீரம், மறம்) அக்குடி மறவர்க்கு கருவிலே உண்டாய திருவாமிற்று

பெரும்பாணாற்றுப்படையில் அன்றைய மறவர்களது வீரத்தை சொல்லோவியமாகத் தீட்டி அன்றிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு இப்பால் வாழும் எங்களுக்கு விட்டுப் போயிருக்கும் உருத்திரங் கண்ணனார் என்னும் பெரும் புலவருக்கு நன்றி நவில நாம் கடமைப் பட்டுள்ளோம். அதேவேளை அந்தச் சங்க காலத்துப் புலிகளையும் விஞ்சும் ஆண்புலிகள் மட்டுமல்ல பெண்புலிகளும் இன்று இருப்பது சங்க காலம் மீண்டும் பிறந்திருப்பதை பறைசாற்றுகிறது என்று சொன்னால் அது கொஞ்சமும் மிகையல்ல. இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் தோன்றும் தமிழினம் இன்றைய புலிகளின் வீரத்தைப் போற்றும் என்பது திண்ணம். ✷

## காலம்

குருவிக் கூடு.
சிறகு முளைக்காத குருவிக் குஞ்சுகள் சிரித்து ஆரவாரித்தன.
மரத்தில் இருந்த அணில், குருவிக் கூட்டுக்குத் தாவி,
'உங்களுக்கு இன்னும் சிறகு முளைக்கவில்லை – சுதந்திரம்
இல்லாத உங்களுக்கு என்ன சிரிப்பு? என்று கேட்டது.
குஞ்சுகள் கவனிக்கவில்லை.
பாம்புக்கு இது வாய்ப்பானது.
குஞ்சுகளின் சிரிப்பொலி
கேட்டு, பாம்பு கூட்டுக்குள்
நுழைந்தது.
நொடிப்பொழுதில் –
பாம்பின் வாயில் குஞ்சுகள்
பலியாகிப் போயின.
அணிலுக்கோ துயரம்
தாங்கவில்லை.
அது மீண்டும் இரைந்து
கத்தியது.
**'சிறகு விரி**
**பிறகு சிரி'**



–புரட்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சங்க காலத்துப் புலிகளை விஞ்சும்
# இன்றைய ஆண்புலிகள் மட்டுமல்ல பெண்புலிகளும்!

தமிழினம் ஒரு தொன்மையான, சிறப்பான நாகரிகத்திற்குச் சொந்தமானது என்பதற்கு சான்றாகத் திகழ்வது சங்க இலக்கியங்கள் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதேபோல சங்ககாலந்தான் தமிழினத்தின் பொற்காலம் என்பதிலும் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவற்றையே நாங்கள் சங்க இலக்கியங்கள் எனக் குறிப்பிடுகின்றோம்.

இதில் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் காலத்தால் முந்தியவை. பதினெண் கீழ்க்கணக்கு காலத்தால் பிந்தியது. இதனால் இதனைச் சங்கம் மருவிய இலக்கியம் எனக் கொள்ளப்படும்.

இந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தவிர்ந்த பிற இலக்கியங்கள் கடற்கோள்களினால் அழியுண்டன. நெருப்பினால் எரியுண்டன. சிதலினால் இறந்துண்டன. சமயப் பூசல்களினால் கிழியுண்டன. கல்லாதார் பலரால் கைவிடப்பட்டன.


- நக்கீரன் -

இவ்வாறு நீரிலும் நெருப்பிலும் அழிந்தொழிந்துபட்ட இலக்கியங்களை ஒரு புலவர் பெருமான் அறுதியிட்டு வருந்திக் கூறியிருக்கிறார்.

"ஏரணம் உருவம் யோகம் இசைக் கிரதம் சாலம்
தாரணம் மறமே சாந்தம் தம்ப நீர் நிலம் உலோகம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும்மாள்"

(பழம் பாடல் திரட்டு)

எனவே, இன்று இருப்பன இவ்வாறு அழிந்தொழிந்து போக எஞ்சியனவே ஆகும். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண் கீழ்க்கணக்கும் பண்டைய தமிழகத்தின் நிலவளத்தையும்



நீர்வளத்தையும் மக்கள் நிலையையும் அவர்களது ஒழுக்கலாறுகளையும் காதலையும் வீரத்தையும் கட்டுரைப்பனவாகும். இவற்றுள் முதற்கண் கூறிய பத்துப்பாட்டுள் நான்காவதாகத் திகழ்வது பெரும் பாணாற்றுப்படையாகும். அதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற பெரும் புலவராவர். ஆசிரியப் பாவினால் பாடப்பட்ட இந்நூல் தொண்டைமான் இளந்திரையன் என்னும் சோழ மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றது. மொத்தம் ஐந்நூறு அடிகளைக் கொண்டது. பட்டினப்பாலை பாடிய அருந்தமிழ்ப் புலவரும் இவரே ஆவர். அதற்காகக் கரிகால் வளவன் பதினாறு நூறாயிரம் பொன் பரிசில் வழங்கினான் என்பர். இதனை,

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்
பத்தோ டாறுநூறு யாயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

என கலிங்கத்துப் பரணிபாடிய செயங்கொண்டார் புகழ்ந்து பாடியிருக்கிறார்.

ஆற்றுப்படை என்பது ஆறு சக படை எனப் பிரிக்கப்பட்டு வழிப்படுத்தல் வழிவழியாக நடந்து செல்லுமாறு கூறுதல் என்பது பொருளாகும்.

அரசாளும் மன்னனிடத்தோ, அள்ளி அள்ளிக் கொடுக்கும் வள்ளலிடத்தோ புலவரோ, பாணனோ பரிசில் பெற்றுவரும் இடைவழியில், எதிரே பசியால் இளைத்து, நடையால் மெலிந்துவரும் இன்னொரு புலவரைப் பாணனைக் கண்டு தான் பெற்ற செல்வத்தை, "இன்னார்பால் பெற்றேன், நீயும் போயின் பெறலாம், அவ்வள்ளல் நாடு இது, அதற்குச் செல்லும் வழி இது, இன்னின்ன இடங்களில் தங்குக, உண்க, இளைப்பாறுக, நடக்க, இறுதியில் அவன்பால் அடைந்தால் நீ வேண்டிய செல்வங்கள் யாவையும் பெறுகுவை" எனக் கூறி ஆற்றுப்படுத்துவது, வழிகாட்டுவது. இதனையே இலக்கியங்கள் ஆற்றுப்படுத்துவது எனக் குறிமீடு செய்து பெயரும் ஆக்கினர். இதனைத் தொல்காப்பியர்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழ தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇ
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"

(தொல். 3 - 32.. . 35)

என்று இவ்வாற்றுப்படைக்கு இலக்கணம் வகுத்துரைக்கிறார். இவ்வாறு அமைந்ததே இப்பெரும்பாணாற்றுப் படையாகும். இதுபோன்றே பத்துப்பாட்டு நூலில் திருமுருகாற்றுப்படை, பொரு நராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்னும் நான்கும் ஆற்றுப் படை நூல்களாகும். இதிலிருந்து ஆற்றுப்படையின் சிறப்புப் புலனாகும்.

பெரும்பாண் என்றால் பெரிய பாட்டு



எனப் பொருள்படும். பெரிய யாழைத் தாங்கி அதன் நரம்புகளை மீட்டி இசையோடு பாடுவோர் பெரும்பாணர் ஆவர்.

பாணரை அவர் பண்பால் பாண் என்று கொண்டு அவரை ஆற்றுப்படுத்தலால் இதற்கு பெரும்பாணாற்றுப்படை என்ற காரணப் பெயர் கொடுக்கப்பட்டது புலனாகும். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தே" என்ற தொல்காப்பிய சூத்திரம் இங்கு நினைவு கூரத்தக்கது.

இந்தப் பெரும்பாணாற்றுப்படையில் பழங்காலத்து அரசாட்சி, நாடு, நகர், காடு, பறவை, விலங்கு, மக்கள் பழக்க வழக்கங்கள் முதலியவை விளக்கப் படுகிறது. இதனால் இது ஒரு சிறந்த வரலாற்று நூலாகவும் விளங்குகிறது எனலாம். பண்டைக்காலத்து மக்கள் நிலத்தை வைத்தே, மண்ணை முன்னிலைப்படுத்தியே வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். அதனால் மண்ணை வாழ்த்தினார்கள். இதனை ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றால் அறிந்துகொள்ளலாம்.

"நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ
அவலாக உன்றோ மிசையாக ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

(புறம் - 187)

நாடானால் என்ன, காடானால் என்ன? மேடானால் என்ன, பள்ளமானால் என்ன? எவ்விடத்தே ஆடவர் நல்லவராக விளங்குகிறாரோ, அவ்விடத்திலே, நிலனே, நீயும் நன்றாக விளங்குவாய். நிலத்தைப் பொறுத்தன்று வாழ்வும் தாழ்வும், அந்நிலத்துவாழ் ஆடவரைப் பொறுத்து இருக்கிறது. ஆள்வோர் சிலர் தம் குறையை நாட்டின் மீதேற்றிக் குறை கூற, நாட்டிலுள்ள ஆண்களின் குறைபாடே அது என உரைக்கிறார் புலவர்.

பெரும்பாணாற்றுப் படைக்குத் தலைவனான தொண்டைமான் இளந்திரையன் சிறந்த மன்னன், வள்ளல், நல்லிசைப் புலவன் எனப் போற்றப்படுகிறான். இம்மன்னன் பாடிய பாடல்கள் நற்றிணையில் மூன்றும், புறத்தில் ஒன்றும் உள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மன்னன் ஒருவன் ஆட்சி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை மிக அழகாகவும், இனிமையாகவும், ஆளமாகவும், தெளிவாகவும் சொல்லியிருக்கிறான். அந்தப் பாடல் இதோ:

"கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்,
ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே,
உய்தல் தேற்றான் ஆயின், வைகலும்,
பகைக்கூழ் அள்ளற்பட்டு,
மிகப்பகு தீநோய் தலைத்தலைத் தருமே"

(புறம் - 185)

உலக இயற்கையை நிலை நிறுத்தி நாட்டிச் செலுத்தப்படும் நாடு, காவலாகிய சகடத்தினை செலுத்துவோம் மாட்சிமை உடையவனாயின், உலக வாழ்வும் கேடற்றுச் சான்றோர் வகுத்த நெறி வழியே நன்கு நடக்கும். அவ்வாறு காத்தல் செய்யான் ஆயின், எந்நாளும் பகை என்னும் சேற்றிலே அழுந்தி அவன் கெடுவதுடன், அவன் குடிமக்களும் பலப்பல துயரங்களுக்கும் உள்ளாகிக் கெடுவர்.

(ஊறு - இடையில் உண்டாகும் கெடுதல்.ஆறு இனிது படும் - வழியில் இனிதாகச் செல்லும்.உய்தல் தேற்றான் ஆயின் - அவன் அதனை இனிதாகச் செலுத்துதலை தெளிய மாட்டான் ஆயின்
பகைக்கூழ் அள்ளற்பட்டு, - பகையாகிய சேற்றிலே அழுந்தி, தலைத்தலைத் தரும் - மேன்மேலும் உண்டாகும்.)

பெரும்பாணாற்றுப் படையைப் பாடிய முத்தமிழ்ப் புலவர் உருத்திரன் கண்ணனார் மூவேந்தர் உள்ளும் தொண்டைமான் இளந்திரையனை "அறம்புரி செங்கோல் பால்வேற் திரையன்" எனப் போற்றுகிறார்.

தொடர்ச்சி 9 ம் பக்கம்...

www.tamilarangam.net



# தமிழனில்லா நாடில்லை

உலகம் எவ்வளவோ சுருங்கிவிட்டது. உலகத்தின் ஒரு மூலையின் முணகல், பூமிக் கோளத்தின் மறுபக்கத்தில் நீட்டி நிமிர்ந்து எதிரொலிக்கும் அளவிற்கு புதுமை விஞ்ஞானத்தின் வளர்ச்சி வாய்ப்பளித்திருக்கிறது. அடிமைப்பட்ட மக்களின் அவல அழுகுரல், வேதனையின் விசும்பல், உள்வீட்டின் விவகாரமாக இல்லாமல், உலக அரசால் உதாசீனப்படுத்தப்பட முடியாத, வினாக்களாக மாறிக்கொண்டிருக்கிறது.

ஆனாலும் என்ன, காலம் காலமாக தன்னுரிமையோடு வாழ்ந்த தமிழன், அந்நிய ஆங்கிலேய ஆட்சிக்குப் பின் மேலும் மேலும் அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டான்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் – என்று அரசியலின் அச்சாணியை உலகுக்கு அரற்றிய தமிழன், அரசியல் உரிமையற்று நாடில்லை, நாதியில்லை என்று அங்கலாய்த்து அலைகின்றான். பேசிப் பார்த்தான் – பலனில்லை. வாதிட்டுப் பார்த்தான் – வழிகிடைக்கவில்லை. நீதி கேட்டான் – நீசர்களின் நெடுந்தூக்கம் கலையவில்லை. பிரச்சினைக்கு முடிவு கேட்டான் – தமிழன் முடிவே பிரச்சினை என்று ஆக்கிவிட்டார்கள். பிரச்சினைக்கு முடிவு கொண்டு



வருவோம் என்றே அரியணைக்கு வந்த அரசு, தமிழனைக் கொன்று முடிப்போம் என்றே கொடுமை புரிகிறது.

இது தமிழனின் பிரச்சினை மட்டுமல்ல, தமிழின் பிரச்சினையும் கூட. இது ஈழத்தின் பிரச்சினை மட்டுமல்ல,

- விக்னேஸ் -

உலகத்தின் பிரச்சினையும் கூட. இது தமிழன் அகத்துப் பிரச்சினை மட்டுமல்ல, தமிழகத்துப் பிரச்சினையும் கூட. ஈழத்துவாழ் தமிழன் இன்றோ நேற்றோ அடித்த காற்றிற்கும் மழைக்கும் ஈழக்கரைக்கு வந்து ஒதுங்கியவனல்ல. பாரம்பரியம் பாரம்பரியமாக ஈழத்துமண்ணில் இணையிலாது வாழ்ந்தவன் – வளம் தேடியவன். ஈழத்து இலக்கியங்களும், எழுச்சிபெறு கோயில்களும் மற்றும் மகாவம்சமும் இதை அடித்துரைக்கும் அத்தாட்சியின் அடிப்படைகள். ஆங்கிலேயர், ஆட்சியை அபகரித்துக் கொண்ட போதும் கூட, ஈழம் தன்னாட்சி கண்டிருந்தது – தனது எழுச்சி கொண்டிருந்தது. ஆங்கிலேய அரசு இலங்கைக்குச் சுதந்திரம் அளித்தபோது, தமிழனின் அடிமைச் சாசனம் அழிக்கப்படவில்லை – அவனது விலங்குகள் அன்று முறிக்கப்படவில்லை.

**இது ஈழத்துப் பிரச்சினை அல்ல, உலகப் பிரச்சினை. குறிப்பாக, உலகத் தமிழர் பிரச்சினை. இன்று எமக்கு அவசியம் வேண்டுவது ஒன்றே ஒன்றுதான் - அதுவே ஐக்கியம் - ஒருமைப்பாடு.**

தமிழனின் மிகச்சிறிய சலுகைக்கு மட்டும் ஆங்கிலேயர் வரைந்த அன்றைய அரசியலமைப்புச் சட்டம் {Soulbury Constitution - Section 29 [2] (b) and (c)} உறுதியளித்திருந்தது. அதுவும் 1972ஆம் ஆண்டு முற்றாக அகற்றப்பட்டது. தமிழனின் கடைசி உரிமையும் உரியப்பட்டு, அவன் நிர்வாணமாக்கப்பட்டான். அரசினர், புத்தபகவானின் நிர்வாண முத்திக்கும், ஆன்மீக வழிக்கும் புது அர்த்தம் கொடுத்தார்கள். தமிழ் இளைஞர்கள் வேட்டையாடப்பட்டார்கள். பெண்மை சூறையாடப்பட்டது. நாம் பிறந்த பூமியிலேயே நாங்கள் அகதிகளாக்கப்பட்டோம். நாம் அழைந்து விளையாடிய மண்ணில், எம்மக்களை நாதியற்று அலையவிட்டிருக்கிறார்கள். இன்னும் எத்தனை, எத்தனை. சொன்னால் முடியாது. சொல்லாலும் அடங்காது. இத்தனைக்குப் பின் இன்னுமா தூக்கம். என்றுதான் தீரும் ஈழத்தார் ஏக்கம்.

மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டும் – இது ஈழத்துப் பிரச்சினை அல்ல, உலகப் பிரச்சினை. குறிப்பாக உலகத் தமிழர் பிரச்சினை.



ஐ. நா வில் அனைத்துலக மக்களுடன் தமிழர் பிரதிநிதிகள்

ஈழம் வாழ் தமிழன் தன்னைத் தானே ஆண்டவன். தனக்கென்று ஒரு பிரதேசத்தைக் காலம் காலமாகக் கட்டிக் காத்தவன். கலை, பண்பாட்டால், மொழியால், பேணும் வழியால் வேறுபட்டவன் – உழைக்கத் தெரிந்தவன். உழைப்பால் உயர்ந்தவன். பொருளியல் புரிந்தவன். மண்வளம் கண்டவன். தன் வளம் பேணும் தகுதி கொண்டவன். அரசியல் அறிந்தவன். அதன் நாகரீகம் சொன்னவன். நீதிக்குச் சொந்தக்காரன். அவனால் மேதினிக்கு தீது இல்லை. நம்பிக் கெட்டவன். ஆனால், நம்பத் தகுந்தவன். வேதனைக்கு விலை போனவன். வரும் சோதனையில் வெற்றி பெற சுகத்தை, அதன் சுகபோகத்தையே தூக்கி எறிபவன். வெளிவிவகார அரசியலை யாரும் அவனுக்குச் சொல்லித்தர வேண்டும் என்ற அவசியம் கிடையாது.

# தமிழனுக்கென்றோர் நாடில்லை

அவன் தன் ஆட்சியை ஈழத்தில் அமைக்க சர்வதேசச் சட்டம் கூட தடையாய் இல்லை. அவன் சுயநிர்ணய உரிமையை அதுவே அங்கீகரிக்கிறது. அங்கீகாரத்திற்கான ஆதாரங்களும் – அத்திவாரங்களும், அதற்கான அத்தியாவசியமும் – அடிப்படையும் – ஆவணச் சட்டத் தேவைப்பாடுகளும் அளவுக்கு அதிகமாகவே அமைந்திருக்கிறது. இன்று எமக்கு அவசியம் வேண்டுவது ஒன்றே ஒன்றுதான் – அதுவே ஐக்கியம் – ஒருமைப்பாடு. ✱

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள்.

உங்கள் ஆக்கங்களை 20 - 06 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**'Kalathil',**
**Eelam House, 202Long Lane,**
**LondonSE1 4QB.**



www.tamilarangam.net



# ஒப்பந்தத்தின் முழு நோக்கமும் தேசிய விடுதலை இயக்கங்களை போர் சட்டங்கள், வழக்கங்களுக்கு உட்படுத்துவதே

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

**நீதிபதி:** ஒப்பந்தம் 1ஐ நான் எங்கு பார்க்க முடியும்?

**திரு. வயலன்கோட்:** இங்கு அது ஆவணமாக அணைக்கப்பட்டிருக்கிறது. காரணம், அது இந்த நாட்டின் சட்டம்.

**செல்வி யக்மன்:** அதிகாரம் 14, நான் நினைக்கிறேன் இணைப்பு 'ஏ'......

**நீதிபதி:** அது பந்தி 1(4), விதி 1(4)?

**செல்வி யக்மன்:** அது ஒப்பந்தம் 1. 1(4)- ஒப்பந்தம் 1இன் முதல் விதி. அதிகாரம் 14ஆம், பக்கம் 237இல் ஆரம்பிக்கிறது.

**நீதிபதி:** ஆம். மெத்தச்சரி. எனக்கு இது விளங்குகிறது....... பேராசிரியரே ஒப்பந்தம் 1ஐப் பார்த்து எனக்கு உதவுங்கள். 'பயங்கரவாதம்' என்ற சொல் எங்கு காணப்படுகிறது என்று எனக்குச் சொல்லுங்கள்.

**சாட்சி:** சரியாக என்னால் சொல்ல முடியாது. பயங்கரவாதத்தைத் தடை செய்வது பற்றி, குறிப்பு இருக்கிறது. ஆனால், அந்தச் சொல்லின் வரை விலக்கணம் இல்லை.

**நீதிபதி:** அது ஒரு பொழுதும் வரைவிலக்கணம் செய்யப்படவில்லை என்பதை நாங்கள் அறிவோம்.

**திரு. வயலன்கோட்**

**கேள்வி:** ஐயா, அந்த (பயங்கரவாதம்) விடயம் முக்கியம். அது தடை செய்யப்பட்டுள்ளது என்று சொல்கிறீர்களா?

**நீதிபதி:** அப்படித்தான் அவர்( பேராசிரியர்) சொன்னார். அது எங்கு சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நானும் அறிய விரும்புகிறேன். பகுதி 1 மட்டும்தானா? அதுதான் முழுதுமா?

**செல்வி யக்மன்:** நான் நினைக்கிறேன், பகுதி 2ம் அதில் இருக்கிறது. ஆனால்.........

**நீதிபதி:** சரி, பகுதி 2 எனக்குத் தெரிகிறது. 240 ஆவது பக்கம் முதல்பகுதி 2 ஆரம்பமாகிறது. ஆனால் அதைப்பற்றியல்ல, நாம் இங்கே கதைப்பது. நாங்கள் 237-340 வரையிலான பக்கங்களைப் பற்றியே பேசுகிறோம்.

**செல்வி யக்மன்:** இருந்தும் அது ஒப்பந்தம் 1தான். ஒப்பந்தம் 1, 50 பக்கங்களுக்கு மேல் நீடிக்கிறது.

**நீதிபதி:** அப்படியா? மெத்தச்சரி.

**செல்வி யக்மன்:** ஒப்பந்தம் 2, பக்கம் 300 மட்டும் நீடிக்கிறது. எனவே ஒப்பந்தம் 1, 300 பக்கங்களுக்கு நீடிக்கிறது.

**நீதிபதி:** மெத்த நல்லது. மிகவும் நன்றி.

**சாட்சி:** அது ஒப்பந்தம் 2ஆக இருக்கலாம். ஒப்பந்தம் 1ல் இல்லை. ஆம். அது என்னுடைய தவறு. "பயங்கரவாதச் செயல்கள்" விதி 4, பந்தி b, ஒப்பந்தம் 2 உள்நாட்டுப் போர்கள் பற்றியது. மீண்டும் (பயங்கரவாதத்துக்கு) வரைவிலக்கணம் இல்லை.

**செல்வி யக்மன்:** அப்படியென்றால், பக்கம் 301 ஒப்பந்தம் 2, விதி 2 (பந்தி d)

**சாட்சி:** ஒப்பந்தம், விதி 51- பொதுமக்களுக்கு அதிகளவு பாதுகாப்புக்களை வழங்குகிறது. அவைகளுக்கு எதிராகச் செய்யக்கூடாதவைகளை அது வரையறைகிறது. பந்தி 4, கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தடை செய்கிறது. அவை எவை என்பதையும் வரையறை செய்கிறது.

**செல்வி யக்மன்:** நீதிமன்றத்துக்கு, அது பக்கம் 261 இல் இருக்கிறதெனக் குறிப்பிட விரும்புகின்றேன்.

**நீதிபதி:** ஆம், எனக்குத் தெரிகிறது.

**திரு. வயலன்கோட்**, "பயங்கரவாதம்" என்ற வார்த்தை அதில் இல்லை.

**சாட்சி:** அதில் இல்லை. ஒப்பந்தம் 2 இல் இருக்கிறது.

**திரு. வயலன்கோட்**

**கேள்வி:** விதி 51, உப பந்தி 4- பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்துவதைத் தடை செய்கிறது.

**பதில்:-** ஆம், அப்படியானவை (தாக்குதல்கள்) போர்க்குற்றங்களாகக் கணிக்கப்பட்டு தண்டிக்கப்படுகின்றன.

**கேள்வி:** ஒப்பந்தம் 2 உள்நாட்டுச் சண்டையைப் பற்றியது என நீர் சொல்கிறீர்?

**நீதிபதி:** அதைத்தான் சற்று முன்னர் அவர் (சாட்சி) சொன்னார்.

**சாட்சி:** உள்நாட்டு யுத்த நிலைமையில் ஒப்பந்தம் 2 நடைமுறைக்கு வரும்.

**திரு. வயலன்கோட்**

**கேள்வி:** மெத்தச் சரி.

**பதில்:-** இது பற்றிய பதில் கொஞ்சம் சிக்கலானது. உள்நாட்டு யுத்தம்தான் அவர்கள் மனதில் இருந்தது.

**கேள்வி:** ஒப்பந்தம் 2ல் ஆவது, "பயங்கரவாதம்" என்ற சொல்லை உபயோகிக்கிறீர்கள்?

**பதில்:-** ஒப்பந்தம் 2ல், "பயங்கரவாதம்" என்ற வார்த்தையை பாவிக்கிறார்கள்.

**கேள்வி:** அதனை எப்படி விளக்குவீர்........ ஒப்பந்தம் 2 போன்ற ஒரு அகில உலக மரபு, பயங்கரவாதம் என்ற வார்த்தைக்கு ஒத்துக்கொள்ளக்கூடிய அகிலவுலக வரைவிலக்கணம் இல்லாது ஏன் விடப்பட்டதை விளங்கிக் கொள்வதற்கு எனக்கு வில்லங்கமாக இருக்கிறது.

**பதில்:-** அவர்கள் (நாடுகள்) பயங்கரவாதத்தை முற்றாகக் கண்டித்தார்கள். எந்த நாடும் பயங்கரவாதத்தை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், அவர்களால் அதை வரையறுக்க முடியவில்லை. இதுதான் பிரச்சினையை மேவும் வண்ணம் வரையப்பட்டது. நல்லது, நாங்கள் தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றி ஒப்பந்தம் 1ல் பார்த்துக் கொள்ளுவோம். பயங்கரவாதம் என்றால் என்ன என்ற வரைவிலக்கணத்தையிட்டு பிரச்சினையை விட்டுவிடுவோம். நாங்கள் ஒப்பந்தம் 1ல் எதைச் சொல்ல வந்தோம் என்றால், தேசிய விடுதலை இயக்கங்கள் பொது மக்களைத்தாக்க முடியாது. ஆகவே வழக்கறிஞர்கள் என்ற முறையில் யாரும் ஒத்துவராத சொல்லை வரையறை செய்வதற்குப் பதில், அவை (தேசிய விடுதலை இயக்கங்கள்) செய்யக்கூடாத செயல்களை விபரித்தோம்.

**கேள்வி:** அதிகாரம் 3, பக்கம் 81ஐ பார்க்குமாறு கேட்கிறேன். நீதிபதி அவர்களே, பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக அதனை இப்பொழுது வாசிக்கிறேன்.

"......பயங்கரவாதம் என்ற பதத்தை உபயோகிப்பதில் உள்ள நடைமுறைப் பயனையிட்டு எனக்கு முழுச்சம்மதம் இல்லாவிட்டாலும், இங்கு அப்படிச் செய்ய விரும்புகிறேன். அந்தப்பதம் விளக்குவதைவிட கூடுதலாக மறைக்கிறது.

ஆக, அந்தப் பதத்தை உங்கள் கட்டுரையில் உபயோகித்திருக்கிறீர்கள். இருந்தும் அதுபற்றி உங்களுக்கு மனக்கஸ்டம் இருக்கிறது.

**பதில்:-** அதனை நான் ஒருபோதும் வரைவிலக்கணம் செய்யவில்லை. உண்மையில் அதற்கு வரைவிலக்கணமே இல்லை. நான் விளக்கியதுபோல், அதனைக் கடைசி வசனத்தில் உபயோகித்திருக்கிறேன்.

"வேறு வார்த்தைகள் கிடைக்காததால் நான் "பயங்கரவாதம்" "பயங்கரவாதி" என்ற சொற்களைப் பாவிக்கிறேன். காரணம், அவை பரவலான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. ஆனால், எப்பொழுதும் மேலே சொன்ன தாக்குதல்களுக்கும், புறநடைக்கும் உட்பட்டது. இதனை நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

**கேள்வி:** மெத்த நல்லது. என்ன மாதிரியான அங்கீகாரம்? அந்தப் பதங்கள் எதனைக் குறிக்கின்றன? யாருடைய அங்கீகாரம்?

**பதில்:-** பாமர மக்கள் பயங்கரவாதி என்ற சொல்லைப் பாவிக்கிறார்கள்.

**கேள்வி:** பாமர மக்கள் என்றால் யார்? தெருவில் போகிற பாமர மக்களா?

**பதில்:-** பாமர மக்கள் பயங்கரவாதம் என்ற பதத்தைப் பாவிக்கிறார்கள்.

**நீதிபதி:** பாமர மக்கள் மட்டுமா?

**சாட்சி:** அரச ஊழியர்களும் பயங்கரவாதம் என்ற சொல்லைப் பாவிக்கிறார்கள். நான் கூறியது, அவர்கள் அதனைத் துஸ்பிரயோகம் செய்கிறார்கள்.

**நீதிபதி:** ஆகவே, மக்கள் பொதுவாக அதனைப் பாவிக்கிறார்கள்? அரசுகளும் அந்த வார்த்தையைப் பாவிக்கிறது?

**சாட்சி:** அரசுகளும் அதனை உபயோகிக்கிறது.

**கேள்வி:** ஐக்கிய நாடுகள் சபையும்?

**பதில்:-** ஐ. நாவும் பயங்கரவாதம் என்ற சொல்லைப் பாவிக்கிறது. ஆனால், அதை ஐ. நா வரையறை செய்யவில்லை. செய்யமுடியவும் இல்லை.

பக்கம் 81ல் சி. ஐ. ஏ பயங்கரவாதத்திற்குரிய வரைவிலக்கணத்தை துஸ்பிரயோகம் செய்த ஒரு சம்பவத்தை ஆவணப்படுத்தியுள்ளேன்.

**கேள்வி:** நீங்கள் சொல்வது சரி.

**பதில்:-** அது ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்டது. இந்த வார்த்தை பல முறை துஸ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

**நீதிபதி:** ஒரு நிமிடம் பொறுங்கள். பேராசிரியரே இதனைப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் தாருங்கள்.

நீங்கள் சொல்கிறீர்கள்:

**"பயங்கரவாதம் " என்ற சொல்லைப் பாவிப்பதற்குப் பதில், அரசியல் காரணங்களுக்காகப் பொதுமக்களுக்கு எதிராக உலகளாவிய வன்முறையைப் பற்றிப் பேசுவதை நான் விரும்புகிறேன்.**

இப்படித்தான் எழுதியிருக்கிறீர்கள். நான் விளங்கிக் கொண்டது உங்களுக்கு பயங்கரவாதம், பயங்கரவாதி என்ற வார்த்தைகள் பிடிக்காது என்பதுதான். நான் நினைக்கிறேன், நீங்கள் உண்மையில் சொல்வது பிழையென்றால் ஐயா தயவு செய்து திருத்துங்கள். நான் "பயங்கரவாதம்" என்ற சொல்லைப் பாவிக்கமாட்டேன். ஆனால், அரசியல் காரணங்களுக்காகப் பொது மக்களுக்கு எதிராக அரசு அல்லாத நபர்களால் கட்டவிழ்த்துவிடப்படும் உலகளாவிய வன்முறையைப் பற்றிப் பேசுவதையே நான் விரும்புகிறேன்.

உண்மையில்....... பயங்கரவாதம் என்ற சொல்லை பொதுவாகப் பாவிக்கும்போது அடிப்படையில் எதைப்பற்றிப் பேசுகிறோம் என்றால்? இதைத்தானே நீங்கள் சொல்கிறீர்கள்.

**சாட்சி:** ஒப்பந்தம் 1ல் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய விடுதலை இயக்கங்கள் நீங்கலாக, இதுதான் எனது கட்டுரையின் நோக்கம்.

தொடரும்.......

www.tamilarangam.net



# சிறுகதை

"நான் அப்பவும் படிச்சுப் படிச்சுச் சொன்னனான். இவள் கேட்டால்தானே ஆட்டக்கார . . . ."

கனகம் வெடித்துக்கொண்டிருந்தாள்.

"கோயிலுக்கு றோட்டாலை போய் வராதையடி ஆத்தை, பொன்னுக் குஞ்சாத்தையின்ரை வளவுக்குள்ளலை போய் சிவத்தாரின்ரை தோட்டத் துக்குள்ளால போடியெண்டாள். . ."

"பொழுதுபட்ட நேரத்திலை ஏனப்பா கத்திக்கொண்டு நிற்கிறீர் என்ன நடந்ததெண்டு சொல்லிப்போட்டு கத்தனப்பா"

அரிக்கன் லாம்பில் பேப்பர் படித்துக் கொண்டிருந்த உலக நாதர் கண்ணாடியை ஒரு கையால் களற்றிக்கொண்டு கனகத்தை நிமிர்ந்து பார்த்தார்.

"ம். . . என்னத்தைச் சொல்ல.."

சுளகில் போட்டிருந்த புட்டை சுண்டுப் பேணியால் குத்திக்கொண்டிருந்த கனகத்திடமிருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

"றோட்டிலை நிண்ட பெடியள் ஏதோ பகிடி பண்ணினவங்களாம். . . முத்தற்றை மூத்த பெடியன் மோகன் அதுக்குள்ளை நிண்டுகொண்டு தன்ரை வருங்கால மனிசியெண்டும் சொல்லியி ருக்கிறான்."

உலகநாதர் ஒன்றும் சொல்லாமல் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு மீண்டும் பேப்பருக்குள் ஆழ்ந்தார்.

"அவங்கள் பெடியங்கள். . . இவளவை ஒழுங்கா இருந்தால் அவங்கள் உந்தக் கதையள் கதைப்பங்களே?. . . நாங்கள் அந்தக் காலத்திலை இருந்த அடக்க ஒடுக்கம் இவளவைக்கு வருமே. . ."



கனகம் இன்னும் புட்டுக் கொத்தி முடியவில்லை. குசினி மூலையிலிருந்து வெங்காயம் உடைத்துக் கொண்டிருந்த புஸ்பராணியின் கண்களிலிருந்து நீர் வழிந்தோடியது. இடைமிடையே அழுகை விக்கலாக வெளிப்பட்டது.

"இப்ப ஏனடி அழுகிறாய். . . கெதியெண்டு வெங்காயத்தை உடை – கொப்பர் மத்தியானமும் சாப்பிடேல்லை"

நீத்துப்பெட்டியில் புட்டைக் கொட்டி அடுப்பில் வைத்தாள் கனகம். கனகத்துக்கும் உலகநாதருக்கும் புஸ்பராணி ஒரே மகள். வேறு பிள்ளைகள் இல்லை. தங்கள் பிள்ளையை அடக்க ஒடுக்கமாக வளர்க்க வேண்டுமென்றே இருவரும் விரும்பினர். இதனால் புஸ்பத்தின் படிப்பும் பத்தாம் வகுப்புடன் நிற்பாட்டப்பட்டது.

புஸ்பராணியின் மெல்லிய உடலும் நீண்ட அழகிய கூந்தலும் அவளின் அழகை மேலும் கூட்டின. தன்னுடைய மகளை பூப்போல வைத்திருப்பதாக பொன்னு அடிக்கடி பெருமை அடித்துக் கொள்வாள்.

"புஸ்பம் வெங்காயம் உடைச்சது காணும் முதல்லை போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வா. ... .உன்னை ஒருதன்ரை கையிலை பிடிச்சுக்கொடுக்கிற மட்டும். . . மனிசருக்கு நிம்மதியில்லை.

புஸ்யம் தாவணியை எடுத்து இடுப்பில் செருகியபடி கிணத்தடிக்குச் சென்றாள். துலாக்கொடியை இழுத்து நீரை அள்ளியவள் குளிர்ந்த நீரை முகத்தில் எத்தினாள். முகத்தினில் குளிர்ந்த நீர் பட்டதும் எல்லாக்கவலைகளும் பறந்தோடிவிட்டதைப்போல் இருந்தது. வானத்து நிலவு பால்போல் எறித்துக் கொண்டிருந்தது. நாங்கள் ஏன் வீட்டுக்குள்ளை அடங்கி, அடங்கி இருக்கோணும். மனதில் எண்ணங்கள் அலைமோதின. அழகு, அழகு என்று சொல்லி தன்னை எல்லோரும் அலங்கோலப்படுத்துவதாகப் பட்டது. றோட்டால் போய்வரக்கூட முடியாமல் ஏன் இந்த வாழ்க்கை. கனகம் யன்னலுக்கால் எட்டிப்பார்த்தாள். உவள் என்ன செய்துகொண்டிருக்கிறாள்? வாளியைப் பிடிச்சுக்கொண்டு என்ன யோசனை? கனகத்திற்குப் பயமாய் இருந்தது. தன் மகளுக்கு ஆரேன் செய்வினை செய்துபோட்டாங்களே? பேப்பர் படித்துக் கொண்டிருந்த கணவனிடம் திரும் பினாள்.

"இஞ்சருங்கோ பெட்டைக்கும் வயது ஏறிக்கொண்டு போகுது. . . மடியிலை நெருப்பைக் கட்டிக்கொண்ட மாதிரி எத்தினை காலத்துக்குத்தான் பயந்து கொண்டிருக்கிறது. "

புஸ்பராணி வாசலில் நுழையவும் பேச்சை நிறுத்திக்கொண்ட கனகம் சுளகை இழுத்து பக்கத்தில் வைத்துக்கொண்டு அவித்த பிட்டை இறக்கிக் கொட்டினாள்.

முகட்டால் ஊர்ந்துகொண்டிருந்த பல்லி சொக் என்று புஸ்பராணியின் கால்களில் விழுந்தது. திடுக்கிட்டு சுய நினைவுக்கு வந்தாள். "அடச் சீ இவ்வளவு நேரமும் சுய நினைவில்லாமல் யோசிச்சுக் கொண்டிருந்திட்டன்."

புஸ்பராணியின் கண்களில் இருந்து பொலபொல வென கண்ணீர் வழிந்தோடியது. நேற்று முழுவதும் காடு துப்பரவாக்கிய கைகள் இரண்டும் விண் விண் என்று வலித்தன.

"புஸ்பம் என்ன பிள்ளை யோசனை?"

"ஒண்டுமில்லை....." மொட்டையாகப் பதிலளித்தாள்.

"என்ன செய்யிறது பிள்ளை? யாழ்ப்பாணத்தை ஆமிக்காறன் பிடிப்பா னெண்டு நினைச்சமே? ..... இப்படி நட்டநடுக்காட்டிலை வந்து இருப்பமெண்டு நினைச்சமே?.... நல்லூரானே!" கனகம் கையிர ண்டையும் குவித்து வானத்தைப் பார்த்துக் கும்பிட்டாள். உலகநாதர் எங்கேயோ வாங்கிய குளத்து விராலை பனை நாரில் கோர்த்துத் தூக்கியவாறு வந்துகொண்டிருந்தார்.

கனகம். ..... கனகம். .....

றோட்டில் நின்று கூப்பிட்டார்.

"புஸ்பம் கொப்பர் கூப்பிடுகிறார் என்னவெண்டு கேள்"

புஸ்பம் கொட்டிலுக்கு வெளியில் வந்தாள்.

என்னப்பா. . ?

"இந்தா இதைக் கொம்மாட்டைக் குடு. . .பொரிச்சு வைக்கச்சொல்லு. ..... நான் உந்தக் கடையடி மட்டும் போட்டுவாறன்.. "

அருவருப்புடன் மீனை வாங்கிக் கொண்டாள். "ஏனப்பா உந்தக் குளத்து மீன்?"

"சே. . .சே. . .இது நல்ல ருசியாம். . .ம் . . .நீ, கொண்டே கொம்மாட்டைக் குடு"

உலகநாதர் நடக்கத் தொடங்கினார். மீனை வாங்கிக்கொண்டு திரும்பிய வளுக்கு தன்னுடைய வீட்டைப் பார்க்க சிரிப்பாக வந்தது. யாழ்ப்பாணத்தில் வீட்டின் பின்னாலிருந்த கோழிக்கூடும் இதே அளவுதான். தங்கள் நிலையை எண்ணி அழுவதா? சிரிப்பதா? அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"அம்மா. ..... அப்பா இந்த மீனைப் பொரிச்சு வைக்கட்டாம்"

"ஆசாரம் அது இது எண்டு பார்த்த மனிசன் வன்னிக்கு வந்தோண்ணம் மாறித்தான் போச்சுது.... . . சனீஸ்வரனுக்குத் தவறாமல் விரதம் பிடிக்கிற மனிசன் சனிக்கிழமையிலை மீனைக்கொண்டந்து தந்திட்டுப் போகுது.... அதை உதிலை போடு. நீ, உந்தக் கடையடியிலை போய் இரண்டு தேங்காய் வாங்கியா"

கனகம் மடியில் முடிந்து வைத்திருந்த காசை எடுத்து நீட்டினாள். ஒரு கணம் தயங்கிய புஸ்பம் காசை வாங்கிக்கொண்டு நடக்கத்தொடங்கினாள்.

என்னை வீட்டுக்குள்ளை பூட்டிப் பூட்டி வந்த அம்மாவா இப்பிடி. . . .அம்மாவும் சரியா மாறித்தான் போனா. . . .யாழ்ப்பாணத்திலை பக்கத்திலை இருக்கிற கோயிலுக்குப் போறதெண்டால் கூட எத்தினை புத்திமதிகள் .... ஆனா இண்டைக்கு இந்தக் காட்டுப் பிரதேசத்திலை கடைக்குத் தனிய அனுப்புறா. . . .இங்கத்தைய பெடியள் என்னைப் பார்க்கமாட்டார்களா? சமூகக்கட்டுப்பாடு என்பது குழலோடு சேர்ந்ததுதானா? பொய் வேடங்களா? முன்னால் யாரோ விறகுக் கட்டுடன் வரவே சற்று விலகினாள்.

"தங்கைச்சி நீங்கள் இங்கையே இருக்கிறீர்கள்?"

திடுக்கிட்டு நிமிர்ந்தவளுக்கு முன்னால் நின்றவனைக் கண்டவுடன் அதிர்ச்சியாக இருந்தது.

"ஓம். . . ம் .. ."

தடுமாறிச் சொன்னாள்.

"நாங்களும் இந்தக் காட்டுத்




தொங்கல்லைதான் இருக்கிறம். . அப்ப நான் வரட்டே?"

முத்தரின் மூத்த மகன் மோகன் திறந்த மேலுடன் விறகைச் சுமந்துகொண்டு சென்றுகொண்டிருந்தான்.

புஸ்பராணி அப்படியே திகைத்துப் போய் நின்றிருந்தாள். அவளுக்கு இப்போது எல்லாமே விளங்கியது. குடும்பப் பெருமை, சாதி, சமயம் எல்லாம் மனிதனின் வறட்டுக் கௌரவங்கள். ஒருசாண் வயிற்றுக்கு உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இல்லாவிட்டால் அவனது இறுமாப் பொல்லாம் இல்லாது ஒழிந்துவிடும். உழைக்காத சோம்பேறி மனிதர்களே இவ்வுலகை வீணாக்குகிறார்கள்.

பின்னால் ஏதோ சரசரத்தது. என்னவென்று திரும்பிப்பார்த்தாள். மானொன்று குட்டியுடன் வீதியைக் கடந்து ஓடியது. அவளுக்கும் அதன்பின்னால் ஓட வேண்டும் போல இருந்தது. தான் ஒரு வயது வந்த பெண் என்பதையும் மறந்து மான் வீதியைக் கடந்த இடத்திற்கு ஓடிச் சென்றாள். மானும் குட்டியும் புல்வெளியில் நின்று மேய்ந்துகொண்டிருந்தன...... 'ஆய்' என்று கத்திக்கொண்டே மானிடம் ஓடினாள். இவளைக் கண்டவுடன் மான் வெருண்டு ஓடத்தொடங்கியது. புட்டியான இடத்தில் ஏறி நின்றுகொண்டு கைகொட்டிச் சிரித்தாள். கடையில் தேங்காய் வாங்கவேண்டும் என்று நினைப்பு வந்ததும் புட்டியால் இறங்கி றோட்டுப் பக்கம் திரும்பினாள். றோட்டில் பலர் கூடி நின்று இவளையே பார்த்துக்கொண்டிருந்தனர். ஆம் சமுதாயம் இன்னும் மாறவில்லை.

நந்தியாவட்டைப் பூக்களில் தேங்கியிருந்த மழைத் தண்ணீர் காற்றடித்தவுடன் சடசடவென நிலத்தில் வீழ்ந்தன. வாழைமிலையில் அமர்ந்திருந்த காகம் நனைந்த தன் இறகுகளை சீர்செய்து கொண்டிருந்தது. ✱

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

**லியோன் யூறிஸ்**

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதின்மூன்று

(தொடர்ச்சி)

**வா**ய்ப்புக்கள் அதிகரிக்கும் என அறிந்து கொண்டதைத் தெரிவித்தாள். அவள் இங்கிருந்தாலும் இந்த வாய்ப்புக் குறையப் போவதில்லை. ஆனால் ஹான்சன் தம்பதியினர் அனுபவிக்கும் பிரிவுத்துயரை, எதிர்பார்த்திருக்கும் துன்பத்தை நீடிக்க அவள் விரும்பவில்லை.

அவள் தனக்காக அழுததைவிட ஆகேக்காகவும், மேற்றாவுக்காகவும் கூடுதலாக அழுதாள். கடிதங்கள் எழுதுவேன் என்ற உறுதிமொழியோடும் இனியொருமுறை அவர்களைச் சந்திக்கும் நம்பிக்கை சிறிதும் இல்லாமலும் பதினாலே வயதான கரேன் கிளமென்ற் ஹான்சன், போரின் விளைவால் அலைந்து திரியும் மக்கள் வெள்ளத்தில் இணைந்து கொண்டாள்.



## அத்தியாயம் 14

நனவு, கனவை விட பயங்கரமானதாக இருந்தது. டென்மார்க்குக்கு வெளியே, முதல் மாத வாழ்க்கை ஒரு பயங்கரமான கனவு போலிருந்தது. அவள் எப்போதும் பாதுகாக்கப்பட்டிருந்ததால் மிகவும் பயத்துக்கு இப்போது ஆளானாள். ஆனால், ஒரு பிடிவாதமான முடிவை மேற்கொண்டு அவள் தொடர்ந்து இயங்கினாள். முதலில், சுவீடனில் ஒரு முகாமுக்கும் பின்பு இல்லிடமிழந்தவர்களால், ஒரு சதமும் கையிலில்லாத அலைந்து திரிகின்றவர்களால், சித்திரவதை முகாம்களில் இருந்தவர்களால், ஓடி ஒளித்துத் திரிந்தவர்களால், ஒளித்துவைத்துக் காப்பற்றப்பட்டவர்களால், காடுகளிலும் மலைகளிலும் போராட்டம் நடத்திய போராளிகளால் கட்டாய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட பெருந்தொகையானவர்களால் நிறைந்திருந்த பெல்ஜியத்தின் புல்தரையொன்றுக்கும் சென்றாள்.

ஒவ்வொரு நாளும் பயங்கரமான கதைகளும், வதந்திகளும் வந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு நாளும் கரேனுக்கு அதிர்ச்சி தரக்கூடிய செய்திகளே வந்து கொண்டிருந்தன. போரின் நிகழ்வால் 250 இலட்சம் பேர் செத்து மடிந்திருந்தனர்.

இப்படியாகத் தேடிச்செல்லும் முயற்சி, மார்செயில்ஸில் (Marseilles) இருந்து சில மைல்கள் தூரத்தில் தென் பிரான்சின் லயன் குடாவில் (Gulf of Lions) அமைந்திருந்த லாசியோடாட் (Laclotat) இடம்பெயர்ந்ததோர் முகாமுக்கு அவளை இட்டுச் சென்றது. லாசியோடட் முடிவில்லாதது போன்ற சேற்றுக்கடலால் சூழப்பட்ட கவர்ச்சியில்லாத கொங்கிறீட் தொடர் குடியிருப்புக் கட்டிடங்களை உடைய ஒரு ஆரோக்கியமில்லாத தோற்றத்தைக் கொண்டிருந்தது. அகதிகளின் தொகை ஒவ்வொரு நாளும் பெருகிக் கொண்டிருந்தது. அங்கு அளவுக்கதிகமான மக்கள் இருந்தனர். எல்லாவற்றுக்குமே தட்டுப்பாடு நிலவியது. சாவின் நிழல் அங்கிருந்தவர்களைச் சூழ்ந்திருந்தது. அவர்களைப் பொறுத்தவரை முழு ஐரோப்பாவுமே ஒரு சவப்பெட்டி போலாகிவிட்டது.

இன அழிப்பு! அறுபது இலட்சம் நடனக்காரர்களைக் கொண்ட சாவின் நர்த்தனம். பிராங் (Frank) முல்லர் (Muller) ஹிம்லர் (Himmler) றொசென் பேர்க் (Rosenberg) ஸ்ரெய்ச்சர் (Streicher) கலரென் புறுண்ணர் (Kaltenbrunner) ஹெய்ட்றிச் (Heydrich) எல்லோருமே சித்திர வதைத் தடைமுகாம்களில் யூதர்களைக் (கொலை செய்வதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள்) போன்ற பெயர்களைத் திரும்பத் திரும்பக் கேள்வியுற்றாள். ஆயிரக்கணக்கான இவர்களைப்போன்ற கீழ்மட்ட ஆட்களின் பெயர்களையும் கேள்விப்பட்டாள். குறிப்பாக, பச்சை குத்தப்பட்ட மனிதத் தோல்களால் விளக்கு மறைப்புகள் செய்து, "புகழ்" ஈட்டிய இல்சா கொச் (Ilsa Koch), ஆடுகளை வழிநடத்திச் செல்லும் பட்டி ஆடுபோல் மக்களை சாவுக்கு இட்டுச் சென்ற டியெற்றர் விஸ்லிஸ்னி (Dieter Wisliczeny) அல்லது பெண்களின் முதுகுப் புறங்களில் குதிரைச் சவுக்கால் விளையாடிய கிராம்மர் (Kramer). இவனுடைய கைவண்ணங்களில் சிலவற்றை அவள் நேரிலேயே கண்டாள். இவர்கள் எல்லோரிலும் கொடியவனின் பெயரும் அடிக்கடி கேட்க நேர்ந்தது. எபிரேய மொழியைச் சரளமாகப் பேசக்கூடியவனும், இன அழிப்பில் வல்லவனானவனும் ஜேர்மானிய பலஸ்தீனனுமான ஈச்மான் (Eichmann) தான் அது.

யூதர் என்று எழுதப்பட்ட ரகசியக் கதவைத் திறந்து பார்த்ததற்காக கரேன் மிகவும் துக்கமடைந்தாள். ஏனெனில், அக்கதவிற்குப் பின் பரந்திருந்ததெல்லாம் சாவின் சுவடுகளே. ஒருவர் பின் ஒருவராக அவளின் இனத்தவர்களின் சாவு நிச்சயப்படுத்தப்பட்டது.

இனப்படுகொலை! ஒரு இயந்திரத்தின் துல்லியமான செயற்பாட்டுத் திறமை போல் நிறைவேற்றப்பட்டிருந்தது. முதலில் ஜேர்மன் காரர்களின் முயற்சிகள் விகாரமானவையாக இருந்தன. அவர்கள் ரைபிள்களால் சுட்டுத் தள்ளினார்கள். இது மிகவும் மெதுவான வேலையாக இருந்தது. அவர்கள் பின்பு தங்கள் வாகன அணிகளையும் விஞ்ஞானிகளையும் இதற்காகப் பயன்படுத்தினார்கள்.

உருக்கால் மூடப்பட்ட வாகனங்களை, அவற்றில் கைதிகளைப் புதைகுழிக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே வாகனத்துள் விசவாயு செலுத்திக் கொல்லக்கூடிய விதத்தில் வடிவமைத்தனர். இப்படியான விசவாயு வாகனங்களின் வேகமும் அவர்களுக்குப் போதவில்லை. இதைத் தொடர்ந்து, அரைமணிக்கு 2000 பேராகக் குறைந்த பட்சம் ஒரு பெரிய முகாமில் ஒரு நாளைக்குப் 10,000 பேரைக் கொல்லக்கூடிய விசவாயுக் கூடங்களும், எரிவாயுக்கூடங்களும் (Gas Chamber Crematoriums) வந்தன. இதற்கான அமைப்புகளும், திட்டமிடலும், மனிதக்கொலை ஒருங்கிணைக்கும் வேலைத்தளத்தின் செயற்பாட்டுத் திறமையோடு இயங்கியிருப்பதை நிருபித்தன.

தொடரும்...

> யூதர் என்று எழுதப்பட்ட ரகசியக் கதவைத் திறந்து பார்த்ததற்காக கரேன் மிகவும் துக்கமடைந்தாள். ஏனெனில், அக்கதவிற்குப் பின் பரந்திருந்ததெல்லாம் சாவின் சுவடுகளே. ஒருவர் பின் ஒருவராக அவளின் இனத்தவர்களின் சாவு நிச்சயப்படுத்தப்பட்டது.

# நெதர்லாந்து பாராளுமன்றம் நோக்கி ....

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதாகக் கூறிக்கொண்டு அப்பாவித் தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்டுள்ள இராணுவ அட்டூழியங்களினாலும், சிறிலங்கா அரசின் இனவாதக் கொள்கைகளினாலும் தமிழர்கள் சிறிலங்காவில் எந்தப் பகுதியிலும் பாதுகாப்பாக வாழமுடியாது என்ற உண்மையை நெதர்லாந்து மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காக, 1500 இற்கும் மேலான தமிழர்கள் என்றுமில்லாதவாறு டென்காக் மத்திய புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்டு, நெதர்லாந்து பாராளுமன்றம் நோக்கி அணிதிரண்டனர்.

நண்பகல் சுமார் 1.15 மணிக்கு ஆரம்பித்த பேரணி சுமார் 2.20 இற்கு பாராளுமன்ற முன்றலில் கூடியது. பேரணி சுமார் 2 மைல்களுக்கு நீண்டதால், மத்திய டென்காக்கின் போக்குவரத்து ஸ்தம்பித நிலையை அடைந்தது.

– நீதியான சமாதானமே நிரந்தரமான சமாதானம்

– நெதர்லாந்து அரசே சந்திரிகா அரசின் பொய்ப்பிரசாரத்தை நம்பாதே

போன்ற கோசங்களும்

– நாம் விரும்புவது சுதந்திரமே, போரையல்ல

என்பது போன்ற கோசங்களுடன் பேரணி நெதர்லாந்துப் பாராளுமன்றம் நோக்கி நகர்ந்தது. பேரணியின் முடிவில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்கள், சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்தும் ஒரு சிங்கள மகனாகிய திரு. வீராஜ் மென்டிஸ், நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த திருமதி. காறன் மற்றும் நெதர்லாந்திலுள்ள தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த பிரமுகர்கள் உரையாற்றினார்கள்.

திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் தனதுரையில், உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசு மேற்கொண்டுவரும் அட்டூழியங்களுக்கு எதிராக தமிழ் மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியைக் காட்டவேண்டுமென்று இன்று 2000 இற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் சமூகமளித்தது பாராட்டத்தக்க விடயமென்றாலும், வருங்காலத்தில் இது போன்ற பேரணிகள் நடைபெறும் போது நெதர்லாந்தில் உள்ள அத்தனை தமிழர்களும் திரண்டெழ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மேலும், சிங்களவராகவிருந்தாலும் நீதியின் பாக்கம் நின்று, தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால் அது தமிழ் மக்களின் உரிமைகளின் முடிபு என்றும் அது தமிழ் மக்களின் அடிமைத்தனத்தின் ஆரம்பம் என்றும் திரு. வீராஜ் மென்டிஸ் அவர்கள் எடுத்துரைத்தது அனேகமானோரின் உள்ளங்களில் உறைந்திருக்கும். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அத்தனை கட்சி அங்கத்தவர்களையும் தமிழ் மக்கள் சார்பில் சந்தித்த திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் ஒரு மகஜரையும் கையளித்தார். மகஜரை நேரடியாகப் பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், தாம் இவ்விடயத்தையிட்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.

9-4-97 அன்று காலை டென்காக்கில் நெதர்லாந்து நாட்டவர்களுக்காக, தமிழர்கள் சிறிலங்காவில் பாதுகாப்பாக வாழமுடியுமா? என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கில் திரு. குமார் பொன்னம்பலம், அருட்தந்தை இம்மானுவேல் ஆகியோர் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் அரசசார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள், தொண்டர் நிறுவனங்கள், மத நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட நெதர்லாந்து மக்கள் பலரும் கலந்து கொண்டனர். திருமதி. காறன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. குமார் பொன்னம்பலம், அருட்தந்தை இம்மானுவேல், திரு. வீராஜ் மென்டிஸ் அவர்களும், சிறிலங்கா அரசின் தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறல்களையும் இம் மனித உரிமை மீறல்களை திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரத்தின் மூலம் மறைத்து வருவதையும் தகுந்த ஆதாரங்களுடன் விளக்கி சிறிலங்காவின் உண்மை நிலையை வெளிப்படுத்தினர். தமிழ் அகதிகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்று நெதர்லாந்து அரசோடு போராடும் பிரபல வழக்கறிஞர் திரு. ஸ்கொரேல் அவர்கள் உரையாற்றுகையில், அண்மையில் நெதர்லாந்து அரசு தமிழர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் அநீதியானது என்றும் இத்தீர்மானம் மறுபரிசீலனை செய்யப்பட்டு தமிழர்களுக்கு நீதி வழங்கும் வரை, தான் தொடர்ந்து போராடுவேனென்றும் கூறினார். கருத்தரங்கில் கலந்துகொண்ட டச்சு மக்களால் எழுதப்பட்ட கேள்விகளுக்கு விசேட விருந்தினர்களால் தகுந்த பதில்கள் அளிக்கப்பட்டன.இப்பேரணியை நெதர்லாந்திலுள்ள பல தமிழ் அமைப்புக்களான தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழர் ஒன்றியம் (Ymond), தமிழர் கலாச்சாரக் கழகம் (சாண் பிரதேசம்), தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழ் டச்சு ஒருங்கிணைப்புக் கழகம், தமிழர் கலை பண்பாட்டுக் கழகம், தமிழர் விளையாட்டுக் கழகம் ஆகியன ஒருங்கிணைந்து, தமிழர் ஐக்கிய ஒன்றியத்தின் கீழ் நடாத்தியுள்ளன.◆

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லண்டனில் மாபெரும் தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா - 97

தமிழரின் தேசிய ஒற்றுமையைச் சிறிலங்கா அரசிற்கும் அனைத்துலக நாடுகளுக்கும் எடுத்துக்காட்டவும் எமது இனத்தின் துயர் துடைக்கவும், பிரித்தானிய ஐக்கிய தமிழர் அமைப்பின்(United Tamils Organisation) ஆதரவுடனும் ஒருங்கிணைப்புடனும் தமிழீழப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கங்களினால் நடாத்தப் படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா (வலைப்பந்தாட்டம் உட்பட) சென்ற ஆண்டு நடைபெற்ற ஐந்து மைதானங்களை உள்ளடக்கிய அதே பாரிய பூங்காவில் **(WADHAM LODGE Sports Centre, Wadham Road, London, E17)** எதிர்வரும் 26-05-97 (வங்கி விடுமுறை நாள்) திங்கட்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை மிகப் பிரமாண்டமான ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது ஆண்டாக நடைபெறவுள்ள இவ்விழா ஒரு விளையாட்டு விழா மட்டுமல்ல, தமிழர்கள் தேசாபிமானத்துடன் ஒன்றுகூடி - மகிழ்ந்துரையாடி - பகிர்ந்துண்ணும் பெருவிழாவுமாகும்.



இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்
பிலிப் டிபிரற்றரும்(இடது) சேர் சோபர்சும்(வலது)

## துடுப்பெடுத்தாட்டப் போட்டியில் பங்கு கொள்ளவுள்ள பாடசாலைகள்

இவ்விளையாட்டு விழாவில் கடந்த ஆண்டு பங்குபற்றிய,

1) சிவானந்தா வித்தியாலயம் - மட்டக்களப்பு
2) மெதடிஸ்ற் மத்திய கல்லூரி - மட்டக்களப்பு
3) இந்துக் கல்லூரி - திருகோணமலை
4) சிதம்பராக் கல்லூரி - வல்வெட்டித்துறை
5) ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை
6) இந்துக் கல்லூரி - யாழ்ப்பாணம்
7) சம்பத்தரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்
8) பரி. யோவான் கல்லூரி - யாழ்ப்பாணம்
9) மத்திய கல்லூரி - யாழ்ப்பாணம்
10) கனகரத்தினம் மகாவித்தியாலயம் - யாழ்ப்பாணம்
11) இந்துக் கல்லூரி - வட்டுக்கோட்டை
12) யாழ்ப்பாணக் கல்லூரி - வட்டுக்கோட்டை
13) விக்ரோரியாக் கல்லூரி - சுளிபுரம்
14) யூனியன் கல்லூரி - தெல்லிப்பளை
15) மஹாஜனக் கல்லூரி - தெல்லிப்பளை
16) இந்துக் கல்லூரி - மானிப்பாய்
17) சென். ஹென்றிஸ் கல்லூரி - இளவாலை
18) இந்துக் கல்லூரி - உரும்பிராய்
19) மத்திய மகா வித்தியாலயம் - நெல்லியடி
20) இந்துக் கல்லூரி -கொக்குவில்

ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களுடன் இம்முறை,

21) ஸ்கந்தாக் கல்லூரி - சுன்னாகம்
22) நடேஸ்வராக் கல்லூரி - காங்கேசன்துறை
23) டிறிபேக் கல்லூரி - சாவகச்சேரி
24) வேலாயுதம் மத்திய மகாவித்தியாலயம் - பருத்தித்துறை

ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களும் பங்கெடுத்து விழாவைச் சிறப்படைய வைக்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## வலைப்பந்தாட்டப் போட்டி

பெண்களும் பங்குபற்றக் கூடிய வகையில், கடந்த ஆண்டுபோல் இம்முறையும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியும் நடைபெறவுள்ளது. வலைப்பந்தாட்டப் போட்டியில்,

1). யாழ்/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
2). யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி
3). இள/திருக்குடும்ப கன்னியர் மடம்
4). உரு/இந்துக் கல்லூரி
5). தெல்/மகாஜனக் கல்லூரி
6). சுன்/ஸ்கந்தா கல்லூரி
7). யாழ்/கனகரத்தினம் மகாவித்தியாலயம்

ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவிகள் பங்குபற்றவுள்ளனர்.

## அனைத்துலக காட்சி விளையாட்டு

துடுப்பெடுத்தாட்ட விளையாட்டின் காட்சி விளையாட்டில் ஒரு பக்கம் தமிழீழ விளையாட்டுக் கழகமும் (Tamil eelam Team - கனடாவிலிருந்து வருகை தரவுள்ள பிரபல விளையாட்டு வீரர்களான திரு.சாந்திக்குமார், திரு.சுதர்சன் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்) மறுபக்கம் கவுன்ரி ரெஸ்ற் வீரர்களைக் (County test players) கொண்ட சர்வதேச விளையாட்டுக் குழுவும் கலந்து கொள்ளவுள்ளன.

## சிறுவர் நிகழ்ச்சிகள்

விளையாட்டு விழாவிற்கு வருகைதரும் சிறுவர்களை மகிழ்விக்கவும் சில நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள்,

1). பலவர்ண வானவேடிக்கை
2). பஞ்சுமெத்தைகளில் துள்ளிக் குதித்தல்
3). சுற்றுவட்டத்தில் மோட்டார் வாகனம் ஓடுதல்

என்பன குறிப்பிடத்தக்கன.

## பிரதம /விசேட விருந்தினர்

கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழாவில் உலகப்புகழ் பெற்ற துடுப்பெடுத்தாட்ட வீரரான சேர் ஹார்பீல்ட் சோபர்ஸ் (Sir Garfield Sobers) அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்து எமது விளையாட்டு வீரர்களை ஊக்குவித்தது போல, இம்முறை பிரசித்திபெற்ற பாகிஸ்தான் துடுப்பெடுத்தாட்ட வீரரான திரு. வசீம் அக்ராம் அவர்களும் அவரது துணைவியாரும் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளனர்.

விசேட விருந்தினர்களில் ஒருவரான திரு. நசார் குசைன் **(Nassar Hussain - England vice captain/Essex country captain)** அவர்கள் விழாவைத் தொடக்கி வைக்கவுள்ளார்.


இண்டன் வோல்தம் பொரஸ்ற் மாநகர பிதா **(Mayor of Waltham Forest)** சில்வியா போல்சன் **(Silvia Poulsen)** அவர்கள் பாடசாலைகளின் கொடியேற்ற நிகழ்வை தொடக்கி வைத்து சிறப்பிக்க வுள்ளார்.

## நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு (Raffle)

இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறவுள்ள நல்வாய்ப்புச் சீட்டிழுப்பில், அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்படுபவருக்கு 10,000 பவுண்களுக்கு மேல் பெறுமதியுடைய **'VAUXHALL ASTRA'** மோட்டார் கார் ஒன்று பரிசாக வழங்கப்படவுள்ளது. சீட்டிழுப்புக்கான சீட்டின் பெறுமதி 1 பவுண்கள் மட்டுமே.

## தமிழீழ உணவகம்

விளையாட்டு நிகழ்வுகளைக் கண்டு களிப்படையும் அதேவேளை, சுவைமிக்க தமிழீழ உணவு வகைகளை எம்மக்கள் உண்டு மகிழ வேண்டுமென்பதற்காக தமிழீழ உணவகமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்வுணவகத்தில் ஒடியற்கூழ், பனங்காய்ப் பலகாரம், கொத்துரொட்டி, மீன் பொரியல் போன்ற விசேட உணவுகளும் விற்பனை செய்யப்படவுள்ளன.








## பொறுப்புக்களைப் பங்கெடுத்துக் கொள்ளும் விளையாட்டுக் கழகங்களின் முன்மாதிரி

விளையாட்டுப் போட்டியில் பங்கெடுத்துக் கொள்ளும் 5 பாடசாலைகள் விழாவின் சில பொறுப்புக்களை முழுமையாகவே ஏற்றுக்கொண்டு செயற்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் சகல பாடசாலைகளும் விழாப் பொறுப்புக்களை ஏற்று, விழா மேன்மேலும் சிறப்படைய உதவ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

இவ்விழா ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆண்டே 5000க்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு சிறப்படைய வைத்ததோடு எம் இனத்தின் ஒற்றுமையினையும் தேசாபிமானத்தினையும் சிறிலங்கா அரசுக்கும் அனைத்துலகத்துக்கும் அறியச் செய்தன. இவ்வாண்டு இத்தொகை 10,000 க்கும் மேல் பெருகிடத் திரண்டு வாரீர்!

வழமைபோல் வங்கி விடுமுறைத் தினத்தன்று நடைபெறவிருந்த சிறிலங்காப் பாடசாலைகளினது பழைய மாணவ சங்கங்களின் (FOC) ஏற்பாட்டில் நடைபெறும் துடுப்பெடுத்தாட்ட விழா இம்முறை திடீரென முதல் நாளுக்கு (25 - 05 - 97) மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இம்மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு தமிழர் துடுப்பெடுத்தாட்டவிழா எம்மினத்திற்குப் பெருமையைத் தேடிக் கொடுத்திருப்பதுடன், தமிழர்கள் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதற்கும் இவ்விழா சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது. ஏ

www.tamilarangam.net



# தமிழீழ தேசியப்பணியில் அனைத்துலகத் தமிழ் மக்கள்

## ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர் கலந்துகொண்ட எழுச்சி ஊர்வலங்கள்

### யேர்மனி

யேர்மனியின் நான்கு நகரங்களில், உலகத் தமிழர் இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு மேதின ஊர்வலங்கள் நடாத்தப்பட்டன. பேர்லின், கம்பேர்க், டுசுல்டோவ், பிராங்போட் ஆகிய நகரங்களில் நடாத்தப்பட்ட இந்த ஊர்வலங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டு தமிழீழம் மலர்வதற்கான அவசியத்தைக் கோஷங்களாக எழுப்பினர். சிங்கள இனவாத அரசின் இனப்படுகொலை நடவடிக்கைகளை யேர்மனிய மொழியில் எழுதி பதாதைகளாகப் பிடித்துக்கொண்டு சிறுவர் சிறுமிகளும் தாயக மண்மீது தாம்கொண்ட பற்றினை வெளிப்படுத்தினர். "எங்கள் தலைவர் பிரபாகரன்", "எங்கள் நாடு தமிழீழம்", "எங்கள் இராணுவம் தமிழ்ப்புலிகள்", "சிங்கள இராணுவம் வெளியேற வேண்டும்", "அப்பாவித் தமிழரைக் கொல்லாதே" ஆகிய வசனங்களை யேர்மனிய மொழியில் கோஷித்தவண்ணம் உணர்வு வெளிப்பட தமிழர் பங்குபற்றிய ஊர்வலமாக இது அமைந்தது.

"எமது பணி உலகின்முன் ஈழத்தமிழரின் உரிமைகள் மறுக்கப்படுவதையும் மனிதக் கொலைகள் அரசின் அனுசரணையுடன் செய்யப்படுவதையும் அரச பயங்கரவாதம் தமிழினத்தை அழிக்கும் நோக்குடன் விரிவு படுத்தப்படுவதையும் பிரச்சாரப் படுத்துவதே" என்றும், பட்டினிபோட்டு அப்பாவி மக்கள் கொல்லப் படுவதும் – மருந்தும் உணவும் மறுக்கப்பட்டு, ஒரு இனம் கொன்றொழிக்கப்படுவது உலகத்தின் முன் நம்மால் மட்டுமே நிரூபிக்க முடியும் என்றும், தமிழீழப் பிரச்சனை உலகப் பிரச்சினையாக கொண் டுவர நமது பிரச்சாரமும் ஆக்கபூர்வமான வேலைத்



திட்டமுமே தேவை எனவும் ஊர்வலத்தின் முடிவில் மக்களுக்குச் செய்தியாக கூறப் பட்டது. உணர்வுடனும் – தமிழீழ மக்களின்மேல் பாசம் கொண்டும் கலந்துகொண்ட மக்களின் மண்பற்றை இந்த ஊர்வலம் வெளிப்படுத்தியது. ✷

## அன்னை பூபதியின் நினைவு நிகழ்வுடன் சித்திரை மாலை

### நெதர்லாந்து

தமிழர் கலை, பண்பாட்டுக் கழகம் நெதர்லாந்துக் கிளையினரால் வருடம் தோறும் சித்திரை மாதத்தில் செஞ்சோலை நிதிக்காக நடத்தப்படும்



சித்திரை மாலை நிகழ்ச்சி, அன்னை பூபதியின் நினைவு நாளாகிய 19.04.1997 சனிக்கிழமை அன்று அன்னையின் நினைவுடன் ஔடன்பொஸ் (Oudenbosch) நகரில் நடாத்தப் பட்டது. பிற்பகல் சுமார் 4.15 மணிக்கு அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகிய இன் நிகழ்ச்சிக்கு, நெதர்லாந்தின் பல மாகாணங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து, அன்னை பூபதியின் திரு உருவப் படத்திற்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நெதர்லாந்துக் கிளைப் பிரதிநிதி திரு. போல் அருமைநாயகம் அவர்கள் குத்து விளக்கேற்றி மலர் வணக்கம் செலுத்தினார். இதனைத் தொடர்ந்து மக்களும் அன்னை பூபதிக்கு மலர் வணக்கம் செலுத்த, நிகழ்ச்சி தொடர்ந்தது.

தமிழர் கலை, பண்பாட்டுக்கழக நெதர்லாந்துக் கிளைப் பொறுப்பாளர் திரு. இளவரசன் ஆற்றிய வரவேற்புரையைத் தொடர்ந்து நெதர்லாந்தின் பல மாகாணங்களிலிருந்தும் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுவர் நடனம், நாட்டிய நடனம், பரத நாட்டியங்கள் நடைபெற்றன. Zuid Holland ஐச் சேர்ந்த தமிழினி கிளிற்ரஸ், நிலானி சிவக்குமார், சுவாதி கௌரிதாஸ், அபிராமி கௌரிதாஸ், கீர்த்தனன் முரளி, சதீஸ் முரளி அவர்களின் சிறுவர் நடனங்களும், Zuid Holland ஐச் சேர்ந்த பிரியதர்சினி அருமைநாயகம் அவர்களின் பரதநாட்டியமும், Utrecht ஐச் சேர்ந்த அருண்ஜா சிவராசா, மகேந்திரி சவிரிமுத்து, சமந்தா சவிரிமுத்து அவர்களின் சிறுவர் நடனமும், Noord Holland ஐச் சேர்ந்த உசா சபா, சுகன்யா செல்வராசா, டிவானி ஆந்திரே, லெபினா ஆந்திரே, தாரணி குலம், அனித்தா குலம் அவர்களின் நாட்டிய நடனமும், Noord Holland ஐச் சேர்ந்த சபிதா சபா அவர்களின் நாட்டிய நடனமும் சிறப்பாக நடபெற்றது.

அதனைத் தொடர்ந்து, நெதர்லாந்தின் பல பாகங்களிலுமிருந்து கலந்து கொண்ட கலைஞர்களின் 'அவலம்' எனும் தாளலயம், புலம் பெயர்ந்து வாழும் மக்களின் அவலங்கள், சில பிற்போக்குத் தன்மைகளை தெளிவாக உணரவைத்தது. இடைவேளைக்கு முன் நிகழ்ச்சியாக திரு. இளவரசனின் நெறியாள்கையில் உருவான "எந்தையும் தாயும்" எனும் நாடகம் அரங்கேறியது. மக்கள் மனதை மிகவும் தொட்ட இந்நாடகம், எமது ம்க்கள் எமது மண்ணில் படும் சொல்லெணாத் துயரங்கள், அவர்களின் மன உளைச்சல்கள்– வேதனைகள் ஆகியவற்றை அப்படியே படம் பிடித்துக் காட்டியது.தமிழர் ஒருங்கிணைப்புக்குழு நெதர்லாந்துக் கிளையின் நிதிப்பொறுப்பாளர் திரு. ரங்கன் அவர்கள் தனதுரையில், எமது தாயக மண்ணில் சமகாலத்தில் புலம் பெயர் வாழ் மக்கள் ஆற்றவேண்டிய பங்களிப்புக்கள், மற்றும் ஒரு இனம் தனிநாட்டைக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் என்பவற்றை எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்கு பற்றிய சிறார்களுக்கு திரு. போல் அருமைநாயகம் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டது. சித்திரை மாலையின் இறுதி நிகழ்ச்சியாக தமிழர் கலை, பண்பாட்டுக் கழக இசைக்குழுவினரின் இசைவிருந்து இடம் பெற்றது. இறுதியில் இசைக்குழுவின் அனைத்துப் பாடகர்களும் சேர்ந்து, ''நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்'' எனும் பாடலைப் பாடி மக்கள் மனதை நம்பிக்கையால் நிறைத்து நிகழ்ச்சியை நிறைவு செய்தனர். ✷



1-5-97 இல் சுவிஸ் சூரிச்சில் நடைபெற்ற மே தின ஊர்வலத்தின் ஒரு பகுதி.

## நெதர்லாந்து பாராளுமன்றம் நோக்கி அணிதிரண்ட மக்கள்

கருத்தரங்கில் குமார் பொன்னம்பலம், அருட்தந்தை இம்மானுவேல் உரை

''சிறிலங்காவில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழலாம்'' என்று நெதர்லாந்து அரசால் தமிழர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் மனிதாபிமானமற்றது, என்பதை நெதர்லாந்து அரசுக்



கும் – மக்களுக்கும் தெரியப்படுத்துவதற்காக நெதர்லாந்திலுள்ள பல தமிழ் அமைப்புக்கள் ஒருங்கிணைந்து 'தமிழர் ஐக்கிய ஒன்றியம்' என்ற அமைப்பின் கீழ் 9-4-97 புதன் கிழமையன்று, டென்காக்கில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடாத்தியுள்ளன.

சிறிலங்காவில் சந்திரிகாவின் இனவாத அரசால் நடாத்தப்படும் தமிழினப் படுகொலைகளினாலும்,

தொடர்ச்சி14ம் பக்கம்...



19-4-97 இல் சுவிஸ் லவுசான் மாநிலத்தில் நடைபெற்ற அன்னை பூபதி ஞாபகார்த்த எழுச்சி விழாவில் நடந்த 'எங்கள் தேசம்' என்ற நாடகத்தின் ஒரு காட்சி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலக அரங்கு

## கொங்கோ - சயர் - கொங்கோ ஜனநாயகக்குடியரசு

''படுத்த பாயைச் சுருட்டிக் கொண்டு எடுத்தாண்டி ஓட்டம்'' என்ற அந்த நாடோடிப் பாடல் சொல்கின்றபடி நேற்றைய சயரின் சர்வாதிகாரி மபூட்டு 17-05-97 அன்று இரவோடிரவாகத் தலைமறைவானன்.

ஆபிரிக்காவின் மத்திய பகுதியில் இந்தியாவின் நிலப்பரப்பை ஒத்த அளவில்



சர்வாதிகாரி மபூட்டு, சயரின் அமெரிக்கத் தூதுவர் றிச்சார்ச்சனுடன் கைகுலுக்க முயற்சிக்கையில்...........

இயற்கைச் செல்வங்களான மிகப் பெரிய செப்புச் சுரங்கங்களைக் கொண்ட நாடு சயர். இந்த நாடும் ஏனைய ஆசிய, ஆபிரிக்க நாடுகளைப் போல விதிவிலக்கில்லாமல் மேலைத்தேய அடிமை எஜமானர்களால் பல நூற்றூண்டுகளாக அடிமைப்படுத்தி வைத்திருக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இதன் எஜமானன் பெல்ஜியம் அரசு.

1965 களில் இராணுவச் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய சர்வாதிகாரி மபூட்டு, எல்லா வகையான ஆட்சி அதிகாரங்களையும் தன்னகத்தே குவித்து வைத்துக் கொண்டு பல கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்துக்களைத் தன் பெயரில் (சுவிஸ் வங்கியில்) இரகசியமாகச் சேர்ப்பதிலும் அதனை அதிகாரத்துடன் அனுப விப்பதிலுமே தனது ஆட்சிக் காலத்தைப் பயன்படுத்தி வந்தான். இதற்கு மேலைத்தேய நாடுகளான அமெரிக்கா, பெல்ஜியம், பிரான்ஸ் என்பன 'புதிய ஒழுங்கு' என்ற நவீன சுரண்டல் கொள்கைக்கு ஏற்ப மபூட்டுவிற்கு ஆதரவைக் கொடுத்து வந்தது. இந்த மேற்கு நாடுகளின் அரசியல் ஆதரவிற்குப் பிரிதியுபகாரம் செய்யும் வகையிலும் தனது அரசியல் சுபபோகங்களைப் பேணிக்கொள்ளும் வகையிலும் சர்வா திகாரி மபூட்டு, தனது ஆட்சி அதிகாரத்தை ஆபிரிக்காவின் சமதர்ம சோசலிச மற்றும் கம்யூனிசிய கொள்கைச் செயற்பாடுகளை முறியடிப்பதன் மூலம் அமெரிக்காவிற்கு ஆதரவாக நடந்து கொண்டான். இதன்படி அங்கோலா, சூடான், கொங்கோ, எத்தியோப்பியா போன்ற நாடுகளில் சோசலிச சார்பு ஆட்சிகளைக் கவிழ்ப்பதிலும் அரசியல் ஸ்திரமின்மையை ஏற்படுத்துவதிலும் கம்யூனிசிய எதிர்ப்புப் பயங்கரவாதிகளை வளர்ப்பதிலும் அமெரிக்கா நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வந்தது. இது பல ஆண்டுகளாக இந்நாடுகளின்

### சயர் (கொங்கோ)

மக்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்க இடமளித்ததுடன், விடுதலைப் போராட்டங்களை மழுங்கடிப்பதற்கும் இடமளித்தது.

இதேவேளை, சயரில் மபூட்டுவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மக்கள் ஆங்காங்கே அடிக்கடி கிளர்ச்சிகள், கலவரங்கள், அரசியற் போராட்டங்கள் போன்றவற்றில் ஈடுபட்டுக்கொண்டு வந்தனர். இவை அனைத்தும், இராணுவ அடக்குமுறை மூலமும் அரசியற் படுகொலைகள் மூலமும் அடக்கி ஒடுக்கப்பட்டன. கொல்லப்படாத - கைது செய்யப்படாத தலைவர்கள், அண்டை நாடுகளுக்கு ஓடிச்சென்று தப்பித்துக் கொண்டனர்.

சயர் மக்களின் வாழ்க்கைத்தரம் அடிமட்டத்தைத் தொட்டது. தொழிற் சாலைகள், செப்புச்சுரங்கங்கள் அனைத்தும் படிப்படியாக கைவிடப்பட்டு பின்னர் மூடப்பட்டு வந்தன. பாடசா லைகளை நடத்த வழியிருக்கவில்லை. வைத்தியசாலைகளில் தடுப்பூசி கூட போட மருந்துகள் இருக்கவில்லை. மாறாக, மக்கள் கிளர்ச்சியில் ஈடுபடாமல் இருக்கமட்டும் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனாலும், 30 வருடங்களிற்கு மேற்பட்ட மேலைத்தேய ஆதரவுடன் கூடிய மபூட்டுவின் சர்வாதிகார அடக்குமுறை நீண்டகாலத்திற்கு மக்களை கட்டுப்படுத்த உதவவில்லை. நாடெங்கிலும் அரசிற்கு எதிரான போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கியது. நாடு ஸ்திரமற்ற நிலையை கடந்து சரியத் தொடங்கியது. இதேவேளை, மார்க்சிசப் புரட்சியாளனாகப் போராட்டங்களை மேற்கொண்டு, பின்பு நாட்டை விட்டுத் தப்பி ஓடிய 'கபிலா', காலம் ஏற்படுத்திய மாற்றங்களால் இடதுசாரிக் கொள்கைகளை ஒதுக்கி வலதுசாரிக் கொள்கைகளுடன் மபூட்டு வின் ஆட்சிக்கெதிரான வேலைத் திட்டங்களில் இறங்கி போர்வீரர்களை உருவாக்கி, அத்துடன் இரவல் போர்வீரர்களையும் அண்டைய நாடுகளில் இருந்து பெற்று படையெடுப்பிற்குத் தயாராகவிருந்தார். மபூட்டுவின் அடக்குமுறைகளுக்கு நேரடி ஆதரவு களைக் கொடுத்துக் கொண்டிருந்த அமெரிக்க உளவு நிறுவனம் (CIA) சயரின் அரசியல் நிலைமை மிக வேகமாக மாறிக்கொண்டு வருவதை அவதானித்தது. "அரசியலில் நீண்ட கால நண்பனும் இல்லை. நீண்டகால பகைவனும் இல்லை. நிரந்தர நலன்களே உண்டு" என்பதற்கிசைய அரசியல் - இராணுவ - பொருளாதார - மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக உடலியல் ரீதியாக இறந்துகொண்டிருந்த 30 வருடகால மபூட்டுவின் நட்பைக் கைவிட்டு, அந்நாளில் 'பயங்கரவாதியாக' முத்திரை குத்தப்பட்டு, இன்று மாபெரும் சக்கியாக வளர்ந்திருந்த கபிலாவை அமெரிக்கா ஆதரிக்கத் தீர்மானித்தது.

தாக்குதலுக்குத் தேவையான ஆலோ சனைகள், இராணுவ- ஆயுத-தளபாடங்களெல்லாம் இரவோடிரவாகத் தாக்குதலுக்குத் தயாராகவிருந்த கபிலாவின் படையணிகளுக்கு அமெரிக்



ஆட்சியைக் கைப்பற்றிய கபிலா முபூட்டு

காவால் தாராள மனப்பான்மையுடன் வழங்கப்பட்டன. தாக்குதல் தொடங்கியது. எவ்வித தடையோ, எதிர்ப்போ இன்றி 1000 மைல்களுக்கு மேற்பட்ட எல்லைகள் கபிலாவின் படையணிகளால் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. இரண்டு மாதங்களின் பின், நாடு முழுவதையும் கைப்பற்றிய கபிலாவின் படைகள் தலைநகர் கின்சாசாவை முற்றுகையிட்டது.

## ''அரசியலில் நீண்ட கால நண்பனும் இல்லை. நீண்டகால பகைவனும் இல்லை. நிரந்தர நலன்களே உண்டு''

இச்சந்தர்ப்பத்தில், அமெரிக்கா மீண்டும் விழித்துக் கொண்டது. தலைநகரையும் கபிலாவின் படைகள் இலகுவாகக் கைபற்றிக்கொண்டால் தனது மேலாதிக்கத்தை கபிலா மீது திணிப்பது சற்றுச் சிரமமாகவிருக்கும் என்பதால், "கபிலா- முபூட்டு பேச்சுவார்த்தை" என்ற நாடகத்தை அரங்கேற்றி தலைநகர் கின்சாசாவை பேச்சுவார்த்தைக் கூடாகத் தங்கள் தலைமையில் மீட்டெடுத்துக் கொடுக்க அமெரிக்கா திட்டமிட்டது. இப்பேச்சுவார்த்தைகளின் பின்னர் கபிலாவைப் பதவியில் அமர்த்தினால் தங்களது தேவைக்கேற்ப கபிலாவை கைபொம்மையாகப் பாவிக்க உதவியாக இருக்குமென எதிர்பார்த்தது. பேச்சு வார்த்தைகள் தொடங்கியது. காலங் காலமாகப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த மக்கள் பார்வையாளராகக்கப்பட்டனர். பேச்சுவார்த்தைகள் கட்டங்களாகப் பிரித்து நடந்து கொண்டிருந்தன. இதேவேளை, மபூட்டு இந்நாடகத்தில் நடித்துகொண்டே மூட்டை முடிச்சுக்களைக் கட்டுவதில் ஈடுபட்டிருந்தான். நிலமைகளும் தப்பித் துக்கொள்ள வசதியாகவே இருந்தது. மபூட்டு தலைமறைவானான் (மொறொக் கோவிற்கு என்று நம்பப்படுகிறது). அமெரிக்கா, புதிய நண்பனுடன் பழைய வேலைத்திட்டங்களை நடை முறைப்படுத்துவதில் மிக அவசர அவசரமாக ஈடுபட்டுக் கொண்டி ருக்கிறது. ......பாவம் மக்கள். ✷

- நாவுக்கரசன் -

"அரசியலில் நீண்ட கால நண்பனும் இல்லை. நீண்டகால பகைவனும் இல்லை. நிரந்தர நலன்களே உண்டு" என்பதற்கிசைய அரசியல் - இராணுவ - பொருளாதார - மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக உடலியல் ரீதியாக இறந்துகொண்டிருந்த 30 வருடகால மபூட்டுவின் நட்பைக் கைவிட்டு, அந்நாளில் 'பயங்கரவாதியாக' முத்திரை குத்தப்பட்டு, இன்று மாபெரும் சக்கியாக வளர்ந்திருந்த கபிலாவை அமெரிக்கா ஆதரிக்கத் தீர்மானித்தது.

www.tamilarangam.net






## போதுமொரு கால்

ஊரிழந்து, உழைப்பிழந்து, உறவிழந்து, உருக்குலைந்து
பாரு எங்கள் நிலைமை எனப் பரிதாபம் கோரவில்லை
மாறுபடாச் சிரிப்போடு மண்மைந்தர் மனம் திறந்தோம்!
தேறுகிறோம் நாளையொரு விடியல்தரும் சுகத்தை எண்ணி.
விடியல்தரும் நிலத்திலொரு கால்பதிக்க போதுமிங்கே,
குடிகளதன் குறையகற்ற போதுமிரு கரமுமிங்கே,
கூறுகின்ற எம்முடலில் குறைகளது இருந்தபோதும்,
ஊனமில்லை, உளமதிலே யாருமெதைப் பறித்திடினும்
-தமிழீழம் பறியவிடோம்!

கோசல்யா சொர்ணலிங்கம்,
யேர்மனி

## புன்னகை

காலிழந்த கவலை
கண்களில் தெரியலையே!
ஏனிந்த மகிழ்வு!
வானெழுந்த 'பறவை'
வட்டமிட்டுக் கொட்டமுன்
தான் சரிந்த கதை
ஏன்? உமக்கும் தெரியுமா?

அகிலா,
இத்தாலி



## விதையாய் உள்ளோம்

காலம் செய்த கோலம் என்று
கண்ணீரால் வியக்கின்றீரா?
வேண்டாம்.
நாளை நாம் என்செய்வோம் என்று
நல்மனதில் நினைக்கின்றீரா?
வேண்டாம்.
போர்கொண்டு புதிய பூமி செய்யும்
புனிதர்களின் பாதையிலே
வேளை வரக்காத்திருக்கும்
விதியை வெல்லும் விதையாய்
உள்ளோம்!

சித்திரா சுதாகரன்
யேர்மனி.

## ஒரு சிறு கை கொடுங்கள்

காலின்றிக் கையின்றி
களமாடும் கரும்புலி வீரரைக்
கண்ணெதிரே கண்டவர் நாம்.
மனம் கலங்குவோமா தினம்
ஒருகால் போனதையிட்டு.
கடல்கடந்தும் ஈழமண் நினைக்கும்
நீங்கள்
ஒரு சிறு கை கொடுத்தால்,
தமிழீழ மண்ணில் நாங்கள்
நிலைப்போம்.

மகாதேவன் தேவன்ரவி,
யேர்மனி

## இலைதுளிர்....... காலமிது!

வண்ணமுகில் படர்ந்த வானமதிலே......!
எண்ண முகில் அடர்ந்த தம்பியர் மூவருமே......!!
-வாருங்கள்,
துள்ளிக்குதித்து பள்ளிக்குச் செல்லும் பிஞ்சுகளே!
மூர்க்கத்தனத்தை அழிக்க முன்னிற்கும்
-மும்மூர்த்திகளே!!
மூவரும் முன்செய்த பாவம்தான் என்னவோ?
இலைதுளிர் காலமிது........!
துளிர்க்கும் மொட்டுக்களே......! நடவுங்கள்,
எறிகணை எய்தியவனை எதிர்க்கப் பாயுங்கள்.

உடுத்துறை சுரேஷ்பூபாலு,
ஜேர்மனி.

## இழந்துவிட்ட அவயவங்கள் இனி முளைக்கும்

நேற்று..... கள்ளமில்லா வெள்ளை மனதுடன்
பள்ளிசென்றோம் கல்வி கொள்ள
நீ காலனாய் வந்தெமது காலினைப் பறித்து
ஈழத்தேவையினை உணரவைத்தாய்
இன்று..... சூரியத்தலைவனது சுதந்திரப்படை
சேர்வோம்!
இழந்துவிட்ட அவயவங்களும் இனி
முளைக்கும்
நாளை...... சுதந்திரப் போரினிலே களமாடி
மடிந்தாலும்
இன்னுமோர் உருவோடு நாம் முளைப்போம்.

சாந்தம், நோர்வே.

## ஊனம் உடலில்தான்....

கள்ளம் கபடமின்றி
சிரிக்கும் பிஞ்சுகளே!
கால்கள் போனபின்னும்
கலங்காத குஞ்சுகளே!
ஊனம் உடலில்தான்
உளத்தில் இல்லையென்று,
கூறும் உம் திடம் கண்டும்
குமுறுது எம் நெஞ்சங்களே!

சந்திரவதனா செல்வகுமாரன்,
யேர்மனி.

## எதிர்பாராமல் நடந்ததல்ல!

வீதியைக் கடக்கும்போது நடந்த
விபத்தல்ல........
'போலியோ' வந்து பொய்க்கால்
போடவில்லை!
நீதியற்ற சந்திரிகா ஏவிய
விமானங்கள்
எம் காலைப் பறித்தன: ஆயினும்
நாதியற்று நடுத்தெருவில்
நிற்கவில்லை
தேசியத்தின் தலைவர் ஆக்கிய
சோலையில்
பூவிரிந்ததுபோல் சிரிக்கின்றோம்!

சி. பாபு
பிரித்தானியா

01-05-97,
ஒஸ்லோ

மதிப்புக்குரிய களத்தில் ஆசிரியர் அவர்கட்கு!
களத்தில் பத்திரிகையினை வாசிக்கின்ற பல்லாயிரக் கணக்கான வாசகர்களுள் நானும் ஒருவன் என்பதனை மிகப் பெருமையுடன் கூறிக்கொண்டு இதற்காக அயராது உழைக்கின்ற பத்திரிகைக் குழுவினருக்கும் எனது மனங் கனிந்த நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். "உங்கள் கருத்துக்கள்"" பக்கத்தில் தங்களினால் வெளியி டப்பட்டிருந்த புகைப்படத்திற்கு என்னால் இயன்றவரை ஓர் கவிதையினை எழுதி இத்துடன் இணைத்து அனுப்பியுள் ளேன். இக்கவிதை பிரசுரிக்கத் தகுதியானது எனத் தாங்கள் கண்டறியும் பட்சத்தில் இதனையும் பிரசுரிப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

வணக்கம்,

நட்புடன்,
சாந்தம்

ஜேர்மனி, 21-04-97.

மாண்புமிகு 'களத்தில்' ஆசிரியர் அவர்கட்கு!
புதிய வாசகராகிய சுரேஷ்பூபாலு ஆகிய நான் எழுதிக்கொள் வது, ஆசியாக் கண்டத்தை விட்டு ஐரோப்பா கண்டத்தினுள் கடந்த வருடம் மார்கழி மாதமே நுழைந்தேன். தங்களின் பத்திரிகை அதாவது எங்களின் பத்திரிகை இவ்வளவு திறம்பட நடத்துவதை இட்டு மகிழ்கிறேன். எனவே மேன்மேலும் எமது தாய் மொழியை யும் தமிழீழ நிகழ்வுகளையும் எங்களுக்கும் மற்றோருக்கும் தந்துதவ வேண்டுகிறேன். அத்துடன், மேன் மேலும் வளர்ச்சியுற என்னால் முடிந்த ஆக்கங்களைத் தருவேன்.

வணக்கம்.

இங்ஙனம்,
சுரேஷ்பூபாலு,உடுத்துறை.

**ஆக்கங்கள் அனுப்பியோரின் விபரங்களை நன்றிகூர்தலுடன் பிரசுரிக்கின்றோம்:**

ஏகாம்பரம் - பிரித்தானியா, முல்லையூர் திருமதி பாலா - யேர்மனி, நாவல் அருண் -யேர்மனி, க.கிருஷ்ணராஜன் - யேர்மனி, சந்தி செல்வகுமாரன் - யேர்மனி, நிலாவெளி கைலை - பிரான்ஸ், ஜெ.லக்ஸாயினி - யேர்மனி, காவலூர் வசந்த் - யேர்மனி, சு. குகதாசன் - பிரான்ஸ், தென்திசையான் - பிரான்ஸ், சுசித்தா - சுவிஸ், சோமு - யேர்மனி, குமுதா - யேர்மனி, எஸ். ரி. சம்பந்தன் - யேர்மனி, செ.பிரவின் - இலண்டன், சி. விஜயரூபன் - நோர்வே, புதுவை கிருபா - யேர்மனி, ம. சிறீரஞ்சன் - யேர்மனி, எஸ். சுரேஸ் - யேர்மனி, பாரதிதாசன் - யேர்மனி, வல்வையூர் தேவகிகுமார்-சுவிஸ், வாகுபிகா -யேர்மனி, சங்கர் - சுவிஸ், அமலா ஜெயந்தன், கிருபாஞ்சலி, நா. ஞானகுரு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# என் பிரிய சுகியே!

ஓ. . . என் சுகி!
எதிலும் நீ வேகந்தான். . .
அதற்காக. . .இதிலுமா?

எங்கள் பள்ளி வயதை புரட்டும்படியாய்
இது ஏன் நிகழ்ந்தது?
றோ. த. க. பாடசாலைத் தோட்டத்தில்
பயிர்களுக்கு நீர் வார்த்தோம்
இலைகளைக் கடித்து நாசம் செய்த
கிளிவெட்டி, பாய்ந்து பொத்திய
என் கைகளுக்குள் அகப்பட்டு
நசிந்தது.
உன் இதயமும் நீயும் மிக மென்மை.
அதனால்,
ஒரு வாரம் மட்டும்
என்னை வெறுத்திருந்தாய்.
பசியும் சிரிப்பும்.. . . யாவும்
மறந்தேன் உன்னைத் தவிர.
“அரக்கி“ என்றாயே!
என் செயலுக்காய் வெட்கப்படவில்லை, எனினும்
உன் கவலைக்காய் வருத்தப்பட்டேன்.
மீண்டும் சேர்வதற்கு
வற்புறுத்தலோ மத்தியத்தமோ
எங்களுக்கு தேவைப்படவில்லை.
நட்பு – அந்த ஈர்ப்புக்கு – அடிமையானதும்
அன்றைய பொழுதுகளின் ஆக்கிரமிப்பும்
நீ பிரிந்த துயரமும்
என்னை வதைக்கின்றன.

இன்றும் உன் உருவம் மனத்தட்டில்
பார்வை, தொடுகை, உணர்ச்சிக்
கதிர்களால்
தேக்கி வைக்கப்பட்டுவிட்டதால்
என் கணனி திறக்கும் வேளையெல்லாம்
வந்து போகிறாய்.
றோஜா இதழ்களால்
அழகழகாய் செய்யப்பட்ட பொம்மை நீ.
செவிக்கின்பம் தருகின்ற மொழி நளினம்.
நின் அழகின் நிஜத்தை வெளிப்படுத்த
என்னிடம் ஆற்றலில்லை
ஆனால், ஆணோ – பெண்ணோ
உன்னில் விழி பதித்தவர்
பிரிவாற்றாமை
காணக் கவலை தரும்.

எப்போதும் என்செயல்களைக்
கடிந்துகொள்வாய்.
நீ அப்படித்தான்.
ஒரு நாள்,
ஊரைவிட்டு மறைந்துபோனேன்.
மனமும் உடலும் வலிமைபெற்று
மீண்டும் வந்தபோது. . .
என் சிற்றூர் சூழ,
நீ மட்டும் பேச மறுத்து
தூர இருந்தாய்.
உனை நெருங்க அஞ்சினேன்.
பின் அழுதாய். நான் அழுதேன்
ஆரத்தழுவினோம்.
அணுவணுவாய் ரசித்தாய்.
வியர்வையும் புழுதியும் படிந்த உடைகளைத்
திருத்திவிட்டாய்.

விழிகளில் எவ்வளவோ காட்டினாய்!

என் சுகி “சொல்லடி“
என்னைத் தடுத்தது நீயல்ல,
உன் பண்பு மிகுந்த பெண்மை.
இன்று “டி“ சொல்ல வாஞ்சைப்படுகிறேன்.
புதிதாய் கருதாதே!

என் பிரிய சுகியே!
எங்கே உன்னை மறைத்தானடி?
பூஜைக்கு காத்திருந்த பூவே!
விலங்கொன்று
கடித்து, குதறி. . . .?
எங்கோ. . . .? குழிக்குள்
புதைத்து. . . .?
கற்களும் முட்களும் நிறைந்த
புதர்களுக்குள். . .?

என் தோழி!
உன் உடலில்,
பஞ்சினை நகர்த்தும்
துளி தென்பைப் பெறு,
விழிமடல் உயர்த்து,
ஒரு தடவை பார். ஒரே ஒரு
தடவை. . .
விலங்குபோன திசையை மட்டும்
ஜாடைகாட்டு, அந்த
விலங்குபோன திசையை மட்டும். . .!

**வதனிலா - இலண்டன்.**




# ஈழத்தமிழனின் எண்ண அலைகள்

முத்துறை திரைசூழு மின் நாட்டினில்
முந்திய குடியாகுந் தமிழர்
கத்திக் கத்திக் காலங் கடத்தலின்
காரணஞ் சொல்லிங் கர்த்தாவே போற்றி

சிங்கள வர்கள் பேரினம் என்பதால்
செந்தமிழர் சிற்றின மாவதோ?
சிங்களர் சொல்லுந் தட்டி நடந்ததோ?
சிங்களங் கற்றுத் தேறாத குற்றமோ?

சிங்கச் சின்னக் கொடிதரும் ஆட்சியை
சிந்தை போற்றி நடக்காத தாலோ?
செங்கை கொண்டு வாய்பொத்தித்
தினம் தினம்
சேவை செய்ய மறுத்த குற்றமோ?

காமினி பெண் பொடி மெனிக்காவையும்
காதலித்துக் கரம் பிடிக்காததோ?
காமினி தொழும் புத்த மதத்தினை
கைக்கொண்டு நடவாத குற்றமோ?

பாடங்கள் தேர்வில் பாகுபாடும் பார
பட்சமான நடைமுறை தானும்
வேடங்கள் போடும் வேலையின்
திட்டமும்
வேத மாய்க்கொண்டிடாத குற்றமோ?

கைக்கூலி களுக் காதரவாகியே
காணும் பொய்யின் நடைமுறையேற்ற
கைக்கெட்டா பெரும் இப்புனிதத்துவம்
காட்டும் ஞானியைப் போற்றாத
குற்றமோ?

பேச்சிலே சமாதானங்கள் பேசிடும்
பேச்சாளரோடிணங்கியே சென்று
ஆச்சாரமாகி அடித்த பக்கஞ் செல்லும்
ஆள்வோரைப் பின் பற்றாத தாமோ?

நீதிக்காகவே போரிட வெண்ணியே
நெஞ்சுரங் கொண்டபேருடன் சேர்ந்து
நீதியும் மீதென் றோதியே நிற்பது
வாதிடும் வல்லோர்க் காகாததாமோ?

பிடித்த எந்த முயலுக்கும் மூன்றுகால்
பேரமேதென்ற தத்துவஞ் சொல்லி
குடியாட்சி கோருவோரோடு
கூடியே நடவாதது குற்றமோ?

எத்தனை யாண்டு இத்துன்பமோ?
இன்னும்
ஏன் எங்கள் முகம் பாராததோ தேவா?
அத்தனையும் தமிழீழம் பெறுவதை
ஆணித்தரம் ஆக்குமே மங்களம் .

**காத்தான்குளம் - செபமாலை**

www.tamilarangam.net

# லண்டனில், ஐரோப்பிய ரீதியில் நடைபெற்ற இரு பெரும் விழாக்கள்

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் (பிரித்தானியக்கிளை) உதைபந்தாட்டப் போட்டி - 97







வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற நாவாந்துறை விளையாட்டுக் கழக வீரர்கள்







இரண்டாம் இடத்தைப் பெற்ற சேர்பிற்றன் விளையாட்டுக் கழக வீரர்கள்





## ஐக்கிய தமிழர் ஒன்றியத்தின் (பிரித்தானியா) யாழ்முரி - 97








T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Kornquader Weg - 12
7007 Chur, Switzerland
Tel: 081-252-91-29

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224